பதினாறு பக்கங்கள் | விலை ரூபா நான்கு

சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
வீடியோ
விஹோன்ஸ்
353C, மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்தி.

வார
முரசொலி

For Quality
Video Filming
VIDEO
VIHONS
353C, Clock Tower Rd,
Wellington Junction

முரசு 03 ஒலி 192 ஞாயிற்றுக்கிழமை 23 - 07 - 1989 ஆடி 08 துல்ஹஜ் 19

# பிரேமாவின் 19-ம் திகதி கடிதம்

# புதிய திருப்பத்தை ஏற்படுத்தும்

## சில படை பிரிவுகள் விலகினால் பேச்சுவார்த்தைக்கு தயார்

**இம் மாதம் 29-ம் திகதிக்கு முன்னர் இந்தியப்படையில் ஒரு சில படைப்பிரிவுகள் வெளியேறினால் இலங்கையும் இந்தியாவும் இது பற்றி பேச்சு நடாத்த வழியுண்டு என ஜனாதிபதி பிரேமதாஸ இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி பிரேமதாஸ பிரதமர் காந்திக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், படைவிலகும் நாள் பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை என யு. என். ஐ. செய்திகள் கூறுகின்றன.

கடந்த புதன்கிழமை கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் மல்ஹோத்திரா புதுடில்லி சென்ற போது இக்கடிதத்தை கொண்டு சென்றது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 29க்கு முன்னர் இந்தியப்படை விலகவேண்

→ 15ஆம் பக்கம் பார்க்க

## கிராமசேவையாளரை மக்கள் தேடுகிறார்கள்

இளவாலைப் பகுதியில் உள்ள கிராமசேவையாளர் ஒருவரைத் தேடி பொதுமக்கள் தினமும் அலைகிறார்கள். இந்த கிராம சேவையாளர் அலுவலகத்துக்கு வந்த சில மணிநேரத்தால் வெளியே சென்றுவிடுவாராம். இதனால் அடையாள அட்டை, உணவு முத்திரை, நற்சாட்சிப் பத்திரம் போன்ற முக்கிய அலுவல்களுக்காக

— 15 ஆம் பக்கம் பார்க்க

உமாமகேஸ்வரன் மரணம் தொடர்பாக

## யாழ்ப்பாணம்; மட்டக்களப்பில் ஹர்த்தால் அனுஷ்டிப்பு

புளொட் இயக்கத் தலைவர் உமாமகேஸ்வரன் கொலை செய்யப்பட்டதை கண்டித்து நேற்று யாழ்ப்பாணப் பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

காலை சில கடைகள் ஒற்றைக்கதவில் திறந்து காணப்பட்டன. எனினும் பிற்பகல் கடைகள் யாவும் மூடப்பட்டுக் காணப்பட்டன. மினிபஸ்

→ 15 ஆம் பக்கம் பார்க்க

## உமா கொலைக்கு சமசமாஜக் கட்சி கண்டனம்

இலங்கை சமசமாஜக் கட்சி, புளொட் இயக்கத் தலைவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கையில் கொலை செய்யப்பட்டதற்கு கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 1983 ஜூலை 23 படுகொலைகள் துக்கம் அனுஷ்டிக்க கோரிக்கை

1983 ஜூலை 23 இல் நடைபெற்ற வெலிக்கடைப் படுகொலைகளை நினைவு கூர்ந்து இம்மாதம் 24-ம் திகதி முதல் 29-ம் திகதி வரையும் வீடுகளிலும், கடைகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விட்டு துக்கம் அனுஷ்டிக்குமாறு ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்த

→ 15 ஆம் பக்கம் பார்க்க

## கல்முனையில் மோதல்

கல்முனையில் 'ஜிகாத்', 'இக்பால்' என்ற முஸ்லிம் தீவிரவாத இயக்கங்களுக்கிடையே கடந்த வியாழக்கிழமை நண்பகல் மோதல்கள் ஏற்பட்டதாகவும் இருசாராரும் துப்

— 15 ஆம் பக்கம் பார்க்க

பாராளுமன்றத்தில் அமைச்சர் லலித்

## ஈ.பி.ஆர்.எல்.எப். உடனும் அரசு பேச்சு நடாத்த வேண்டும்

அமைதிப்படை வாபஸ் பெறும் விடயத்தில் அரசாங்கம் மோதல் கொள்கையை பின்பற்றுகிறது என்று உணவு கூட்டுறவு அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்று பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை குற்றம் சாட்டினார்.

அமைதிப்படை விலகுவது தொடர்பாக இந்திய அரசுடன் பேச்சு நடாத்துவது மட்டுமல்ல வடகிழக்கு மாகாண அரசை ஆளும் ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்துடனும் பேச்சுநடாத்தி அச்சத்தை நீக்க வேண்டும் எனவும் கூறினார்.

## இலங்கையுடன் பேச்சு நடாத்த இந்தியா எப்போதும் தயார்

இந்தியப்படைகள் வாபஸ் பெறுவது தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சு நடாத்த இந்தியா எப்போதும் தயார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கே. நட்வர்சிங் நேற்று கல்கத்தாவில் தெரிவித்தார்.

இதற்காக இலங்கை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணவின் வருகையை

— 15 ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பு மோதல்களில் இருதினங்களில் 16 இளைஞர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த புதன், வியாழன் ஆகிய இரு தினங்களில் இயக்க மோதல்களிலும், இராணுவ நடவடிக்கைகளிலும் பதினாறு இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

பழுகாமத்தில் நடைபெற்ற மோதல்களையடுத்து ஒரு வயோதிபர் கொல்லப்பட்ட

— 15 ஆம் பக்கம் பார்க்க

## அமைதிப்படை பிரச்சினையை இலங்கை குளறுபடி செய்துள்ளது

இந்திய இராணுவம் வாபஸ் பிரச்சினைக்கு இலங்கை அரசு நட்புணர்வு, பரிவுணர்வு என்ற அடிப்படையில் தீர்வு காண வேண்டும். இதனை அரசு குளறுபடி செய்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்

— 15 ஆம் பக்கம் பார்க்க

## நேற்று முன்தினம் இரவு நெல்லியடியில் ஷெல் அடி

(உடுப்பிட்டி)

நேற்று முன்தினம் நெல்லியடியில் மாலை ஐந்தரை மணி முதல் இரவுவரை பராவெளிச்சங்களுடன் ஷெல் தாக்குதல்

→ 15ஆம் பக்கம் பார்க்க

## எழுதுவினைஞர் பயிலுநர் பயிற்சித்திட்டம்

(மட்டக்களப்பு)

எழுதுவினைஞர் பயிலுநர் பயிற்சித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஆராய்ந்து வருவதாக தெரியவருகிறது. இதன் மூலம் எழுதுவினைஞர் பற்றாக்குறையை தீர்க்கமுடியும் எனவும் திறைசேரியின் நிதி நெருக்கடியை சமாளிக்க முடியும் எனவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் "முரசொலிக்கு" கருத்து தெரிவித்தார். போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவுசெய்யப்படும் இவர்கள் "அலவன்ஸ்" அடிப்படையில் குறிப்பிட்ட காலத்திற்கு நியமிக்கப்படுவர். அக்கால எல்லைக்குள் திறமை, தகுதி, வேலைத்திறன் அடிப்படையில் நிரந்தர சேவையில் நியமிக்கப்படுவார்கள் எனவும் தெரியவருகிறது. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட தாதிகள் பயிலுநர் பயிற்சி திட்டம் பூரண வெற்றியளித்துள்ளதாகவும் இதையடுத்து தற்பொழுது உதவி ஆசிரியர் பயிலுநர் பயிற்சி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதே போலவே எழுதுவினைஞர் பயிலுநர் பயிற்சித் திட்டம் ஆரம்பிப்பது தொடர்பாக அமைச்சு ஆராய்ந்து வருவதாகவும் தெரிகிறதாம்.

# நல்லூர் உற்சவம் ஆரம்பம் தோண்டர் சேவை தயார்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை இவ் வருடமும் வழமை போல் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தில் தொண்டர் சேவையை மேற்கொள்வதென்று முடிவு செய்துள்ளது.

அடுத்த மாதம் ஆரும் திகதி நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவம் ஆரம்பமாவதை முன்னிட்டுப் பேரவை தொண்டர் சேவைக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நல்லூர்ப் பிரதேசம் அமைதி, சாந்தி, ஆத்மீக வலயமாகப் பிரகடனம் செய்யப்பட வேண்டும் என்றும் இந்து இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்துசமயக் கலாசாரத்திற்கு அமையப் பக்தர்கள் ஆலயத்திற்குப் புனிதமாக வர வேண்டுமென்றும், ஆலயச் சுற்றுடலில் விளம்பர வாகனங்களில் பக்திப் பாடல்களை ஒலிபரப்ப வேண்டுமென்றும், உற்சவதினங்களில் வீடுகளில் தினமும் மாலையில் குடும்பப் பிரார்த்தனை நடாத்தி வர வேண்டும் என்றும் பேரவை கோரியுள்ளது.

# புங்குடுதீவு மாவட்ட வைத்திய அதிகாரி மறுப்பு

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் நோயாளிகளுக்கு குடிப்பதற்கு உப்புநீரை வழங்கிவிட்டு ஊழியர்கள் நன்னீர் பாவிப்பதாக முரசொலியில் வெளிவந்த செய்தியை புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை மாவட்ட அதிகாரி இ. சுந்தரலிங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளார். நோயாளிகளுக்கு சிறப்பான முறையில் குடிநீர் வசதிகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் முடிச்சுமாறிகள் தொல்லை

(வண்ணார்பண்ணை)

யாழ். பஸ் நிலையத்தில் முடிச்சுமாறிகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பஸ்களிலும் மினி பஸ்களிலும் 'பிச்சை'கேட்கும் பாவனையில் ஏறி இறங்கும் நாடோடிக் கூட்டத்தினர் பிரயாணிகளிடமிருந்து அகப்பட்டவற்றை வெகு 'லாவகமாக' எடுத்துச்சென்று விடுகின்றனராம்.

அண்மையில் யாழ்.ஆரியகுளம் சந்தியிலிருந்து திருநெல்வேலிக்குப் பயணம் செய்த பெண்ஒருவரிடமிருந்து ஐயாயிரம் ரூபாலை இரு நாடோடிப் பெண்கள் 'அபேஸ்' செய்துள்ளனர். பிரஸ்தாப பெண் பயணம் செய்த மினிபஸ்ஸில் சென்ற இந்த இரு நாடோடிப்பெண்களும் அப்பெண்மணியின் கைப்பையை பிளேற்றினுல் வெட்டி விட்டு மணிபர்சை எடுத்துக் கொண்டு இடைவழியில் இறங்கிச் சென்றுள்ளனர். பிரஸ்தாப பெண்மணி வீடு சென்று பார்த்தபோதே மணிபேர்ஸ் களவாடப் பட்டுள்ளதை அறிந்து கொண்டாராம்.

இத்தகைய திருட்டுக்கள் யாழ்.பஸ் நிலையத்திலும், பஸ் வண்டிகளிலும் தினசரி இடம் பெறுவதாகப் பயணிகள் கூறுகின்றூர்கள்.

# இலங்கையின் குடித்தோகை பெருக்கம்வீழ்ச்சியடைந்துள்ளது

இலங்கையின் குடித்தொகைப் பெருக்கம் கடந்த பத்து ஆண்டுகளில் வீழ்ச்சி கண்டுள்ளமை ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையின் குடித்தொகை வளர்ச்சி வீதம் 1.7 வீதமாகவிருக்கின்றது. அபிவிருத்தி உலகில் இது குறைவானதாகும்.

இந்த ஆய்வுகளின் மூலம் இலங்கையின் குடிசனத்தொகை இன்னும் பன்னிரெண்டு வருடங்களில்இரண்டு கோடியாக உயரும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இருபது வயதுக்கும் முப்பத்தி நான்கு வயதுக்கும் இடையிலான பெண்களின் தொகை சமீப காலத்தில் முப்பத்தி மூன்று வீதமாக அதிகரித்துள்ளது.

# ஆட்சிக் குழு கூட்டம் இன்று

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட சன சமூக நிலையங்களின் சம்மேளன ஆட்சிக் குழு உறுப்பினர்களுக்கான சனசமூக அபிவிருத்திக் கருத்தரங்கு இன்று 23-ம் திகதி (ஞாயிறு) காலை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் என்று சம்மேளன நிர்வாகச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டீவகலாலா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார்.

# படகில் வந்த மனநோயாளி கடலில் பாய்ந்து மரணம்

(பூநகரி)

பூநகரி நாலாங்கட்டையைச் சேர்ந்த க. கிட்டினன் என்ற மனநோயாளியை யாழ் வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக சங்குப்பிட்டி கேரதீவு துறையூடாக வள்ளத்தில் உறவினர்கள் கொண்டு வந்தனர்.

நடுக்கடலில் வள்ளம் வந்து கொண்டிருந்த போது இவர் திடீரென கடலில் பாய்ந்ததால் காப்பாற்ற முடியாது போகவே பிணமாக மீட்கப் பட்டார். இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது


## ஜேர்மனி — கனடா

ஆகிய நாடுகளுக்கு போக விரும்பியவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

★ தாய்வான் ★

50 வேலையாட்கள் தேவை, சம்பளம் - 250 USD

★ பாஃரேன் ★

மேசன், தச்சுவேலை, கூலியாட்கள் தேவை.

உடனடியாக தொடர்பு கொள்ளவும்

**V. T. R. Travels**

41, 3rd CROSS STREET
JAFFNA

07170



## பிரயாண ஒழுங்குகள்

### சவூதி அரேபியா

| | வெற்றிடம் | |
|---|---|---|
| I Mechanics (Disel, Petrol) (மெக்கானிக்) | — 2 — | 900 SR |

ஒரு வாரத்தில் பிரயாண ஒழுங்குசெய்து தரப்படும்

| | | |
|---|---|---|
| II Mechanics (மெக்கானிக்) | — 5 — | 900 SR |
| III Carpenters (தச்சுத்தொழிலாளி) | — 6 — | 600 SR |
| IV Mesons (மேசன்) | — 5 — | 600 SR |
| V Plumbers (குழாய்வேலை செய்பவர்கள்) | — 7 — | 650 SR |
| VI Painters (பூச்சு வேலை செய்பவர்கள்) | — 5 — | 600 SR |
| VII Welders (வெல்டேர்ஸ்) | — 6 — | 650 SR |

இவற்றிற்கு நீங்கள்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**"M" THREE TRAVEL**

தலைமையலுவலகம்,
"இந்திரபவனம்"
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளையலுவலகம்:
இல.1,2வது ஒழுங்கை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

07185



**FAWMY ARTS**

உங்கள்
விளம்பரப் பலகைகள்
றபர் சில்கள்
சைக்கிள் லைனிங்
மற்றும்
பிளாஸ்டிக்
வேலைகளுக்கும்.

பௌமி ஆட்ஸ்

A P லேன்,
சோனக தெரு,
யாழ்ப்பாணம்.

07184



## சிறு விளம்பரம்

### போட்டோ ஸ்ரற்

உங்களின் சகல ஆவணங்களையும் சகல அளவுகளிலும் தெளிவாக பெரிதாகவும் சிறிதாகவும் குறைந்த விலையில் போட்டோஸ்ரட் செய்துகொள்ளலாம். கூடிய பிரதிகளுக்கு விசேட கழிவு. மேலும் ஆலோசனைகள் பெற மக்மில்லன் புத்தகசாலை. பஸ் நிலையம், ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். 07123

### சோதிடம்

அன்புஜீ சோதிடநிலையம், விமலாதேவி ஸ்ரோர்ஸ், குளப்பிட்டி- ஆனைக் கோட்டை ரேட் ஞாயிறு 8.30 தொடக்கம் 1.00 வரை எண் சோதிடம் பார்க்கப்படும். பெயர் மாற்றவிரும்புவோர் முழு விபரங்களுடன் வரவும். 07181

### கல்வி

G. C. E. (O/L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கு 22 வருட அநுபவமுள்ள ஆசிரியரினால் 2 மாதத்திற்குள் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன்,10,கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. 07179



## கேள்வி அறிவித்தல்

மாவட்ட கல்வித் திணைக்களம், வவுனியா
கல்விப் புனருத்தாபனத் திட்டத்தின்கீழ்
வவுனியா மாவட்டப் பாடசாலைகளின்

### கட்டிட வேலைகள்

கீழ்க் குறிப்பிடப்பெற்ற பாடசாலைக் கட்டிட வேலைகள் சம்பந்தமான கேள்விகள் 1989 08. 23-ம் திகதி காலை 10 00 மணிவரையும், கேள்விப் பத்திரங்கள் வழங்கல் 1989. 08. 15-ம் திகதி காலை 10.00 மணிவரை நீடிக்கப் பெற்றுள்ளதென்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

1. வ/நொச்சிமோட்டை அ. த. க. பா. — பெருந்திருத்த வேலைகள்
2. வ/கல்நாட்டினகுளம் அ. த. க. பா. — மேற்படி
3. வ/சிறிசுமண ம. வி. — மேற்படி
4. வ/மரதம்மடுவ அ. சி. க. பா. — மேற்படி
5. வ/தர்மபால ம. வி. — மேற்படி
6. வ/சிறிசுமண ம. வி. — மேற்படி

ஜீ. சிவபாலன்
பாடசாலைக் கட்டிட பொறியியலாளர்,
பிரதிக் கல்விப்பணிப்பாளருக்காக,
வவுனியா.

கல்வித் திணைக்களம்,
வவுனியா. 1989-07-20.

07183



★ லண்டன் ★ ஜேர்மன்
★ சுவிஸ் ★ பிரான்ஸ்
★ ஹொலன்ட் ★ சவுதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கு
துரிதகதி பிரயாண ஒழுங்குகள்

அத்துடன்

பாஸ்போட், பொண்ட் ஆகியன உடனே
செய்து கொடுக்கப்படும்

உங்கள் பயண அமைப்பாளர்

**M. P. LINGAMS**

764, Hospital Road
Jaffna

07164

## திருப் பாற்கடல்

### முரசொலி வார மலர்

# கலைக்களஞ்சியம் வேண்டும்!

'கலைக் களஞ்சியம் வேண்டும்!'

சீனுவிற் பத்தாம் நூற்றாண்டில் எழுந்த சிந்தனை இது.

1902-ல் யாழ்ப்பாணத்திலும் இந்தச் சிந்தனை எழுந்தது; ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின் அபிதான கோசம் வெளிவந்தது. தமிழிற் கலைக் களஞ்சியத்துக்கோர் முன்னோடி என்ற பாராட்டை அது பெற்றது. பின்னர், கலைக்களஞ்சியம் பற்றி இங்கு யாரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

1947-ல் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் அவசியம் குறித்துச் சிந்தித்தார். 1954-68 காலப் பகுதியிலே 10 தொகுதிகளாகத் தமிழிற் கலைக்களஞ்சியம் வெளிவந்துவிட்டது. கலைக் களஞ்சியத்துக்கோர் முன்னோடியான அகராதியை முதன் முதலிலே தமிழில் வெளியிட்ட ஈழம் தூங்குகிறதா?

1902 எங்கே? 1989 எங்கே? ஒரு பவளவிழாக் காலமாகிவிட்டதே! பலதுறைகளிலே தமிழ்நாட்டுக்கே வழிகாட்டிய நாம் பின் தங்கிவிட்டோம்.

அபிதான கோசம், ஈக்காடு இரத்தினவேலு முதலியாரின் சிறப்புப் பெயரகராதி (1908) என்பவற்றை ஒத்ததொரு அகராதியை வெளியிடும் முயற்சியில் முதுபெரும் எழுத்தாளர், பதிப்பாளர் தி. ச. வரதராசன் (வரதர்) ஈடுபடுகின்றார் என்ற செய்தி சற்றே ஆறுதல் தருகிறது. ஆனால்,

நமக்கென, நமது பாரம்பரிய கலை, பிறதுறை வளர்ச்சிகளுக்கு ஏற்றதான கலைக் களஞ்சியம் ஒன்று பத்துத் தொகுதிகள் அளவிலாவது வேண்டாமா? நாம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டிய துறை இது.

1982-ல் அகில உலக இந்து மகாநாடு ஒன்றை நடாத்திய திருப்தியில் அன்றைய பிரதேச அபிவிருத்தி, இந்துசமய, இந்து கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சு மீளாத்துயிலில் ஆழ்ந்துவிட்டது. இந்து மத கலாசார இன்றைய அமைச்சர் மாண்புமிகு தேவராஜ் அவர்களாவது இதுபற்றிச் சிந்திப்பாரா?

வடக்கு, கிழக்கு, மலையகம் என்ற முப்பிரிவிற் பல்துறை அறிஞர்களை இணைத்து நன்கு திட்டமிட்டு நிறைவேற்றப்படவேண்டிய பணி இது. முக்கியமான இந்தப் பணியில் முனையவேண்டும். அரசும் பல்துறை அறிஞர்களும் என்று நாம் விரும்புகிறோம்.

க. உமாமகேஸ்வரன்

# செயற்கரிய செய்தோர்

## கணியன் பூங்குன்றனார்

கணியன் பூங்குன்றனார் என்பவர் சங்கச் சான்றோர் இன்பத்திலும், துன்பத்திலும் மாறுபடாத உள்ளமும், கலங்காத அமைதியும் உடையவர். நலஞ் செய்தாரென ஒருவரைப் பாராட்டலும் தீது செய்தாரென ஒருவரை இகழ்தலும் இல்லாதவர். புறநானூற்றில் இவரது பாடல் ஒன்று மட்டுமே உண்டு.

இவர் காலப்புலவர்களுள் பெரும்பாலோர் அரசர்களையும், வள்ளல்களையும் அவர் தம் வீரம் பற்றியும், கொடைபற்றியும் புகழ்ந்து பாடியுள்ளனர். ஆனால் இவரோ எந்த அரசரையோ, எந்த வள்ளலையோ புகழ்ந்து பாடவில்லை.

இவர் காலச் சான்றோர் சிலர் இவரைச் சந்தித்து "நீங்கள் பாவன்மை மிக்கவராக இருந்தும் எவரையும் பாடாதது ஏன்?" என்று கேட்டனர்.

அதற்குக் கணியன் பூங்குன்றனார் "உயிர்கள் யாவும் தாம் தாம் செய்த வினைக்கேற்ப இன்பமும், துன்பமும், செல்வமும், வறுமையும் எய்தும் என்பதை நூல்களாலும், நடைமுறையாலும் தெரிந்திருக்கிறோம்" அதனால் "பெரியோரை வியத்தலுமிலமே சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்றார்.

இந்த அடிகளைக்கொண்ட கணியன் பூங்குன்றனாரின் பாடலின் முதல் அடி தமிழ் உலகு நன்கு அறிந்த ஒன்று. அதுதான் "யாதும் ஊரே யாவரும் கேளிர்."

# சிறையிலும் வாடாத கறுப்பு மலர்

> "நான் இன வெறியன் அல்லன்; இன வெறியை அடியோடு வெறுப்பவன். இனவெறி கறுப்பரிடமிருந்தாலென்ன, வெள்ளையரிடமிருந்தாலென்ன, அது அநாகரிகமானது. அருவருக்கத்தக்கது"

அனுத்துகள் ஒன்றுக்கு அவரது பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். ஆனால் அவர்-பௌதிக விஞ்ஞானி அல்லர்.

வெள்ளையரின் தலைநாடான பிரிட்டனின் தலைநகர் இலண்டனில் அவருக்குச் சிலை வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர் வெள்ளையர் அல்லர்-கறுப்பர்; வெள்ளை நிற வெறிக்குப் பரம வைரி.

### போராட்டமே வாழ்க்கை

எத்தனையோ பல்கலைக்கழகங்கள் அவருக்குச் சிறப்புப் பட்டங்களை வழங்கித் தம்மைச் சிறப்பித்துக் கொள்கின்றன ஆனால் அவர் போராட்டமே என் 'வாழ்க்கை' என்று பறைசாற்றி விடுதலைப் போர் வீரர் என்ற நிகரிலாப் பட்டத்தை தமதாக்கிக் கொண்டவர்.

உலகின் பல்வேறு நகரங்கள் அவருக்குச் சிறப்புக்குடியுரிமை வழங்கியுள்ளன. ஆனால் அவரது தாய்நாட்டில் எந்த உரிமையும் அவருக்கில்லை.

உலகெங்கும் எத்தனையோ தெருக்களுக்கு அவரது பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். ஆனால் அவர் சுதந்திர மனிதராய்த் தெருவில் நடந்து கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகிறது.

தென்னாபிரிக்க மக்களின் அன்புத்தலைவர் நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகளாய் (1989 வரை) சிறையில் இருக்கிறார். தென் ஆபிரிக்க வெள்ளை நிறவெறி அரசு அவரை இவ்வளவு நீண்ட

**நவீனன்**

காலம் சிறையில் அடைத்து வைத்துச் புரிந்துள்ள சாதனை இது. நெல்சன் மண்டேலா என்பது தென்ஆபிரிக்க மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்தின் மறு பெயராகி விட்டது.

அவரது மக்கள் அவருக்குச் சூட்டியுள்ள அபிமானப் பெயர் 'கறுப்புமலர்' (The Black Pimpernel)

ஆண்டுகள் பல ஆன பின்பும் வாடாமற் போராட்ட மணம் வீசிக் கொண்டிருக்கும் ஒரு கறுப்புமலர்;

சிறையிலும் வாடாத கறுப்பு மலர்......

மண்டேலாவின் முழுப் பெயர் 'நெல்சன் ரோலிஹாலா மண்டேலா' 1918 ஜூலை 18 இல் தென்ஆபிரிக்காவின் டிரான்ஸ்காய் பகுதியில் அம்தட்டா எனும் ஊரில் கோசா பழங்குடியினரின் தெம்பூ அரச குடும்பத்தில் பிறந்தவர் இவர்.

இன ஒதுக்கல் அரசின் குற்றவாளிக் கூண்டினுள் நிறுத்தப்பட்டு 27 ஆண்டுகளாக இருட்டுச் சிறைக்குள்ளேயே தன் மக்களின் விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து நடாத்துகின்றார்.

### ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்

தென்னாபிரிக்காவிற் கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டம் இன்னமும் தொடர்கிறது. நீண்ட நெடுங்காலமாக இப் போராட்டம் நடைபெறுகிறது.

கறுப்பின மக்களின் உரிமை அடக்கப்பட்டு அடிமைகளாக நடாத்தப்படும் மிகக் கேவல நிலையை நீக்கிட 1912 ஜனவரி 8 இல் ஆபிரிக்க, தேசியக் காங்கிரஸ் உதித்தது (A.N.C) இதன் பயனாக கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டம் உத்வேகங் கொண்டது.

பல நூறு ஆண்டுக் காலமாக அடிமைகளாக வாழ்ந்த கறுப்பின மக்கள்; புதிய விடியலை நோக்கிய பாதைக்கு வழி சமைத்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸுக்கு முழுமையான ஆதரவை வழங்கினர். நிறவெறியை எதிர்த்து மக்களின் போராட்டம் முனைப்படைந்தது.



சுரண்டற்கார, நிறவெறித் தென்னாபிரிக்க அரசு ஆபிரிக்க தேசிய காங்கிரஸை அழிக்க முனைந்தது. ஆயினும் ஒரு சிலரைத்தான் கைது செய்ய முடிந்தது. மக்களின் அமைப்பு மக்களுடனேயே இருந்து போராடியது.

### மகத்தான மக்கள் தலைவன்

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் முக்கிய தலைவராக விளங்கிய நெல்சன்மண்டேலா மக்கள் மத்தியிற் பிரபலமானார். எதிரிசன் கூட நெல்சன் மண்டெலாவை மதித்தனர். அன்பால் எதனையும் சாதிக்கக் கூடிய மகத்தான மக்கள் தலைவரானார் மண்டேலா.

நிறவெறி அரசு நெல்சன் மண்டெலாவை அழிப்பதாற் கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழிக்கலாம் என எண்ணியது.

தேச விரோத வழக்கில் நெல்சன் மண்டேலாவை மாட்டிய அரசு குற்றவாளிக் கூண்டினுள் வைத்து விடுதலைப் போராட்டத்தைப் பேரம் பேசியது. இத்தனை யாண்டு சிறை வாசத்தின் பின்னரும் தன் சுயநலத்துக்காகத் தேச விடுதலைப் போராட்டத்தை நெல்சன் மண்டெலா கைவிடவில்லை. எதற்கும் அஞ்சாத புரட்சிச் சிங்கமாய் நிறவெறி அரசை எதிர்த்தார். குற்றவாளிக் கூண்டினுள் நிறுத்தப்பட்ட நெல்சன் மண்டெலா அரசுக்கெதிராகப் போர்க்கணை தொடுத்தார். அவர் ஆற்றிய உரையிருந்து சில பகுதிகள்;

நான் இனவெறியன் அல்லன்; இன வெறியை அடியோடு வெறுப்பவன் இன வெறி கறுப்பரிடமிருந்தாலென்ன வெள்ளையரிடமிருந்தாலென்ன அது அநாகரிகமானது;

அருவருக்கத் தக்கது.

### இருட்டுச் சிறையினுள்ளே

இனவெறியை முற்றுமுழுதாக எதிர்த்து நின்ற மண்டேலா இருட்குகையான சிறைக்குள் தள்ளப்பட்டார் விடுதலை... விடுதலை... என்ற பெயரில் பேரம் பேசும் நிறவெறியாளர்களுக்கு துளியேனும் மசியாது தனது கொள்கையில் இலட்சியத்தில் உறுதியாக நின்றார்.

சிறையிலும் வாடாத கறுப்பு மலர் தனக்கு இழைக்கப்படும் கொடுமைகளை மறந்து மக்களுக்காக தான் போராடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறது.

எனது காலம் திரும்பிவருமானால் இதுவரை செய்ததையே மீண்டும் செய்வேன், தன்னை மனிதன் என்று அழைக்கிற எவனும் நிறவெறியருக்கெதிராகவே செயற்படுவான்.

எத்தனை நூற்றாண்டுகள் சென்றாலும், கறுப்பு மலர் விடுதலைப்போராட்ட மணம் வீசிக்கொண்டே இருக்கும்.

### வைத்தியக் குறிப்புக்கள்

# நாரிப்பிடிப்பு : சில தகவல்கள் உடற்பயிற்சி முறைகள் [2]

டாக்டர் எம்.கே.முருகானந்தன் M.B.B.S.(Cey)

* நாரிப்பிடிப்புக்கள்எல்லாமே ஆபத்தற்றவை அல்ல, சில ஆபத்தானவை:சில கடுமையான நோய்களின் அறிகுறிகள். எனவே நாரிப்பிடிப்புக்குச் சுயவைத்தியம் செய்ய முற்படாது வைத்திய ஆலோசனை பெறுவது அவசியம்.

* முள்ளந்தண்டு எலும்பின் இடைத்தட்டம் விலகல் (Prolapsed Intervertebral Disc-PID) என்பது ஒரு முக்கியமான நோயாகும். இதனைச் சுருக்கம் கருதி PID–பீ. ஐ. டீ என்போம். முள்ளத்தண்டுத் தொகுதி, பல முள்ளந்தண்டு எலும்புகளின் இணைப்பினால் ஆனது. முள்ளந்தண்டு எலும்புகள் ஒன்றின் மேல் ஒன்றாக இடைத்தட்டம் எனும் புரதத்தால் இணைக்கப்பட்டுள்ளன. இத்தட்டத்தின் நடுப்பகுதிமென்மை. வெளிப்பகுதிகடுமையானது திடீரெனச்செய்யும் பழுவானவேலையால் வெளிக்கடும்பகுதியில்வெடிப்பு உண்டாகலாம் இதனால் நடுவில் இருக்கும் மென்பகுதி பிற்பகுதியால் வெளியேறி முண்ணாணையோ நரம்புகளையோ அழுத்தும் போது கடுமையான வலி ஏற்படும்.

* பெரும்பாலும் குனிந்து பாரம் தூக்கும் போது சடுதியாக இது ஏற்படுகிறது. உடனே அப்படியே படுக்கவேண்டிய நிலை கூட ஏற்படலாம், அல்லது நிமிர முடியாதபடி, இடுப்பில் கை ஊன்றியபடி, சற்றுக் குனிந்தபடி நடக்கவேண்டி நேரிடலாம், சிலருக்கு, பாரந்தூக்கிய இரண்டு மூன்று நாள்களுக்குள் நாரிப்பிடிப்பு சிறிது சிறிதாக ஆரம்பித்து மோசமாகலாம். இன்னும் சிலருக்கு காரணம் சொல்லமுடியாதபடி தானாகவே மெதுவாக, ஆரம்பித்து பின் சிறிது சிறிதாகக் கடுமையாகலாம்.

★ பீ.ஐ.டீ. எனப்படும் இந் நோயில், தும்மினால், இருமினால், அல்லது முக்கினால் கூட நாரிவலி உடனே அதிகரிக்கும். சிலவேளைகளில் வலி காலுக்கும் பரவலாம். கால் உளைவுடன், காலில் விறைப்பும் ஏற்படலாம். நடக்கும் போது ஒரு பக்கம் சரிந்தபடி நடக்க வேண்டி நேரிடலாம். குனிய முடியாதிருக்கும். நிலத்தில், அல்லது பலகைக் கட்டிலில் நிமிர்ந்து படுத்தால் ஆறுதலாக இருக்கும். முழங்கால்களைச் சிறிது மடித்தபடி, அல்லது முழங்காலுக்குக் கீழ் ஒரு தலையணை வைத்துக் கொண்டு படுத்தால் கூடிய சுகம் தெரியும்.

★ இதைக் குணப்படுத்த மூன்று வாரங்கள் வரையில்தொடர்ச்சியாகப் படுக்கையில் படுத்திருந்து பூரண ஆறுதல் எடுக்க வேண்டியது அவசியம். எழும்பவோ, நடக்கவோ கூடாது. உணவு உட்கொள்வதும், மலசலம்கழிப்பதும் கூட படுத்திருந்தபடியே செய்ய வேண்டியிருக்கும். சில தருணங்களில் காலுக்கு பாரமண் மூடை கட்டுவது தேவையாகலாம். மிக அரிதாகச் சத்திர சிகிச்சை செய்து குணமாக்க வேண்டி நேரிடலாம். எனவே சென்ற வாரம் குறிப்பிட்ட நடைமுறைகளை அனுசரித்து, பீ ஐ.டீ உண்டாகாமல் பாதுகாப்பதே விவேகமானது.

★ இடுப்பு எலும்பில் பிறப்பிலேயே இருக்கக் கூடிய சில வேறுபாடுகளும் நாரிப்பிடிப்பை ஏற்படுத்தலாம். அதேபோல உயரத்திலிருந்து குதிப்பது, அடிபடுவது, போன்றவையும் முள்ளத்தண்டு எலும்பில் உடைவையோ நசிவையோ ஏற்படுத்தி நாரிவலிக்குக் காரணமாகலாம். மார்பு, தைரோயிட், சிறுநீரகம், புரஸ்ரேட் போன்ற பகுதிகளில் உண்டாகும் புற்றுநோய் முள்ளந்தண்டு எலும்புகளுக்கு பரவுவதாலும் நாரிப்பிடிப்பு உண்டாகலாம். காசநோயும் எலும்பு அழற்சியும் காரணமாகலாம். எனவே வைத்தியர் எக்ஸ்ரே, இரத்தப்பரிசோதனை ஆகியவற்றால் நோயை நிர்ணயிக்கக் கூடும்.

* சில எளிமையான உடற்பயிற்சிகள், உங்கள் நாரிப் பகுதியின் தசைகளுக்கும், சவ்வுகளுக்கும் பயிற்சி அளித்து, வலிமைப்படுத்தும். இவை உங்களுக்கு நாரிப்பிடிப்பு உண்டாகாமல் தடுக்கவோ, முன்பு குணமாகியது மீண்டும் திரும்பாமல் தடுக்கவோ உதவும் ஆனால் இவற்றைநாரிப்பிடிப்பு இருக்கும் நேரத்தில் செய்ய முற்படாதீர்கள். இதோ இரண்டு இலகுவான பயிற்சிகள்.

1. முழங்கால்களைச் சிறிது மடித்துக் கொண்டு நிமிர்ந்து படுத்திருங்கள். இப்பொது உங்கள் நாரிப்பகுதியை மாத்திரம் கட்டிலிலிருந்து சிறிது உயர்த்தி பத்து செகண்ட் வரை அப்படியே வைத்திருந்து விட்டு, மீண்டும் கட்டிலில் இறங்க விடுங்கள் இப்படிப் பத்துமுறை செய்யுங்கள்.
2. முழங்கால்களை மடித்துக் கொண்டு நிமிர்ந்துபடுங்கள் முழங்கால்களை மேலும் உயர்த்தி நெஞ்சில் படும்படி செய்யுங்கள். பத்து செகண்ட் அப்படியே இருந்துவிட்டு பழைய நிலைக்கு வாருங்கள். இவ்வாறு பத்து முறை செய்யுங்கள்.

★ நீச்சலடிப்பது கூட ஒரு நல்ல பயிற்சிதான். நீச்சல் அடிப்பது நாரிப்பிடிப்பு ஏற்படாமல் தடுப்பதுடன் உங்கள் எடையையும் சரியான அளவில் வைத்திருக்க உதவும்.

# களஞ்சியம்

## இப்படித்தான் வந்தன

● ''இஸ்டோரியா'' என்னும் இலத்தின் வார்த்தையின் மருவிய வடிவம்தான் '' ஹிஸ்டரி '' என்னும் ஆங்கில வார்த்தை.

● ''பென்சில்லம்'' என்னும் லத்தீன் வார்த்தையின் மருவிய வடிவம்தான் ''பென்சில்'' என்னும் ஆங்கில வார்த்தை.

● ''பென்ஞ'' என்ற வார்த்தையிலிருந்து தான் ''பேஞ'' என்னும் வார்த்தை வந்தது'

## நினைவு ஆற்றலும் உணவும்

ஒருவரது நினைவாற்றலுக்கு அவர் சாப்பிடும் உணவும் உதவுவதாக இருக்கிறது என்று கண்டறிந்திருக்கிறார்கள். மூளையில் அஸிடில் கோலைன் என்ற பொருளை உற்பத்தி செய்ய உணவில் இருக்கும் கோலைன் என்ற சத்துத் தூண்டுதலாக இருக்கிறது. இச் சத்து முட்டையிலும் மீனிலும் அதிகமாக உள்ளது. இச்சத்து தூண்டுவதால் மூளையில் அஸிடில் கோலைன் அதிகமாகும் போது நினைவாற்றல் அதிகரிக்கிறதாம்.

## தெருவுக்கு நாவலின் பெயர்

தெருவுக்கு நாவலின் பெயர் சூட்டப்பட்டிருப்பது கல்கத்தாவில் மட்டுமே காணப்படும் அதிசயமாகும். 19ம் நூற்றாண்டில் தாராநாத்காங் கூலி என்பவர் எழுதிய புகழ் பெற்றநாவல் சுவர்ணலதா. அந்த நாவலின் பெயரை ஒரு தெருவுக்கு இட்டிருக்கிறார்கள்.

# காட்டூன் சில குறிப்புக்கள்

லலலல.. லலலால, லலலல, லலலல.. லலலா ஏய் மிக்கி என் மனைவி மின்னி எங்கே? கூப்பிடு அவளை.

என்ன இது என்கின்றீர்களா? நீங்கள் தொலைக் காட்சியிற் பார்க்கும் காட்டூன் திரைப்படங்களில் வரும் ஒரு காட்சி இது. வால்ட் டிஸ்னி காட்டூன் திரைப்படஉலகின் தந்தை. இவரது கதாநாயகன் 'மிக்கி' என்ற எலி.

மிருகங்கள் பேசுகின்றன; மரங்கள் பேசுகின்றன; பறவைகள் பாடுகின்றன. இது எப்படி முடியும்? காட்டூன் மூலமே முடியும். காட்டூன் படங்கள் மூலம் பேசாதனவற்றைப் பேச வைக்க முடியும்; பாட வைக்க முடியும்.

இவ்வற்புதபடங்களை எப்படித் தயாரிக்கின்றார்கள்?

சாதாரணமாக திரையில் ஓடும் திரைப்படச் சுருளிலே தனித்தனி கட்டங்கள் உண்டு. ஒரு செக்கனுக்கு 22 கட்டங்கள் ஒடினால் இயற்கை அசைவைத் திரையில் காணலாம்.

ஒரு காட்டூன் தயாரிப்பாளர் தான் தயாரிக்க வேண்டிய காட்டூன் படங்களின் ஒவ்வொரு சிறு அசைவையும் தனித்தனிப் படமாக வரைந்து விட வேண்டும். பின் கமராவை அதற்கெனப் பொருத்தப்பட்ட மேடையில் வைத்து ஒவ்வொரு கட்டத்திற்கும் ஒவ்வொரு படமாகக் கமராவில் பதிவு செய்ய வேண்டும். இப்படி பதிவு செய்த பின் சுருளைக் கழுவித் திரையிலே தோன்றச் செய்தால் இயற்கையான அசைவு தெரியும்.

சதாரணமாக 15 நிமிடக் காட்டூன் படம் தயாரிக்க 330 படங்கள்தேவை. முதன்முதல் தயாரிக்கப்பட்ட துண்டுக் காட்டூன் (15 நிமிடம்) திரைப்படம் ''நீராவிப்படகு வில்லி கறுப்பு வெள்ளையில் தயாரிக்கப்பட்டது. தயாரிப்பாளர் வால்டிஸ்னி முதல் முழுநீள (40நிமிடம்) காட்டூன் திரைப்படம் எடுத்தவரும் இவரே. 'ஸ்னோவைட்டும் ஏழு குள்ளர்களும்' என்ற அததிரைப் படம் 1935-ல் எடுக்கப்பட்டது. இதை அடுத்து வார்னர் பிரதர்ஸ், வார்டர் லான்ட்ஸ் என நிறைய காட்டூன் தயாரிபபாளர்கள் தோன்றி விட்டார்கள் நீங்களும் ஆயிரக் கணக்கான காட்டூன் கதாநாயகர்களைக் கண்டுகளிக்கின்றீர்கள்.

★ தி. தவபாலன்

# சிரிப்பென்னும் தெள்ளமுது

ஒருவர்:– பத்திரிகையிலே என்ன இருக்கிறது? என்னையும் பத்திரிகையையும் மாறி மாறிப் பார்க்கிறீர்கள்.

மற்றவர்:– உங்களை மாதிரியே ஒரு புகைப்படத்தைப் போட்டுக் 'காலமானார்' என்ற செய்தி பிரசுரமாகி இருக்கிறது அது நீங்கள்தானா அல்லது... ...



தந்தை:– இவ்வளவு பொய் சொல்கிறாயே உன்னுடைய வயதில் நான் பொய் சொன்னதே கிடையாது.

மகன்:– எந்த வயதில் பொய் சொல்ல ஆரம்பித்தீர்கள்.



பேச்சாளர்: என் பேச்சை எல்லாம் தொகுத்து என் மறைவிற்குப் பின் போடப் போகிறார்களாம்.

நண்பர்: துக்கப்பட வேண்டிய விஷயம் தான்.

டாக்டர்: எப்படி இந்தவிபத்து ஏற்பட்டது.

பேஷண்ட்: பிரஞ்சு ஸ்டைலில் நடந்து கொண்டதால்.

டாக்டர்: அப்படி என்ன செய்தீர்கள்.

பேஷண்ட காரை ரோட்டின் வலப்புறமாக ஓட்டிக் கொண்டு போனேன்.

●

ஒருவர்: என் அம்மா அதிர்ஷ்டசாலியா என் மனைவி அதிர்ஷ்டசாலியா என்பது நாளை தெரிந்து விடும்.

மற்றவர்: நாளைக்கு என்ன நடக்கப் போகுது'

ஒருவர்: என்அம்மாவுக்கு ஒப்பறேஷன் நடக்கப்போகுது.



ஒருவர்: நானும் என் அண்ணனும் யார் பெரிய வீடாகக் கட்டிறதென்று போட்டி போட்டு ஒருவரிடம் கொன்ருக் கொடுத்தோம்.

மற்றவர்: யார் வீடு பெரிதாக இருந்தது.

ஒருவர்: கொன்ருக்கருடைய வீடுதான்.

●

விருந்தினர்:– என்ன உங்க வீட்டு நாய் ஏன் இப்படிப் பயங்கரமாக என்னைப்பார்த்து முறைக்கிறது.

சிறுவன்:– நீங்கள் சாப்பிடுகிறது. அதனுடைய பிஸ்கட்.

# ஈழத்து கவிஞர் பக்கம்

## திருமண சம்பிரதாயம்

ஓ!
ஆண் வர்க்கமே!
உன் குணமே
இதுதானு!
நீ
திருமண வாழ்வில்
ஓர்
பெண்ணைப் பற்றி
நினைப்பதெல்லாம் ... ...
''அழகானவளாக''—
''அறிவுள்ளவளாக''—
''குணமுள்ளவளாக''—
''கற்புள்ளவளாக''—
இந்த நான்கும்
போதாதா? ?

உனக்கு
ஓர்
பெண்ணுடன்
குடும்பம் நடத்த-
இதை விட்டு
அத்தனையும்
உள்ளவளிடம்
கூட
நீ எதிர் பார்ப்பது
''சீதனம்'' என்ற
நான்கு எழுத்துத்
தான்-

''சீதனம்'' தான்
உன் வாழ்க்கைப்
பயணத்தை
திசை திருப்பும் எனில்
சீதனம் இல்லாத
ஏழைப் பெண்கள்
அவர்களுக்கு
இந்த ஜன்மத்தில்
திருமண நாடகமே
இல்லையா!-

ஓ!
ஆண்மகனே
சிந்தித்தாயா!
உனக்கு
கொடுக்கப்படும் சீதனமும்
ஓர்
பெண்ணின் பெற்றோரின்
வியர்வை சிந்தி
உழைத்த பணம் தான்—
"ஓர் மகனுல்
பெற்ற சீதனத்தை
ஓர் மகளிடம்
சீதனமாக கொடுப்பது
இது தான்
இன்றைய திருமண விழாவின்
முக்கிய சம்பிரதாயம்''-

உனக்கு
உன்னிடமே
துணிவில்லாத—
ஆண்மையில்லாத போது—
தான்
பெண்ணிடம் சீதனமாக
''பணம்'' வாங்குகின்றுய்
இல்லையா!—
ஆனுல் ... ...
சமுதாயம்
தப்புக் கணக்கு போட்டு
இன்று
தத்தளிப்பதால்
ஏழைப் பெண்களின்
இனிமையான கனவுகள்—
இளமைக் காலங்கள்
சிதைக்கப்பட்டு
கொழுந்து விட்டு
எரிவதனை
யாரறிவார்?—

—எழிலி

## இதயம் காய்கிறது

அன்பே!
உன் இடை
கொடி இடை
என்கிருர்கள்
என் இதயத்தை
அதிற்
காயப்போட்டிருக்கிறேன்!

## பைந்தமிழ் வேந்தர் வாழ்வு

வேடனின் கையில் சிக்கி
வெண்புரு மாளா வண்ணம்
வேடனின் விருப்புக் கொப்பத்
தன்தசை வெட்டித் தந்தும்
வெண்புரு நிறைக்கு ஒப்பத்
தன்னையே உவந்து தந்தும்
வெண்புரு உயிரைக் காத்தான்
சிபியென்னும் மன்னர் மன்னன்!

மன்மகன் ஓட்டிச் சென்ற
தேர்ச்சில்லில் சிக்கிக் கொண்டு
தன்கன்று இறந்த தென்னும்
தாய்ப்பசு குறையைக் கேட்டுத்
தன்மகன் மேலே தேரை
ஓட்டிடப் பணித்துச் சோழன்
என்றென்றும் நிலைக்கும் வண்ணம்
மன்னுயிர் நீதி காத்தான்!

குற்றங்க ளொன்றும் இல்லாக்
கோவலன் மீதில் கள்ளக்
குற்றத்தைச் சுமத்தி அன்னுன்
இன்னுயிர் போக்கும் ஆணை
இட்டதை அறிந்த போதே
தன்பிழை உணர்ந்த மாறன்
'சட்'டென வீழ்ந்து மாண்டான்!
சிலம்பிலே நிலைத்துக் கொண்டான்!!

'பேரிருள் வேளை இல்லக்
கதவினை யாரோ' தட்டிப்
பேரிடர் செய்தான் என்ற
குடிமகன் குறையைக் கேட்டுப்
'பேரிடர் செய்த கள்வன்
யாரென அறிவேன்''என்னப்
பேரவை வியந்து நின்ற
வேளையில் வாளினுல் தன்
கரத்தினைத் துணித்துக் கொண்டு
நீதியைக் காத்து நின்ற
தரத்தினுல் பாண்டி மன்னன்
தமிழிலே நிலைத்துக் கொண்டான்!

நீதியைப் போற்றி வாழ்ந்து
ஞாலத்தில் நின்று வாழும்
நீதிக்காய் வீழ்ந்த போழ்தும்
காலத்தை வென்று வாழும்;
நீதியின் மைந்தர் வாழ்வை
நீவிரும் அறிந்து கொள்வீர்!
நீதியைப் போற்றி வாழ்வீர்!!
காலத்தை, வென்று வாழ்வீர்!!!

-முருகு

## என்னென்று நான்பாடுவேன்?

நில்லா உலகின் நிலைமா றியற்கைதனை
நல்லா யுணர்ந்து நலிவுறுத்தும்-பொல்லாத
தன்மையுடைத் தாழ்வுயர்வுப் பேதமகல் இன்பத்தை
என்னென்று நான்பாடுவேன்?

எட்டுத் திசைதோறும் இன்தமிழாள் நன்முரசு
கொட்டி வளர்ந்திங்கு நிற்றலினை-தொட்டணைத்துப்
பாலூட்டிச் சோறூட்டி வாழ்வளித்த அன்னையவள்
தாலாட்டை யோபாடு வேன்?

வள்ளுவனின் நீதியினுல் வையத்தார் வாழ்ந்திடலை
வெள்ளம் போற் சொல்லடுக்கும் தாண்டகத்தை-உள்ளமதில்
நீங்காமற் சங்கத்து நூல்கள் நிலைப்பதனைப்
பாங்காகப் பாடுவேன் நான்

கள்ளமிலாக் கற்புடனே கம்பனவன் காவியமாய்த்
தெள்ளுதமிழ் இன்பமதாய்த் தேன்மொழியாய்-உள்ளத்தை
மின்னெனவே கொள்ளையிடும் மேன்மையுடன் வாழுகின்ற
பெண்ணழகை என்சொல்லு வேன்?

சோலைக் குயில்கூவிக் காலைக் கதிரவனை
வேலைக்கு வாவென்று கூப்பிடலை-நீலத்தை
அள்ளித் தெளித்ததுபோல் ஆர்க்கின்ற சாகரத்தை
உள்ளபடி நான்பாடு வேன்.

பா. மகாலிங்கசிவம்

## பொறுப்பு உன்னிடமே

உன்
நினைவுகள் ஏன்
திடீரென
ராஜினுமா செய்கின்றனர்?
என்
இதயக் கம்பனியின்
முழுப் பொறுப்பும்
உன்னிடம் தானே?
இப்படி என்னை
விட்டு விலகினுல்
கம்பனியின் நஷ்டம்
என்
உயிருக்கும் வராதா?
நாடித் துடிப்புகளெல்லாம்
கடும் கண்டிசன்
போடுகின்றன
உன் நினைவுகளை
விலக விடமாட்டோம்
என்று... ... ...?
இதயத் துடிப்பு கூட
தன் வேலை நிறுத்த நாளை
அறிவிக்கின்றது
உன் நினைவு இல்லையேல்
தாம் தொழில்பட
முடியா தென்று
இனியும் உன் நினைவின்
ராஜினுமாவை
வாபஸ் பெற மாட்டாயா?

செல்வி மயில்வாகனம்

## நமது கலாசாரம்?

பட்டணம் என்றவுடன்
விட்டகன்றன நாற்குணங்கள்
கார் கூந்தலும்
கால் மூடும் ஆடைகளும்
கத்தரிக்கு இலக்காகி
பரட்டைத் தலையாகவும்
கட்டை'ஸ்கேர்ட்'ஆகவும்
'மொட் ஸ்ரைல்'என்ற
போர்வையில்
'கட்'டாகி போய்விட்டன
பற்ருத ஆடையுடன்
பவனி வருவதுதான்
'பாஷன்' என்றெண்ணி
முற்ருகத் தமை மாற்றி
சிட்டாகப் பறக்கின்றனர்
சிலர்
மட்டான புத்தி அவர்களுக்
கென்ருல்
பெற்ருேருக்கும்
மதி இல்லையா?
அருமைப் பெற்ருேரே
நம் கலாசாரம் காத்திட
புகட்டுங்கள் நல்லறிவை
புத்திரியர் புத்தியுற

புலோலியூர் சந்திரசேகர்

## உண்மை ஒன்று சொல்ல

இருள் சூழ்ந்த வானம்
நட்சத்திர மலர்களால்
சில நாட்கள்
பூத்துக் குலுங்கும்
அந்த நாளில்......
உண்மை ஒன்று சொல்ல
ஓடிவந்தேன் உன்னருகே
நீயோ......
மேகங்கள் சந்திரனை
மறைப்பது போன்று
எதிர்த்திசையில்
உன் மதி முகத்தை
மறைத்து விட்டாய்
மீண்டும் மீண்டும்
வருகின்றேன்
உண்மை ஒன்று சொல்ல
புரியாமல் நீயும்
ஓடிவிடுகின்ருய்
நீ புரியும் வரை
அந்த உண்மையை சொல்ல
ஒவ்வொரு நாளும்
ஓடி வருவேன் உன்னருகே

ரவிஜினி

## நெல்சன் மண்டேலா

மனித நேசத்திற்காக
இரும்புக் கம்பிகளுக்குள்
இருத்தி வைக்கப்பட்ட
கறுப்புச் சூரியனே...
உனக்குக் கதவு திறக்கப்
படுகிறதாய்க்
காற்று என்னிடம்
சேதி சொல்கிறது
சந்தோஷம் ...
வருக சூரியனே,
இன்னும்
அடிமைப் பனி
அகலவில்லை
இருண்ட கண்டத்தில்

ஒரு நாளைக்கு
ஒரு முறையென்ருலும்
ஏறத்தாழ
இருபத்தைந்து வருடமாய்
நீ
விட்ட பெருமூச்சுக்கள்
செவ்வானத்திற் சேமிக்கப்
பட்டுள்ளன
வெறுமனே
வெளிறிக் கிடக்கும்
சதைப்பிண்டத்திற்காக
ஏ ...
இதயமுள்ள மனிதனே
உனக்கு
இப்படியொரு
தண்டனையா?

மண்டேலா
மெய்யாகவே
அந்த வெள்ளை
மனிதர்கள்
ஒவ்வொரு வருடமும்
புதிய சிலுவையை
அறைகிருர்கள்
ஆனுல்
இம்முறைதான்
கர்த்தர்
நிச்சயமாக
உயிர்த்தெழப் போகிரு

ஒரு வேளை
நீ
திரும்பாமலே ...
இல்லவே இல்லை
கறுப்பு சூரியனே
மக்கள் திரும்புகிருர்கள்
நீயாக

பொன். இராசகோபால்

## குடும்பக் கட்டுப்பாடு

மேகப் பெண்ணே!
நீ ...
காலைவேளையிற்
கதிரவனின் பொற்
கிரணங்களைக்
கட்டித்தழுவிக் கருவுற்று
மாலைவேளையில்
மழையாகப் பொழிந்தாய்
இது அன்றைய நாள்கள்
ஆனுலின்றோ ...
தோன்றிய கர்ப்பத்தைப்
பாதியிலேயே
கலைத்துக் கொள்கிருயே
ஓ ...
நீயும்
குடும்பக் கட்டுப்பாட்டைக்
கற்றுக் கொண்டாயோ?

-தேவ. சேந்தன்

## வேண்டுகோள்

இனிய இளைஞர்களே!
ஒரு வேண்டுகோள்:
'தெருவில் நடக்கும் போது
ஜன்னற் பக்கம்
உங்கள் பெட்ரோல்'
பார்வைகளை வீசி விட்டுப்
போகாதீர்கள் !
ஏன் என்ருல்
அங்கே பல
சந்தனக் காடுகள்
மௌனமாக
எரிந்து கொண்டிருக்கின்றன

ப. உதயகுமார்

# வழிகாட்டும் ஒளிவிளக்குகள்

# வாழும் வழி

கவித்தமிழ்ச் செல்வி-தங்கம்மா அப்பாக்குட்டி

## உலகம் என்பது

உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே, என்பதற்கிணங்க செயற்கரிய செய்த பெரியவர்களையும், 'அறிவு நலம் படைத்த சான்றோர்களையும் குறித்து நிற்கும் சொல்லே உலகம் என்று கருதுதற்குரியது என்பது வெளிப்படை. இத்தகைய பெருமக்களின் பதிவேட்டில் எங்கள் பெயரையும் பதித்துக் கொண்டால் அதுவே நல்வாழ்க்கைக்கு வழிகாட்டும். நமது வாழ்க்கை வீட்டிலிருந்தே ஆரம்பிக்கிறது. பெற்றோர்களைப் பின்பற்றி வாழும் பயிற்சியை முதலில் தருகிறது. விருந்தினர்களை உபசரிக்கும் பண்பை வளர்க்கிறது. இத்தகைய பண்புகளோடு வாழ்ந்தால் நாம் சஞ்சரிக்கும் நாடும் அளப்பரிய நன்மைகளைப் பெற முடியும். மகாத்மாகாந்தி அடிகள் சிறு பராயத்திலே தன்னுடைய அன்னையையும், தந்தையையும் போற்றி அவர்கள் காட்டிய நல்ல பண்புகளோடு வளர்ந்தார். இதனாலே நாட்டின் மீட்சிக்கும் அல்லற்பட்ட மக்களின் துயர் துடைப்புக்கும் தன்னை அர்ப்பணம் செய்தார். ஒரு நாட்டிலே சான்றோர்கள் பலர் தோன்றுவதற்கு அத்திவாரம் இடுவது வீட்டு வாழ்க்கையே ஆகும். இதனையே பின்வரும் புறநானூற்றுப் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

'யாண்டு பலவாக நரை
யிலவாகுதல்
யாங்கா கியரென வினவுதி
ராயின்
மாண்டவென் மனைவியொடு
மக்களு நிரம்பினர்
யான் கண்டனையரென் னி
ளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு
மதன் தலை
' ஆன்றவிந் தடங்கிய
கொள்கைச்
சான்றோர் பலர் யான்
வாழுமூரே'.

எந்தநாட்டிலும் சான்றோர்கள் எனப்படுபவர் ஒரு சிலர் தான் இடம் பெறுகிறார்கள். ஆனால் மேற்காட்டிய பாடலில் சான்றோர் பலர் என்று குறிப்பிடப்பட்டிருப்பது பெருமைக்குரியது. எமது முன்னோர்கள் உலகம் என்றசொல்லினால் சான்றோர்களின் பெருமையைப் பல இடங்களில் காட்டியுள்ளனர். நரை திரை தோன்றுவதற்கு மனக் கவலையே முக்கிய காரணமாக அமைகிறது என்பது அனைவரது நம்பிக்கையுமாகும். ஆனால் ஆண்டுகளிலே மூப்படைந்தும் எந்தவித மனக் கவலையுமின்றி நரை திரையின்றி உள மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு புலவருடைய கருத்துக்கள் இவை. 'எனது மனைவி பெருங்குணம் படைத்தவள்'. மக்கள் நிறைவு நலம் பெற்றவர்கள், இளைஞர்கள் நல்லவற்றை எண்ணுகின்றவர்கள், மன்னவனோ பொல்லாப்பு எதுவும் அறியாதவன். இவை அனைத்துக்கும் மேலாக எனது நாடு சான்றோர் பலர் வாழுகிற நாடு. எனவே எனக்கு நரை தோன்றி வயோதிபம் தென்படுவதற்கு இடமில்லை என்று பிசிராந்தையார் என்ற புலவர் பாடுகிறார்.

## பெரியோரைப் பேணல்

வாழ்வின் சிறப்புக்கு முக்கிய அங்கமாக விளங்குவது பெருமக்களின் அறிவு, அனுபவம் ஆகியவற்றை மதித்து அவர் பின் நின்று வாழ்வதாகும். இறைவனுடைய ஆற்றலானது தகுதிவாய்ந்த சான்றோர்கள் வாயிலாகவே வெளிக்கொணரப்படுகிறது. தெய்வத்தோடு ஒப்ப எண்ணத்தக்க பெருமையும், சிறப்பும் இவர்களுக்குண்டு. இவர்களை நடமாடுங் கோயில்களாகஎண்ணி வழிபடவேண்டும். உலகம் நிலைபெறுவதற்கு இவர்களே காரணர்கள். இவர்களை இனங்கண்டு போற்றுவதற்குரிய அறிவும் நமக்கு வேண்டும். மழை நீரானது நிறமும், குணமும் அற்றது ஆனால் நிலத்தில் விழுந்த பின்பு நிலத்தியல்பைத் தன்னியல்பாக்கிக் கொள்கிறது. இதே போன்று நல்லவர்களின் சேர்க்கையும், தீயவர்களின் சேர்க்கையும் மனிதனை முறையே நல்ல வழியிலும், தீயவழியிலும் கொண்டு போய்ச் சேர்த்து விடும். வாழ்க்கையில் நல்லாரைக் காண்பது அவர்கள் சொற்கேட்பது, அவர்களைப் பற்றிப் பேசுவது, அவர்களோடு இணங்கி இருப்பது ஆகிய செயல்களை நன்று நன்று என்று முழக்கிச் சொல்லுகின்றார் ஔவையார். ஞானிகள் கூட நல்லாரிணக்கமும், தெய்வபூசையும் தமக்குக் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறார்கள். மந்தரையைத் தோழியாகக் கொண்ட கைகேயி பழியைச் சுமந்து நின்றதையும், சகுனியின் சொற்கேட்ட துரியோதனன் மாண்டு மடிந்ததையும் இதிகாசங்கள் காட்டுகின்றன. இதே நேரத்தில் வசிட்டனின் அறிவுரை கேட்ட இராமபிரான் போற்றப்பட்டதும், கிருஷ்ணபகவானின்தொடர்பு கொண்ட அர்ச்சுனன் உயர்வு பெற்றதும் நாம் அறிந்ததே.

## வினோபாஜியின் அறிவுரை

நாட்டின் அடித்தளம் நல்லவர் கையிலேயே தங்கியுள்ளது. ஆகையால் மக்கள் ஒவ்வொருவரும் தங்களைச் சரியாக்கிக் கொண்டால் நாடும் சரியாகிவிடும்.

வினோபாஜி அவர்களைச் சந்திக்கச் சில கல்லூரிமாணவர்கள் வந்தனர். சில காகிதத் துண்டுகளை அவர்களிடம் கொடுத்த வினோபாஜி, "இந்தத் துண்டுகளைக் கொண்டு பாரதத்தின் வரைபடத்தை உருவாக்குங்கள் பார்க்கலாம் என்றார்."

வெகுநேரம் அந்தத் துண்டுகளை வைத்துக்கொண்டு தலையைப் பிய்த்துக் கொண்டும் வரைபடத்தை அவர்களால் உருவாக்க முடியவில்லை. பக்கத்தில் அமர்ந்திருந்த ஓர் இளைஞன் இதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன், "நான் செய்து பார்க்கலாமா?" என்று வினோபாஜியிடம் கேட்டான். அவர் சரி என்றதும் சில நொடிகளில் வரைபடத்தை உருவாக்கிவிட்டான்.

"அது எப்படி இவ்வளவு சீக்கிரம் உன்னால் வரைபடத்தை உருவாக்க முடிந்தது?" என்று வினோபாஜி கேட்டார்.

இந்தத் துண்டுகளின் ஒரு பக்கம் பாரதத்தின் வரைபடம் இருந்தது. மறு பக்கம் மனித உருவம் வரைந்திருந்தது. நான் மனித உருவத்தைச் சரியாக உருவாக்கினேன். பாரத வரைபடம் மறுபுறம் தானாக உருவாகிவிட்டது" என்று அந்த இளைஞன் பதிலளித்தான்.

வினோபாஜி கூறினார் "அது தான் சரி" நாட்டை உரு

14ஆம் பக்கம் பார்க்க

# நீண்ட சிந்தனைக்காகக் 'கியூ'வில் நிற்கும் வி. பி. கருத்துக்கள்

1915 இல் பம்பாயில் காங்கிரஸ் மகாநாடு. காந்தி மார்வாடி வித்தியாலயத்தில் தங்கியிருந்தார். ஒரு நாள் மிகுந்த கவலையுடன் எதையோ தேடிக் கொண்டிருந்தார். அவருடன் இருந்த காலேல்கர், "பாபுஜி என்ன தேடுகிறீர்கள்?" என்றார். "பென்சில் ஒன்று; சிறியது" என்றார் காந்தி தன்னிடம் இருந்த பென்சில் ஒன்றைக் கொடுத்தார் கலேல்கர்.

"உனக்குத் தெரியாது. அந்தப் பென்சில் எனக்கு மதராஸில் நடேசனுடைய சிறிய பையன் கொடுத்தது. அவன் எவ்வளவு அன்புடன் கொடுத்தது தெரியுமா? அதை நான் தொலைப்பதாவது .." என்றார் காந்தி. பிறகு இருவரும் சேர்ந்து அந்தப் பென்சிலைத் தேடிக் கண்டு பிடித்தார்கள். அது ஒரு அங்குல நீளத்திலும் குறைவாக இருந்தது.

"அன்பகத் தில்லா உயிர்
வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த்தற்று"
என்பான் வள்ளுவன்.

வி.பி.யின் நூலில் "அன்பு செய்யுங்கள்" என்ற பக்கத்தை வாசித்துவிட்டு(ப-46) ஆழ்ந்த சிந்தனையில் இருந்த எனக்கு நினைவு வந்த பல விடயங்களிற் சில இவை.

வி. பி (வின்சன்ற் பற்றிக் அடிகளார்) 'நான்' சஞ்சிகைக்காகவும், பாதுகாவலன்) இதழ்களுக்காகவும் 1980 முதல் 1988 வரை எழுதிய பல்வேறு ஆசிரியத் தலையங்கங்களின் தொகுப்பு அல்லது இளம் உள்ளங்களுக்கு அவர் அவ்வப் போது எழுதிய கடிதங்களின் தொகுப்புத்தான் இந்த நூல்.

"சமய போதனைகளைச் சமூகப் பார்வையுடன் அணுகும் இவரது புதிய அணுகு முறைகள்" என்று யாழ். அ.ம.தி முதல்வர் ஹாயி பொன்னையா அவர்கள் இந்நூலின் 'ஆசியுரை' யிற் கூறுவது அர்த்தமுள்ள கூற்றுத்தான் என்பதை நான் இந்நூலுக்குள்ளே நுழைந்த போது உணர்ந்தேன்.

'பழிக்குப் பழி வாங்கின்
பயங்கரம் தொடரும்'
பகைவனை மன்னிப்பின்
அமைதி நிலவும்

என்று 1985 பங்குனியில் எழுதியிருக்கிறார் வி. பி. கடிகாரம் இரவு நேரத்தில்' டிக் டிக் டிக் டிக்' என்று ஒலிப்பதைக் கேட்டுக் கொண்டே நாம் உறங்கிப் போவதுபோலல்லாமல் இந்த வரிகள் எமது நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் காதிலும் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று நான் நினைத்தேன்.

பைபிளில் இருந்து மட்டும் கோட்பாடுகளை எடுத்துக் கொண்டு அதன் அடிப்படையில் இவரது அறவுரைகள் அமைந்திருந்தால் ஆச்சரியப்படுவதற் கொன்றுமில்லை. ஆனால் அவர், கண்ணதாசனையும் காண்கிறார்; கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தையும் காட்டுகிறார் திருமூலரில் இருந்தும் உதாரணம் வருகிறது; விபுலானந்தரையும் உதவிக்கு அழைக்கிறார். சுவீடன் நடிகை இங்கிரிட் பொக்மேனின் வாழ்வையும் பார்க்கிறார்; உளவியல் அறிஞர் அட்லர் சொல்வதையும் கேட்கிறார்.

சில சமயங்களில் அறவுரையை ஒரு கவிதையாக எழுதிப் பார்க்கிறார் (ப-66). சில சமயங்களில் ஒருவரின் பழக்க வழக்கம் மூலம் அவரது இயல்பைக் காட்ட முனைகிறார் (ஆடை கழற்றுதல் ப-63) கண்டிக்க வேண்டியதைத் துணிச்சலுடன் கண்டிக்கிறார் (15,000 கத்தோலிக்கர் ஊர்வலம் போனமை ப-62), பாராட்ட வேண்டியதை மனந்திறந்து பாராட்டுகிறார் (அந்தரிக்கும் ஆன்மாக்கள்-ப-55) ஒரு வேளை சூழலின் அரசியல் நிலையால் பாதிக்கப்பட்டு எழுதுகிறார். இன்னொருவேளை தனது தலையங்கம் 'காலத்தின் டயரி' ஆகுமாறு கவனிக்கிறார் (குரும்பசிட்டி கொள்ளை: மன்னார் கொலரா) மற்றொரு சமயம் தனக்கு வந்த சில கருத்துக்களுக்குப் பதிற்கடிதம் போல எழுதுகிறார் (தனித்துவம்) அருமையாக மருத்துவக் குறிப்பும் எழுதிவிடுகிறார். (தடிமன்) இந்தப் பல்வகைமை(variety) இந்த நூலுக்கு ஒரு தனி அழகைத் தருகிறது.

## கோகிலா மகேந்திரன்

'உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட மனிதனை மற்றவர்களிற் காண முற்படுதல் முறையன்று'

'ஒருவனது மாறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டு அவனைப் புறக்கணியாதிருப்போம்'

'குறைகளை நிறைவுபடுத்தும் தைரியம் எம்மிடம் இல்லை என்றால் குறைகளைப்பற்றிய பேச்சே வேண்டாம்'

> **நூலகம்**
>
> நூல்: 80-ல் இருந்து 88 வரை
>
> ஆசிரியர்: வி. பி.
>
> வெளியீடு: 'நான்', (1989 யாழ்ப்பாணம்)
>
> விலை: ரூபா 15/-

'வார்த்தை + வாழ்க்கை = மனிதன்' போன்ற அவரது கருத்துக்கள் நீண்ட சிந்தனைக்காக எமது மனதிற் 'கியூ'வில் நிற்கின்றன.

'போலியான வேலிகள் காலியாகட்டும்'

'சோதனையிலும் சாதனை புரிந்து வேதனையிலும் தீதனை வென்று நாதனை வேண்டி நல்வினை செய்வோம்'

போன்ற இடங்கள் மொழி அவரிடம் கைகட்டிச் சேவகம் செய்வதைக் காட்டுகின்றன.

இந்த நூலில் வருகின்ற பல விடயங்களில்' அவசியம் தானா? நல்ல நண்பன் யார்?' போன்ற பல கடிதங்கள் கருத்தைக் கவருபவையாக இருந்த போதிலும் இத்தொகுப்பின் உச்சம் என்று சொல்லத்தக்க கடிதம் இறுதியாக அமைந்துள்ள மகிழ்வின்மலர்வு என்பதுதான். ஒரு சம்பவத்தைக் குறிப்பாகச் சொல்லி அவர் தரும் அச் செய்தி அச்சொட்டாக மனதிலே பதிகிறது. அந்த வகையில் 1980 முதல் 1988 வரையிலான அடிகளாரின் தனிப்பட்ட வளர்ச்சியையும் இது காட்டுவது போல எனக்குப் படுகிறது.

சில கடிதங்களில் மட்டும் 'இந்த இதழில்' இன்னார் இதை இப்படி எழுதுகிறார். போன்ற விடயங்கள் வருகின்றன அவை அந்த இதழுக்குத் தலையங்கம் எழுதும் போது எழுதப்பட்டது சரி. தொகுப்பிலே அவை கருத்தற்றவையாக இருக்கின்றன. அக்கடிதங்களை முற்றாக நீக்கியிருக்கலாம் அல்லது குறிப்பிட்ட வசனங்களை நீக்கி 'எடிற்' பண்ணியிருக்கலாம். அச்சு அரக்கனை பற்றி 'ஆசிரியர் மிக விழிப்பாக இருக்கிற போதிலும் ஒரு சில இடங்களில் (ப-33 வரி 17, ப-39 வரி 10) அவன் தன் கொடுமையைக் காட்டப் பார்க்கிறான்.

அட்டைப் படத்தை ஆற்றலுள்ள ஓவியர் 'ரமணி' வரைந்திருக்கிறார். ஆனால் ரமணியின் திறமைமுழுமையாக இங்கு வெளிப்படவில்லை.

"நான்" சஞ்சிகையைச் சில வருடங்களுக்கு முன் எனக்கு அறிமுகம் செய்தார். என்னை விடப் பத்து வயது குறைந்த எனது மாணவர் ஒருவர் என்ற உண்மை இளைஞர் மத்தியில் சமய வேறுபாடின்றி இச் சஞ்சிகைக்கு உள்ள வரவேற்பை உறுதி செய்யப் போதுமானது.

இந்நூலிற் கூறப்பட்ட விடயங்களை இதை விட அழகாகக் கூறமுடியாது என்று சொல்லாவிட்டாலும் சமுதாயத்திற்குச் சொல்லவேண்டிய பல விடயங்கள் இங்கு இரத்தினச் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன என்ற உண்மை மறுக்கப்பட முடியாதது.

வாசிப்பவனுக்கு ஐந்து சதத்துக்கும் பயனற்ற நூல்கள் பல இருப்பத்தைந்து ரூபா என்றும் முப்பது ரூபாவென்றும் விலை போகும் காலத்தில் தொண்ணூற்றிரண்டு பக்கங்களில் நல்ல கருத்துக்களைக் கொண்ட பயன்மிக்க இந்த நூலைக் கட்டாயம் பதினைந்து ரூபாவுக்கு வாங்கலாம்; மாணவருக்குப் பிறந்த நாட் பரிசாகவும் கொடுக்கலாம்.




கே.எஸ்.ஆனந்தன்

## அத்தியாயம் பத்தொன்பது

நீலக் கடலலைகளுக் கிடையே சிக்கித் தவிக்கும் சிறு ஓடம் போல மேல்வானில் முகில் கூட்டங்களிடை ஐந்தாம் பிறை நிலா நீந்திக் கொண்டிருந்தது. வீட்டிற்கு பின்புறமுள்ள கிணற்றுக் கட்டில் உட்கார்ந்திருந்தார் மாசிலாமணி. அவருக்கு முன்பாக அவரைப் பார்த்தவாறே சந்திரஞானம்மாவும் இருந்தாள்.

'ஞானம்'

'ம்'

'தங்கையிடம் ஏதாது கூறிஞயா?'

'யாழ்ப்பாணம் போவதாக மட்டும் தான் கூறியிருக்கிறேன். சிந்து கூறிஞளோ என்னவோ தெரியாது'

'மருமகனும் உங்களோடு வருகின்ருரா?'

அவரும் வாருராம்'

மூடுமந்திரமாக எதையும் வைத்துக் கொண்டு மனம் புழுங்கிச் சாவதை விட அவர்கள் தெரிந்து கொண்டால் எல்லாம் சரியாகி விடும். நாம் அதற்கா பயந்தோம்? தங்கையின் வாழ்வில் பாதிப்பு ஏதும் ஏற்பட்டு விடுமே என்று தான். மகாராசஞய்மாப் பிள்ளை சகலமும் அறிந்தவன். ஏன் பயப்பட வேண்டும்'

'உணர்ச்சி வேகத்தில் நாம் நடந்து கொண்டு விட்ட செயல் அப்போ எங்களுக்கு நியாயமாகத் தெரிந்தாலும் இன்று நினைக்கும் போது பெருந்தவருக தோன்றி மனத்தை உறுத்துகின்றதே. அவள் என்னை ஏதும் கேட்டு விட்டாலும் என்று தினம் தினம் துடித்துச் சாகிறேன். என்மனம் நிம்மதியில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறதே' என்ருன்.

'ஞானம் கறந்தபால் முலை ஏறுமா?'

இனி நடப்பதை காண்போம் இன்னும் பதினைந்து நாள். திருமணம் முடிந்தால் அவள் புருஷஞேடு போய் விடுவாள்'

'அவள் இங்கேதானே யிருப்பாள்'

'அவர்களை இங்கே விட்டிட்டு நாம் ஊரோடு போய் விடுவோம்.

'நிலவுக்கு ஒழித்துநாட்டை விட்டு ஓடின கதை தெரியும் தானே?'

'பைத்தியக்காரி. நீ ஏன் பயந்து சாகிருய்? இப்ப என்ன நடந்திட்டுது. நல்ல விடயங்கள் தானே? பேசாமல் போய்வா' என்று கூறி விட்டு வீட்டிற்குள் சென்ருர் மாசிலாமணி. சந்திரஞானம் அவரைப் பின்தொடர்ந்தாள்.

அதே சமயம் நல் ஊரில் உள்ள சிந்துவின் வீட்டில் ஒரே கலகலப்பு, மகிழ்ச்சியுமாக விடே குதூகலமாக இருந்தது. சிந்து அன்று மத்தியானமே புறப்பட்டு வீடு வந்து சேர்ந்தாள். பெற்ருேர்களிடம் விடயத்தை கூறி விட்டாள். அவர்களுக்கும் மகிழ்ச்சிதான். எப்போ விடியும்? அவர்கள் வருவார்கள் என்று விஞடிக்குவிஞடி அவள் மனம் ஏங்கித் தவித்தது.

கடைசி நிமிடம் வரை ரகுவிடம் எதுவுமே சொல்லாமல் வந்து விட்டதை எண்ணி மனம் வருந்திஞளாயினும் சமரசிங்காவின் வேண்டுகோளை மீற முடியாத நிலையில் தான் செயற்பட்டதை நினைத்து மனம் தேறிஞள்.

முதல் நாள் சந்திரஞானம் கூறிய கதைகளால் அவள் அதிர்ச்சியடைந்திருந்தாள். ஆயினும் கலக்கமடையவில்லை. மனத்திற்கு இனிய செய்திகள் தான். ஆஞலும் அவற்றுள் மறைந்திருந்த பாரதூரமான விடயங்கள்.........மறைக்கவர்ச்சி நாவல்களில் வருவது போல இருந்ததை எண்ணி வியப்படைந்தான்.

அன்று காலை எதிர் வகுப்பிற்கு கணிதபாடம் நடந்து கொண்டிருந்தது. வீட்டிற்கு போகும் நிலையில் மாணவர்களைப்படிக்கும் படி கூறிவிட்டுச் சிந்தனையிலாழ்ந்திருந்தாள் சிந்து. கரும்பலகையில் நேர்க்கோடு ஒன்றை வரைந்த ஆசிரியர் மேலிருந்து கீழாக ஓர் கோட்டினை குறுக்க வரைந்தார். இருகோடுகளும் சந்திக்குமிடத்தில் கோட்டின் சாய்வுக்கு ஏற்ப இரு சிறு கோணமும், அதன் அருகே இன்னெரு கோணமும் அடையாளமிடப்பட்டன. ஒரு நேர் கோட்டில் இன்னெரு கோடு சந்திக்க நேரிடுகையில் கோணங்கள் அமைவதையும் அவைக்குள்ள தொடர்பினையும் விளக்கம் செய்யும் போது கேட்டுக் கொண்டிருந்த சிந்துவிற்கு சிரிப்புத்தான் வந்தது.

எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து, எங்கோ படித்து வேலை பார்க்க வென்று வந்த இடத்தில் எங்கேயோ தங்க நேரிட்டதையும் தன் வாழ்வோடு பிணைத்த உறவுகளால் சொந்த பந்தங்களாகப் போவதையும் நினைத்தபோது இறைவனுடைய கணித பாடத்தில் மனித வாழ்வுகள், பிணைப்புக்கள், சொந்தபந்தங்கள் எல்லாம் ஏற்கனவே எழுதிவைக்கப்பட்டவை போன்று நடைபெறுவதாகவே நம்பிஞள் அவள் நம்பிக்கை வீண் போகாது உறுதிப் படுத்தப்பட்ட நிலையில் இனிய கனவுகளோடு உறக்கத்திலாழ்ந்தாள்.

அதே சமயம் ரகுவின் சிந்தனைகள் யாவும் தன் வாழ்க்கைத் துணைவியாக வரப் போகும் சிந்துவைச் சுற்றி வட்டமிடவில்லை. தன்னை ஆளாக்கிய சமரசிங்கா தன் தந்தையைப் பற்றிக் கூறிய விடயங்கள் அவன் மனதில் புதியதோர் அலையைத் தோற்றுவித்தது.

தன் தந்தையினுடைய குணங்களே தனக்கு வழிகாட்டியதாக சமரசிங்கா கூறியதையும், அந்தக் குண இயல்புகளே தன்னிடம் இரத்தத்தோடு ஊறியிருப்பதாய் தனக்குப் புகட்டிய அறிவுரையையும் கேட்டபோது தந்தை மீது இதுவரை காலமும் இல்லாத ஓர் பாச உணர்வு அவன் உள்ளத்தில் முளைவிட்டது. நிழலாகத் தெரிந்த ஓர் உருவம் அவன் மனதில் தோன்றியது. தந்தை என்ற ஒருவர் மீது எத்தனை வெறுப்பும் அருசையும் கொண்டிருந்தாஞே அத்தனையும் மறைந்து அவனுள் ஒரு ஏக்கமாகத் தோன்றியது. தன் மகனை பார்ப்பதற்கென்று ஒரு நாளாவது முயற்சித்தாரா? தந்தையைப் பற்றிய நினைவுகளை நான் ஏன் சுமக்க வேண்டும் என்றெண்ணிய பொழுது மீண்டும் வேதாளம் முருங்கை மரமேறிய கதையாகி விட்டது.

சிறி கூறிய விடயங்கள் மனதுக்கு இதமாக இருந்தன. சமரசிங்கா வியாபார தந்திரம் போல எதையும் நுட்பமாக கிரகித்து செயலாற்றும் அபாரத்திறமைகளை வாழ்விலும் கடைப்பிடித்து எதையும் சாதனைகளாக்கி காட்டும் துணிச்சலுள்ளவர் என்பதை சிந்து விடயத்தில் நொடிப் பொழுதில் காட்டி விட்டார். தன்ஞலே ஊகித்து அறிய முடியாத ஒன்றை சில விஞடிப் பொழுதில் அவள் வாயாலே கூறவைத்திருந்த தந்திரோபாயத்தினை எண்ணி வியந்தான். எதையும் நேரிடையாகவே கேட்கும் எனக்கு ஏன் அப்படி ஒரு துணிவு ஏற்படவில்லை. தானே சிரித்துக் கொண்டான்.

✶

நல் ஊர்கந்தசுவாமி கோயில் ஆலயமணி உச்சிக்காலப் பூசைக்காக ஒலித்த வேளையில் கோவில் கிழக்கு ரோட்டால் வந்து திரும்பிய காரைநிறுத்தி இறங்கிய சிறி "ரகு மத்தியான பூசை நடைபெறப் போகின்றது வணங்கி விட்டுப் போகலாமே" என்ருன்.

"ஆமாம் தம்பி இறங்குங்கோ" என்று சந்திரஞானம்மாவும் கதவைத் திறந்து இறங்கியதும் சமரசிங்காவும் "முருகா" என்றவாறு இறங்கிஞர்.

"அங்கிள்" என்ருன் ரகு

"என்னப்பா?"

"நீங்கள்......?"

"நான் கிறிஸ்டியன். முருகன் தெய்வமப்பா. அவரை யாரும் வணங்கலாம். அவருக்கு மதபேதமில்லை. நாம் எல்லாம் அவர் குழந்தைகளே" என்ருர். "அங்கிள் நீங்கள் அதிகம் படிக்கலை என்ருலும் சாக்கிரடீஸ் போன்ற ஓர் தத்துவ ஞானி" என்ருன் சிறி

"தத்துவ ஞானியா? தத்துவப்பித்து ஞானியா?" என்று சிரித்துக் கொண்டே கோயிலைச் சென்றடைந்தனர்.

அடியார்கள் வினை தீர்க்கும் ஆறுமுகப் பெருமாள் சந்நிதிக்குள் நுழைந்ததுமே ஒரு பரவசநிலை ஏற்படுவதை உணர்ந்தான் ரகுவரன். இதுவரை அவன் எந்த ஒரு ஆலயத்திற்கும் சென்று வழிபட்டதில்லை. தன்னுள்ளே ஆலயம் அமைத்து ஆண்டவனை வழிபட்டானேயன்றி ஆலயம் செல்ல நினைத்ததில்லை. இன்று சூழ்நிலை அவனை மாற்றியமைத்து விட்டபோது ஆலய தரிசனத்தின் அருமையை யறிந்துணரும் பேறு பெற்ருன். கலியுக வரதஞன கந்தவேல் அவன் அறிவுச் சுடரோடு சுடராக பேரொளி வீசி நின்ருர். அவனுடல் சிலிர்க்க உள்ளம் நெகிழ "முருகா, முருகா" என்ருன். விழிகளில் ஆனந்த அருவி உதிர்ந்தோடியது.

கோயிலை விட்டு வெளியே வரும்வரை யாருடனும் அவன் எதுவும் பேசவில்லை. பிரசாதம் பெற்றுக் கொண்ட சந்திரஞானம் அவன் நெற்றியில் விபூதி பூசி சந்தனத் திலகமிட்டபோதும் அவன் மௌனமாகவே நின்றிருந்தான்.

"ரகு! என்னப்பா எதுவுமே பேசாமல் வாறியே. உன்னுடைய செய்கைகளை மாற்றி விட்டோம் என்று கோபமா?"

"அங்கிள் நல்லன நடக்குமென்ருல் என் கொள்கையை மாற்றவல்ல அப்படியே தாக்கி எறியவும் தயங்க மாட்டேன். உங்கள் வார்த்தையை மீறக் கூடாது என்றுதான் உள்ளே வந்தேன். என்னுள்ளத்தை உருக்கி ஆனந்த மயமாக்கி விட்டான் அந்த முருகன். அம்மா நெற்றியில் திலகமிட்ட போதுதான் என்னுணர்வே எனக்கு திரும்பியது" என்ருன்.

தொழிலுக்கு வரும்வரை உள் நோக்கமெல்லாம் ஒரு குருத்துடன் வளரும் செடி போல உயர்ந்தே வளந்திடுது இனி அப்படி வாழ முடியாதப்பா. பல கிளைகளையுடைய நிழல் தரு மரமாகிவிட்டாய் நீ விரும்பினும்— விரும்பாவிட்டாலும் உன்நிழலில் ஒதுங்கவே பலரும் வருவர். பன்னிருகரமும் ஆறுமுகம் முருகனுக்கு ஏன்? இருகரமும் போதாதா? நம்மைப் போன்ற பிற மதத்தவர்களே அவரை நாடிவரும்போது நான்குதிசையிலுமிருந்துவரும் பாபப்பட்ட ஜென்மங்களை அருள் பாலிக்கவேதான் முருகன் அப்படி ஓர் உருவெடுத்தார் என்ருர்.

'ஸ்பிலன்டிட் அங்கிள்' என்று சிரித்தான் சிறி.

'ஏன் தம்பி சிரிக்கிறே'

'அங்கிள் கந்தபுராணம் எழுதிய கச்சியப்பருக்கே புரியாத விடயங்களை நீங்கள் கூறும் போது எப்படிப் பாராட்டமலிருக்க முடியும்' என்ருன் சிறி 'தம்பி நீங்கள் சினிமா பார்க்கிற நீங்கள் தானே? எம்.ஜி ஆர். ஒரு படத்திலே பாடியிருக்கிருர் சிரித்து வாழவேணும் என்று துன்பத்திலும் சிரித்து வாழ நாம் பழகிக்கொண்டால் துன்பத்தின் நிழலே படியாது நாம் வாழ்ந்து விடலாம்' என்று கூறிக் கொண்டிருக்கும் போது சிறி டிரைவரிடம் ஏதோ கூறிஞன் வண்டி மெதுவாகி நின்றுகொண்டது.

சிந்துவின் தகப்பன் பாலசிங்கம் தாய் பரமேஸ்வரியும் வாசலில் வந்தே அவர்களை வரவேற்று அழைத்துச் சென்றனர். சிறியே அவர்களை சமரசிங்காவிற்கு அறிமுகம் செய்து வைத்தான்.

'என்னதம்பி என்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்தவில்லையே' சிரித்துக்கொண்டே கூறிஞர் சமரசிங்கா.

'உங்களை அவர்களே தெரிந்து வைத்திருப்பார்கள் அங்கிள். நான் கூற வேண்டிய அவசியமே இல்லை' சிறி.

'வாங்க உட்காருங்க' என்ருர் பாலசிங்கம்.

'நல்லது நீங்களும் இப்படி இருங்கோ' என்று பாலசிங்கத்தை தன்னுடன் உட்கார வைத்துக் கொண்டார்.

'நாங்கள் ஏன் வந்தோம் என்ற விடயம் சிந்து கூறியிருக்கலாம் என நம்புகிறேன். உங்கள் அபிப்பிராயங்களை அறிந்து கொண்ட பின்பு தான் நாங்கள் எதனையும் தீர்மானிக்கலாம். என்ன தம்பி சிறி பேசாமலே உட்கார்ந்து விட்டாய் என சிறியைப் பார்த்து சிரித்துக் கொண்டே கேட்டார் சமரசிங்கா.

'நீங்கள் பெரியவர்களாக பேசும் போது... ' என்று நிறுத்திஞன் 'மிஸ்டர் சமரசிங்கா எங்கள் வரவேற்பே உங்களுக்கு நிலைமையை உணர்தியிருக்கும். ஆண்டவன் அருளால் இனிதே நிறைவேற வேண்டும் என்பது தான் எனது ஆசை. எனக்கு இரு பெண்கள். மூத்த பெண் டாக்டரை மணந்து கொண்டு லண்டனிலிருக்கிருள். சிந்து இரண்டாவது பெண் இந்த வீடு காணியும் சிந்துவுக்குதான் மூன்று லட்சம் ரூபா பணம் சிந்துவின் பெயரிலே பாங்கில் இருக்கு இவைதான் நாங்கள் கொடுக்கூடிய சீதனம் இப்படி ஒரு மாப்பிள்ளை சிந்துவுக்கு கிடைக்க தெய்வசித்தம் தான் துணைபுரிந்திருக்கின்றது. இதைத் தவிர நான் சொல்லக்கூடியது எதுவும் இல்லை என்ருர் பாலசிங்கம்.

சுங்கப் பகுதி கலக்டராக இருந்து ஓய்வு பெற்ற அதிகாரியான பாலசிங்கம் சுச்சிதமாகவும் வேறு கேள்விகளுக்கு இடமின்றி தன் பதிலையும் சம்மதத்தையும் விளக்கமாகவே கூறிவிட்டார். சமரசிங்காவால் எதுவும் பேச முடியவில்லை.

'அங்கிள் நீங்கள் ஒன்றும் பேசாமலிருக்கின்றீர்களே' என்று அவரது வாயைக் கிளறிஞன் சிறி.

'அவர் ஓய்வு பெற்றவராயினும் ,கஸ்டம்ஸ் ஆபீசராயிருந்தவரல்லவா ஒரே பதிலில் யாவையும்கூறிவிட்டார். சரிசந்தோஷம். நம்ம பையனுடைய வரலாறுபூரா உங்களுக்கு தெரிந்திருக்கலாம் அவன் பெயரிலே ஒரு கொக்கோ எஸ்டேட் கண்டியிலிருக்கும் பேராதனையில் அரை ஏக்கர் நிலத்தில் ஓர்பங்களாவும் இருக்கு அந்தவீட்டு வாடகைப் பணத்திலேதான் அவன் படித்து முன்னுக்கு வந்தான் என் மகளுக்குரிய சொத்துக்களைப் போல ரகுவுக்கும் சரிபாதி கொடுத்திருக்கின்றேன். என்னுடைய வியாபாரஸ்தாபனம் என் மனைவிக்குரியது அதுதான் எனக்கும் மனைவிக்குமாக இருக்கின்றது. எங்களுக்கு பிற்காலம் என் மகளுக்கே உரியதாஞலும் என் மனைவி நந்தா தன் பிள்ளைக்கு வரப்போகும் பெண்ணுக்காக இரண்டுலட்சம் பெறுமதியான நகைகளும் வைத்திருக்கிருள். நீங்கள் பெண்ணுக்குரிய ஆஸ்திபற்றிக் கூறியதால் நானும் இதுவரை ரகுவுக்கே தெரியாதிருந்த விடயத்தை உங்களிடம் கூறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. எங்கே பெண்ணைக் காணேம்? என்ருர்.

'சிந்து' என்று பாலசிங்கம் அழைத்தார்.

சில்வர் தட்டில் குளிர்பானங்கள் எடுத்துக் கொண்டு வந்த சிந்து அவற்றை தாயிடம் கொடுத்துவிட்டு சமரசிங்காவின் கால்களில் விழுந்து கும்பிட்டாள்.

'நல்லாயிருக்கணும் அம்மா' என்று ஆசீர்வதித்தார் சமரசிங்கா.

அடுத்து அவள் சந்திரஞானம்மாவின் பாதங்களில் வீழ்ந்து வணங்கியபோது ஞானமே அதிர்ந்துபோஞள்.

'என்னம்மா இது?' என்ருளாயினும் அவள் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் ததும்ப அவளைத் தூக்கி அணைத்து உச்சி மோந்தாள்.

அதன் பின்பு ரகுவின் பாதங்களில் வீழ்ந்து வணங்கிஞள். ரகுவிற்கு என்னசெய்வதென்று புரியவில்லை. ஒரு கணம்தான் தயங்கிஞன். மறுகணம் சமரசிங்காவை பார்த்தான் அவர்சிரித்துக்கொண்டே எழுந்திரம்மா, அவன் பயப்படுகிருன். அவன் காலைப் பிடிப்பதை விட்டு கையைப் பிடிச்சுக்கோ, ஆண்டவன்

14ஆம் பக்கம் பார்க்க

**வளரும் பயிருக்கு...**

# தேவ வாழ்க்கை

மகாபாரதப்போர்மூண்டுவிட்டது. நல்லமுகூர்த்தத்திற் களப்பலி கொடுத்தாற் போரில் வெற்றிகாணலாம். துரியோதனன் நேரே சகாதேவனிடம் போகிறான்; நல்ல முகூர்த்தம் வைத்துத்தரும்படி கேட்கின்றான். துரியோதனனுடைய தேவையைச் சகாதேவன் மாசுமறுவின்றிப் பூர்த்தி செய்து விட்டான். மூன்றாம் ஆளுக்குத் தெரியாமல் அர்த்த யாமத்திற் காரியம் நடந்துவிட்டது. துரியோதனனுக்குப் பெரிய புளுகு. காரியங்களை யாரும் தெரிவிக்காமல் தெரிந்துகொண்டிருப்பவன் கள்ள மாயவன்; கிருஷ்ணன். அவனுக்கு யார்தான் எதனை எப்படி மறைக்க முடியும்!

அடுத்த நாள் மகாபாரத யுத்தம் பற்றி ஒரு மகாநாடு. தருமர் தலைமைவகிக்கின்றார். ஸ்ரீ கிருஷ்ணன் எழுந்து பேசுகின்றான்:

“ஓ! தருமபுத்திரரே! யான் இதோ துவாரகைக்குப் புறப்படுகின்றேன்; இந்த யுத்தத்தில் யான் பங்குபற்ற விரும்பவில்லை. இது ஒரு குடும்ப யுத்தம்; சகோதரர்களுக் கிடையிற் பிரிவினை செய்து, ஆவசியகமின்றி யான் பழிசுமக்கப் போவதில்லை. நீங்களோ உள்ளாளும் கள்ளாளுமாய் நட்புச் செய்துகொண்டிருக்கிறீர்கள்! நான் இதோ மூட்டை முடிச்சுக்களுடன் புறப்பட்டுவிட்டேன்.”

இது கிருஷ்ணன் பேச்சு. சபை திகைக்கின்றது ‘நடு உழவில் நந்தை அறுவதா?’ என்று எல்லாரும் முணுமுணுக்கிறார்கள். தருமபுத்திரருக்குப் புத்தி சுழலுகின்றது. அவர் தம்பிமார் ஒவ்வொருவரையும் தனித்தனி “நடந்ததென்ன?” என்று விசாரிக்கிறார். சகாதேவன் சபைநடுவில் எழுந்து நிற்கின்றான். சபை முழுவதும் அவன் முகத்தை நோக்குகின்றது. கள்ளக் கிருஷ்ணன் மாத்திரம் கண்களை

பண்டிதமணி
**சி. கணபதிப்பிள்ளை**

மற்றொருபுறம் திருப்பிக் கொண்டு கோபக்குறியுடன் இருக்கின்றான்.

சகாதேவன் — நடந்ததை— தான் முகூர்த்தம் வைத்துக் கொடுத்ததை— தலையிலிருந்து கால்கள் வரை சொல்லிவிட்டான்.

சபை முழுவதும்மௌனம் தாண்டவம் ஆடினது. கண்களில் நீர் பெருக— நாத்தழுதழுக்க — தருமர் எழுந்து சகாதேவனைத் “தம்பி” என்று அன்பு கனிந்து ஒழுக அழைத்து, அவனைக் கட்டித் தழுவி, உச்சி மோந்து, ஆனந்த பாஷ்பத்தால் அபிஷேகம் செய்து, “நீதான் என் உடன்பிறப்பு; நீ எங்கள் குலதர்மத்தைப் பாதுகாத்தாய்; நாங்கள் தரும தேவதையின் திருநோக்கத்துக்குப் பாத்திரராய் விட்டோம். இனிப் பாரதத்தில் வெற்றி நமக்கே!’ என்று மகிழ்ந்தார்; வாழ்த்தினார்.

இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்ட கண்கள், வழிந்தொழுகும் கண்ணீரை ஒருவாறு நீந்திக்கொண்டு மூட்டை முடிச்சுக்களுடன் புறப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணனை அப்பால் நோக்கின.

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா திடீரென்று எழுந்து, இரண்டு திருக்கரங்களையும் தருமபுத்திரன் சிரசின் மேல் வைத்து ‘ஓ தரும சொரூபியே! நீ மகாத்மா; உன் பிறப்பால் தருமம் வாழ்ந்தது; அறம் வாழ்க! மகா பாரதத்தில் வெற்றி உனக்கே!’ என்று ஆசீர்வதித்து ஆனந்த பாஷ்பம் சொரிந்து கொண்டு நிற்கின்றார்.

தருமர் மனித வாழ்க்கைக்கு மேலே— எதிரியாகிய துரியோதனனுடைய தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்வதிற் சிறிதேனும் பின்வாங்காமலே— வாழ்ந்தார். அதுவே தேவ வாழ்க்கை.

‘வையத்துள்வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்
படும்.’

இது வள்ளுவதேவர் வாக்கு.

நன்றி: சி. சதாசிவம்

# தெய்வம் செய்வதெல்லாம் நன்மையே

நாம் விரும்பியபடி ஒன்றைப் பெறும்போது நம்மனத்திலே இன்பம் உண்டாகின்றது. நாம் மாம்பழம் தின்ன விரும்பும்போது அது கிடைக்குமாயின், இன்புறுகின்றோம். கள்ளுணவை விரும்புகிறவன் அதைப் பருகும்போது இன்புறுகின்றான் அன்றியும் நாம் விரும்பமாட்டாத ஒன்று நம்மைச் சேராவிட்டாலும் நாம் இன்புறுகின்றோம். களவு செய்தவன் அகப்படாமல் தப்பி விட்டானாயின் மிகவும் சந்தோஷப்படுகின்றான்.

இப்படியின்றி, நாம் விரும்பிய ஒன்று கிடையாவிட்டாலும் விரும்பாதது வந்துசேர்ந்தாலும் துன்பம் உண்டாகிறது. எனக்காயினும், என்னைச் சேர்ந்தவர்க்காயினும், என்னுடைய பொருளுக்காயினும் இடர் நேர்ந்தால் துக்கம் உண்டாகின்றது. யாராயினும் இடர் செய்தால் அவரிடத்திலே கோபம் உண்டாகிறது. ஏதாயினும் இடர் வரப்போகிறதென்று கண்டால் அச்சம் உண்டாகின்றது.

சைவ வாழ்க்கையிலே துன்பத்துக்காயினும், துக்கத்துக்காயினும், கோபத்துக்காயினும், அச்சத்துக்காயினும் இடம் வராது. பச்சைக் கண்ணாடியை அணிந்துகொண்டு எதைப் பார்த்தாலும் அதுபச்சையாகவே தோன்றும் வெண்மையான பாலும், செம்மையான இரத்தமும், நீலமான ஆகாயமும்,கரியதாகிய காகமும் பச்சையாகவே தோன்றும். அதுபோலச் சைவமாகிய கண்ணாடியாற் பார்த்தால், யாவும் உவப்பானவைகளாகவே தோன்றும். நான் விரும்பிய பொருள் கிடையாவிடில் துன்பமில்லை; எனது கப்பல் ஆழ்ந்து போனால் துக்கமில்லை: என் குழந்தை இறந்துபோம் என்று அஞ்சுவதில்லை; என் பயிரை அழிப்பவனைத் தடுத்தலும் கண்டித்தலுமேயன்றிக் கோபித்தலில்லை.

சைவ சமயத்தின்படி நாம் ஆணவமென்னும் வியாதியினாலே பீடிக்கப்

சைவப் பெரியார்
**சு. சிவபாதசுந்தரம் B.A.**

பட்டிருக்கின்றோம். இந்த வியாதியைத் தீர்க்கும் வைத்தியர் சிவபெருமான்; ஆதலால் அவருக்கு “வைத்தியநாதன்” என்று பெயர். நோயாளி தனக்குப் பொருந்தாத உணவுகளை விரும்புதல் உண்டு, ஆயினும் வைத்தியன் அந்த உணவுகளைக் கொடுக்க மாட்டான். அதுபோல், நமக்கு ஆகாத பொருள்களை நாம் விரும்புதல் உண்டு; வைத்தியநாதராகிய கடவுள் அவற்றை நமக்கு அருள மாட்டார். ஆதலால் நாம் விரும்பிய பொருள் நமக்குக் கிடையாவிடின், அது நமக்கு ஆகாததென்று உணர்ந்து, அது கிடையாமற் போனதைப்பற்றி நாம் சந்தோஷப்படல் வேண்டும். நோயாளி விரும்பமாட்டாத பலவற்றை வைத்தியன் அவனுக்குச் செய்கிறான்; ஆமணக்கெண்ணெய் போன்ற கசப்பானவற்றை உண்ணச் செய்கின்றான்; பெரிய கொப்புளத்தைக் கத்தியினாலே கீறி வேதனையை ஆக்குகிறான். அதுபோல, சிவபிரானாகிய வைத்தியநாதர்நாம்விரும்பமாட்டாதவற்றை நமக்குச் சேர்த்தலும், கொடிய வேதனைகளை ஆக்குதலும் நமது ஆணவமாகிய நோயை நீக்கி நம்மைச் சுகமாக வாழும்படி வைத்தற்கேயாம். ஆதலால்,நம் முயற்சிகளைக் கடந்து,நாம் வெறுப்பவைகள் நம்மை அடைந்தாலும்,நாம் வேதனைகளில் அகப்பட்டாலும், அவைகள் நமது நன்மைக்காகக் கடவுளால் அருளப்பட்டவை என்பதை உணர்ந்து அவைகளைப்பற்றி இன்புறுதலே தக்கதாம். எனது கப்பல் ஆழ்ந்து போனதும், குழந்தை இறந்துபோனதும் நன்மையானவைகளே. அவைகள் எனக்கு எப்படி நன்மையாகும் என்பதை நாம் அறியவேண்டியதில்லை. யாவும் அவருடைய செயலே; அவர் செய்வதெல்லாம் நன்மையே’ என்ற நம்பிக்கை உறுதியாயிருந்தால் என்றும் எப்போதும் ஆனந்தமாய் வாழலாம் துக்கம், கோபம், அச்சம் ஆகிய மூன்றும் உடலுக்கே தீமையானவை. என்னுடைய கப்பல் ஆழ்ந்து போனால், பெருமுயற்சி செய்துபொருளைத் தேடி நட்டத்தைத் தீர்த்தலும்,எனக்கு யாராவது இடர்செய்ய வரும்போது கோபம் கொள்ளாத

[14-ம் பக்கம் பார்க்க]

விவேகம்:

# விவாதிப்பதில் இல்லை! விளங்கிக்கொள்வதில் உண்டு

அறிவண்ணன் வருகிறார்' தமிழ் நிலா, தேன்மொழி, அன்பரசன், இளவழகன் ஆகிய நால்வரும் மிகக் கடுமையாக ஒரு விவாதத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். ஒரே கூச்சலும் குழப்பமும், அடிபிடி. அறிவண்ணனைக் கண்டதும் அமைதியாகின்றனர்.

தமிழ் நிலா:– (சிரிப்புடன்) அண்ணா வாருங்கள்......

தேன்மொழி:– பட்டிமன்றத்துக்கு அண்ணாவை நடுவராக விடுவோம்

அறிவண்ணன்:– இப்போது நிலவுவது என் வருகையால் ஏற்பட்ட ஒரு தற்காலிக அமைதி என்று எனக்குப் புரிகிறது எதைப்பற்றி இவ்வளவு கடுமையான விவாதம்?

அன்பரசன்:– ‘விதி’ என்று ஒன்று இருக்கிறதா என்பது பற்றி.

இளவழகன்:– நாங்கள் இனி விவாதிக்க வில்லை நீங்கள் சொல்லுங்கள். விதி என்பது என்ன?

அறி:– உங்களில் யார் யார் விதியின் பக்கம்?

தமிழ்:– விதி என்ற ஒன்றை மாற்றவே முடியாது என்றால்... நீங்கள் இனிமேல் படிக்க வேண்டாம். ‘விதி’ இருந்தால் ‘பாஸ்’ பண்ணலாம் என்று அன்பரசனும் தேன்மொழியும் ......

அறி:– சரி எவ்வளவு நேரம் விவாதித்தீர்கள்?

தேன்:– ஒரு...நாற்பது நிமிஷம் இருக்கும்......

அறி:– இப்போதுவிவாதித்ததாலே... உங்கள் முன்னைய கருத்துக்களில் மாற்றம் ஏற்பட்டிருக்கறதா?

அன்:– இல்லை. முந்திய கருத்து இன்னும் வலிமை பெற்றிருக்கிறது

இள:– அண்ணா கேள்விகளை விட்டுவிட்டு... உங்கள் முடிவைச் சொல்லுங்கள்.

அறி:– நான் சொல்வதைக் கட்டாயம் ஏற்றுக் கொள்வீர்களா?

தேன்:– சரி என்றால்.....

அறி:– நான் எப்படிச் சொன்னாலும் உங்களில் இருவருக்கு நான் சொல்வது பிழையாகவே இருக்கும்.

அன்:– இதற்கு முடிவு இல்லையா?

அறி:– விவாதங்களை நிறுத்துவதுதான் முடிவு.

இள:– விளங்கவில்லை?

அறி:– விவாதங்களில் ஒரு போதும் வெற்றி பெற முடியாது நீங்கள் அதில் தோற்றுப் போனாலும் தோல்விதான். வெற்றி பெற்றாலும் தோல்விதான்.

தமிழ்:– இன்று எங்களுக்கு விளங்காமலே கதைப்பது என்ற முடிவோடு வந்தீர்களா?

அறி:– இல்லை. பாடசாலைகளில் உங்களுக்கு ஒரு போதும் கற்பிக்கப்படாத சில விடயங்களைச் சொல்ல வேண்டும் என்ற முடிவோடு வந்தேன்.

தமிழ்:– இன்று விஞ்ஞானம் பற்றி ஒன்றும் இல்லையா?

அறி:– இதுவும் விஞ்ஞானந்தான். உளவியல் விஞ்ஞானத்தின் ஒரு பிரிவுதான். விவாதங்களில் வெற்றி பெறும்போது இன்னொரு மனத்தில் தாழ்வுணர்ச்சியையும் எம்மீது வெறுப்பையும் ஏற்படுத்தி... அதன் மூலம்நாங்கள் தோல்வி அடைந்து விடுகிறோம் என்ற உண்மையைப் பாடசாலைகளில் சரியாக அறிவுறுத்தாத காரணத்தினால்தான்; நாங்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று நிறுவ முயன்று முயன்று தொடர்ச்சியாகத் தோல்வி அடைந்து வருகிறோம்.

தேன்:– அது எங்கள் விதி... (சிரிக்கிறார்)

அறி:– இல்லை நெப்போலியனிடத்தில் வேலை செய்த ‘கொன்ரஸ்ன்ற்’ என்பவர் நெப்போலியனின் வாழ்வு பற்றி ஒரு நூல் எழுதினார். அதில் அவர் கூறுகிறார், ‘நான் ஜோசபீனுடன் அடிக்கடி பிரியட்ஸ் விளையாடுவேன். அவளை வெல்லக்கூடிய ஆற்றல் என்னிடம் பல இருந்த போதிலும், சந்தர்ப்பங்களில் அவள் என்னைவெல்லுமாறுநான் என்னை மாற்றி அமைத்து விடுவேன். அது அவளுக்கு அளவில்லாத திருப்தியைக் கொடுத்து வந்தது......’

**விழிசைக்குயில்**

அன்:– ஒருவர் ஒரு விடயம் பற்றித் தவறான கருத்தைக் கொண்டிருந்தால்... சரியானதை அவர் அறியத்தானே வேண்டும்?

அறி:– அது பிழையானது என்று நிச்சயமாகத் தெரிந்தால் அவருக்குத் தனிமையில் கூறலாம். அவருக்கு நீங்கள் கூறுவது விளங்கும்படி கூறவேண்டும் விவாதித்து வெல்ல முனைவது வீண் வேலை.

இள:– அண்ணா கஷ்டமான விஷயம் சொல்கிறார்.

அறி:– இல்லை இது ஒரு பண்பு. இதுஒரு பழக்கம். மற்றமனிதனிடத்தில்பிழை காணுகிற வேலையையே முற்றாக விட்டுவிட வேண்டும்.

தமிழ்:– நீங்கள் அப்படியா;

அறி:– பழகிவருகிறேன் சோக்கிரட்டீஸ் சொன்னார் ஒருவிடயம் மட்டும் எனக்குத் தெரியும்.அது எனக்கு எதுவும் தெரியாது என்பதாகும்”. ஆகவே நாங்கள் எங்களுக்கு மட்டும் நிறைய தெரியும் என்ற நினைவில் இன்னொரு மனிதனிடம் பிழை காணும் பழக்கத்தை இன்றுமுதல் நிறுத்துவோம்

தேன்:– இனிமேல் நாங்கள் காரசாரமான விவாதங்களில் ஈடுபடுவதில்லை என்று அண்ணாவுக்கு முன்னால் சத்தியம் செய்து கொள்வோம்.

அறி:– சந்தோஷம் நீங்கள் மாற முயலுகிறீர்கள் எமது சூழல் மாறவில்லை என்பதுதான் எனக்கு மனவருத்தம் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்கத் தொடங்குகின்றன நான் போய் வரப் போகிறேன்

தேன்:– நாளையும் உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்போம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

(அறிவண்ணன் எழுந்து போக) மற்றைய நால்வரும் ஒன்றாக அமர்ந்து திருக்குறள் படிக்கிறார்கள்

## சேர்ந்து பாடுங்காலம் வாராதோ!

பாலைப் போல
ஒளியை வீசும்
பட்டு நிலாவே!-ஒரு
சோலைப் பூவில்
வாசம் ஏற்றும்
சின்ன நிலாவே!

வானம் மீதிற்
கானம் பாடும்
வண்ண நிலாவே!-இங்கு
நானும் நீயும்
சேர்ந்து பாடும்
காலம் வாராதோ!

மேரி ஷாலினி

## தென்றலும் புயலும்

ஒரு முறை தென்றல் காற்றும் புயற் காற்றும் சந்தித்தன. புயற் காற்று மெத்த அகந்தையுடன் தென்றற் காற்றை நையாண்டி செய்தது. தன்னைவிட உயர்ந்தவர் எவருமில்லை என்ற தோரணையில் அது பேசத் தொடங்கியது.

தனது வீரதீரச் செயல்களையும் தான் செய்த சாகசங்களையும் எடுத்துக் கூறித் தென்றற் காற்றை கிண்டல் செய்தது. தென்றற் காற்றோ புயற் காற்றின் கர்வத்தை எப்படி அடக்கலாம் என்று சிந்தித்தபடி எதுவும் பேசாமல் இருந்தது.

தென்றற்காற்றின் மௌனத்தைக் கண்ட புயற் காற்றுக்கோ மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. தன்னுடைய பலம் முழுவதையும் காட்டி அகோர தாண்டவமாடித் தென்றற் காற்றை மேலும் மேலும் வம்புக்கு இழுத்தது,

அருகே இருந்த மரத்தின் மேல் பெரிய குரங்கு ஒன்று இருந்தது. அதைக் கண்ட தென்றற் காற்றுக்கு ஓர் உபாயம் தோன்றியது. தென்றல் புயல் காற்றைப் பார்த்து 'அதோ! இருக்கும்குரங்கை யார் விழுத்துகிறீர்களோ, அவர் தான் பலசாலி. உன்னால்முடிந்தால் அக்குரங்கை விழுந்து பார்க்கலாம்' என்றது. புயற் காற்றுப் பலநிமிடங்கள் வீசியும் குரங்கை விழுத்த முடியவில்லை. அது களைத்து விட்டது.

தென்றல் காற்று வீசத் தொடங்கியது அது மெல்ல மெல்ல வீசியது. இதமாகக் குரங்கை அரவணைப்பது போல்இனிமையாகவீசியது. தென்றலின் இனிமையிலே திளைத்த குரங்கு மெல்ல அயர்ந்து உறங்கத் தொடங்கியது. இதுவே தருணம் என்று உணர்ந்த தென்றற் காற்றுத் தன் பலம் கொண்ட மட்டும் வேகமாக வீசியது. குரங்கு தொப்பென்று கீழே விழுந்தது.

புயற்காற்றுத் தனது கர்வம் அடங்கி வெட்கித் தலை குனிந்தது.


கு. செந்தூரன்
அங்கத்தவர் இல. 188




## சின்னஞ்சிறு சிட்டுக்களே!

சைவப் பெரியார் தாத்தாதான் இந்த வாரம் உங்கள் முன் வருகிறார். இவர் சைவ போதம் (முதற் புத்தகம்)

சைவ சமயசாரம் என்ற அருமந்த நூல்களைச்சிட்டுக்களாகிய உங்களுக்கு எழுதியிருக்கிறார். சைவ போதத்தில் உள்ளவை அத்தனையும் அருமையான கதைகள். அவற்றைப் படித்தால் நீங்கள் பண்புடையவர்களாக வளர்வீர்கள்.



தாத்தாவின் பெயர் சிவபாதசுந்தரம். கணிதத்தில் மிகுந்த ஆற்றல் படைத்தவர், அதிபராகவும் இருந்தவர். இவருடைய மாணவர்களின் மாணவர்களிற் சிலர் இன்னும் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்களிடம் படிக்கும் பாக்கியம் சிலவேளை உங்களிற் சிலருக்குக் கிடைக்கலாம். சிங்கப்பூரிலே கூட இவரது மாணவர் பரம்பரை ஒன்று இருக்கிறது.

பெரியவர்களானதும்இவர் எழுதியிருக்கும் ஏனைய நூல்களையும் படிப்பீர்கள் தானே.

## மாலைக் காட்சி

ஒளி கொடுத்த சூரியன்
ஒளிந்து கொள்ளப் பார்க்கிறான்
பசி ஒழித்த பறவைகள்
படுக்கை நோக்கிப் போகுது

அந்தி வானம் செந்தழலாய்
அனைவருக்கும் தோற்றுது
சந்தத் தோடு குருவி யொன்று
தனித்தி ருந்து பாடுது

கன்றைத் தேடிக் கறவை மாடும்
'கடுகதி' போல் விரையுது
காகம் குருவி சத்தம் போட்டு
ககனமீதிற் பறக்குது

மாதா கோயில் மணியின் ஓசை
மனதைத் தொட்டு நிற்குது
மால் மருகன் கோயிற் பூசை
மக்கள் தம்மை ஈர்க்குது.

ஷோபனா சர்மா
(அங்கத்தவர் இல 230)

## முரசொலி பூந்தோட்டம்
### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்:- ........................................

வயது :- ........................................

பாடசாலையின்
பெயர் :- ........................................

கல்விகற்கும் வகுப்பு : ........................................

வீட்டு முகவரி: ........................................

கையொப்பம்: ........................................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.................... ....................
திகதி பெற்றோர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினன்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்.)

## தங்கைக்கு...

அன்புத் தங்காய் இங்கேவா!
அறிவுரை உனக்குப் பகர் வேன்கேள்!
அன்போ டெங்கும் பழகிக் கொள்!
ஆக்கம் தேடி வாழ்ந்துகொள்!
இனியன செய்யப் பழகிவிடு!
ஈகையிற் சிறந்து விளங்கிவிடு!
உண்மை உயர்வென் றுணர்ந்துவிடு!
ஊக்கம் தளரா துழைத்துக்கொள்!
எண்ணும் எழுத்துங் கற்றுக்கொள்!
ஏழைகள் உள்ளம் குளிரச் செய்!
ஐயந்திரி பறக்கற்றுக் கொள்!
ஒற்றுமை உயர்வு உணர்ந்து நட!
ஓரகஞ் செய்யா திருந்துவிடு!
ஔவை நெறியில் வாழ்ந்துவிடு!
அகிலம் போற்ற உயர்ந்துவிடு!

சங்கரத்தை சி. சபாநாதன்

## பூந்தோட்டம் அங்கத்தவர்

| | |
|---|---|
| இலக்கம் 366 | நளாயினி சிவகுமார் வயது 09. பொன் பரமானந்தர் மகா வித்தியாலயம் குரும்பசிட்டி |
| இலக்கம் 367 | கார்த்திகா திருஞானசம்பந்தபிள்ளை வயது 09, யாழ் இந்து ஆரம்ப பாடசாலை வண்ணார்பண்ணை |
| இலக்கம் 368 | கு.கணேஸ் பத்தநாதன் நிரஞ்சனு வயது 09, அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் யாழ்ப்பாணம் |
| இலக்கம் 369 | சுபாஸ்சந்திரன் குமரன் வயது 12, ஹாட்லி கல்லூரி பருத்தித்துறை |
| இலக்கம் 370 | செந்தில் குமரன் சின்னத்தம்பி வயது 11 ட்றிபேர்க் கல்லூரி சாவகச்சேரி |
| இலக்கம் 371 | கதிரமலை விக்கினேஸ்வரன் வயது 13, தமிழ் கந்தையா வித்தியாசாலை சுன்னுகம் |
| இலக்கம் 372 | வைரவநாதன் மாலினி வயது 07, புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை யாழ்ப்பாணம் |
| இலக்கம் 373 | சிவரட்ணம் பிரதீபா வயது 09, வல்வை மகளிர் மகா வித்தியாலயம் வல்வெட்டித்துறை |
| இலக்கம் 374 | ஞானசேகரம்பிள்ளை தட்ஷாயினி வயது 12, மகாவித்தியாலம் அச்சுவேலி |
| இலக்கம் 375 | கந்தையா சிறீவதனி வயது 11, றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை மந்துவில் |
| இலக்கம் 376 | சுந்தரலிங்கம் சுமன் வயது 06, விக்னேஸ்வராமகா வித்தியாலயம் மீசாலை. |
| இலக்கம் 377 | சி. தம்பு யோகானந்தன் வயது 10, உடுத்துறை மகாவித்தியாலயம் தாளையடி. |
| இலக்கம் 378 | ரூபினி சிவகுமாரி இராமநாதன் வயது 06, யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை. |
| இலக்கம் 379 | சின்னமணி வபீந்திரரூபி வயது 11, அச்சுவேலி மகா வித்தியாலயம். |
| இலக்கம் 380 | ஞானவாணி இராஜரத்தினம் வயது 09, யாழ்ற்றன் கல்லூரி கனிஷ்ட பிரிவு காரைநகர். |
| இலக்கம் 381 | அனோஜா ஜாழினி வேதநாயகம் வயது 10, திருக்குடும்ப கன்னியர் ஆங்கில பாடசாலை யாழ்ப்பாணம். |
| இலக்கம் 382 | தேவநாயகம் தேவகுமார் வயது 07 புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க பாடசாலை கிளிநொச்சி. |
| இலக்கம் 383 | செ. ஞானலிங்கம் ஞானசுரேந்திரன் வயது 13, காங்கேசன் துறை மகாவித்தியாலயம். |
| இலக்கம் 384 | தெய்வாம்பிகை தெய்வேந்திரம். வயது 11, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை யாழ்ப்பாணம் |
| இலக்கம் 385 | நடராசா சிவமுகுந்தன் வயது 12, சேர் வைத்திலிங்கம் துரைசுவாமிமத்திய ம.வி. வேலணை. |
| இலக்கம் 386 | குலவீரசிங்கம் ஜெயமுரளி வயது 10, அராலி இந்துக் கல்லூரி அராலி. |
| இலக்கம் 387 | அமரசிங்கம் விஜிதா வயது 08, வேலணை சரஸ்வதி வித்தியாலயம் |
| இலக்கம் 388 | பாலசுந்தரம், தர்மேந்திரா வயது 13, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வண்ணார்பண்ணை. |
| இலக்கம் 389 | திருநாவுக்கரசு கோகிலன் வயது 11. ட்றிபேர்க் கல்லூரி சாவகச்சேரி |
| இலக்கம் 390 | சரவணபவ சர்மா இராசசேகரன் வயது 12, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் யாழ்ப்பாணம் |

# இந்துபோர்ட் இராசரத்தினம்
## காலமும் வாழ்வும்



**29**

### சைவாசிரிய கலாசாலையை மூடியமை

இராசரத்தினம் அவர்கள் அரசாங்க சபைத் தேர்தலிலும், பின்னர் பாராளுமன்றத் தேர்தலிலும் தோல்வி கண்டபோது, வெற்றியும், தோல்வியும் தமது வலத்தன வல்ல எனக் கூறித்தளராதிருந்தார். அவர் ஒரு சமயம் முகாமையாளர் பதவியை இழந்தபோது, ஸ்ரீராமர் அரச பதவியிழந்தபோது கொண்டிருந்த மன நிலையிலிருந்தார். சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற்குக் கடன்பளு கூடினுலும் அவர் பெரியவர்களைக் கண்டு உரையாடி நிதி திரட்டி நிலைமையைச் சமாளித்து வந்தார்.

ஆனல் பொது நலவாய நாட்டிலே பௌத்த அரசிலே முஸ்லிம் மந்திரியார் ஒருவர் பேனையை எடுத்து ஒரு கீறு கீறிச் சைவாசிரிய கலாசாலையை மூடிவிடும் வகை செய்த அநீதியை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆறுமுக நாவலர் வழியிலே சேர் இராமநாதன் தலைமையிலே சைவப் பெரியார்கள் உதவி ஒத்தாசையுடன், மலேசியா, சிங்கப்பூர், பர்மா மற்றுமுள்ள தேசத்துத் தமிழபிமானிகளின் உபகரிப்பிலே விஜயதசமி நாளிலே ஆரம்பிக்கப் பெற்று, விற்பத்திமான்களால் நடத்தப்பெற்று, நாட்டில் நூற்றறுபதுக்கும் மேலான சைவப் பாடசாலைகளுக்கும், வேறு மதப் பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களேயன்றி, ஆசிரியைகளையும் உருவாக்கிவரையாது உபகரித்துவந்த ஒரே ஒரு சைவப்பிரகாச ஆசிரிய கலாசாலையை மூடிவிடுமாறு செய்தமை தர்மப்பிசகான செயல் எனக் கண்டார். இலங்கைத் தமிழருள் பெரும்பாலான சைவ மக்களின் கல்விப் பீடமாயிருந்த கலாசாலையை வாடி வதங்க மூடிவிடுமாறு பணித்தமை வன்செயலின்பாற் பட்டதாகும்.

சைவப் பெரு மக்களின் முன்னேர் அளித்த அருஞ் செல்வத்தைப் பின்வரும் சந்ததியினர் முயன்று பெறுவதற்கு நிலைக்களனுக நிலவியது சைவாசிரிய கலாசாலை. நாற்பதினுயிரம் தமிழ்ப்பிள்ளைகளின் அறிவுக் கண்ணைத் திறந்த ஆயிரவர்க்கு மேலான ஆசிரியர்கள் உருவான பீடம் சைவாசிரிய கலாசாலை. செம்பாட்டு மண்ணுடன் கலந்த பண்பாட்டுச் சூழலில் வேம்பும் மாவும் பலாவும் நெருங்கி வளர்ந்து குளிர்மை செய்த சுற்றுப்புறச் சூழலில் நிலவி வந்தது சைவாசிரிய கலாசாலை. பல்கலைக்கழக வளாகம் போலப் பரந்து நான்கு ஏக்கரிலும் அதிகமான நிலப்பரப்பில் போதிய கட்டட வசதிகள், சாதனை பாடசாலை வசதிகள், மின்சாரவசதி, நல்லதண்ணீர் வசதி, போக்கு வரத்து வீதி வசதிகள் யாவும் வாய்க்கப் பெற்றது சைவாசிரிய கலாசாலை. நூற்றுக்கும் அதிகமானேர் உடனுறைந்து பேராசிரியர்களோடு உலாவியும் உரையாடியும் உருவாவதற்கு உகந்த இடம் திருநெல்வேலிச் சிமை. இவ்வாறெல்லாம் பொருந்தியமைந்ததும் கலைமகள் இருக்கை போன்றதுமான கலாசாலையை மூடிவிடச் சொன்னமையை இராசரத்தினம் அவர்கள் கேட்டு மனமுடைந்தார்.

அன்று புறமதத்தவர்கள் ஆசிரியர்களை உருவாக்கும் பணி தங்கள் ஏகபோக உரிமை எனக் கொண்டு, வெள்ளைக்கார அரசாங்கத்தின் கடைக்கண் பார்வை விசேடத்தால்தங்கள் முயற்சிக்குவாய்ப்பாக ஆசிரியப் பயிற்சியைச் சாதகமாகக் கொண்டு எங்கள் இளைஞர்களுக்குப் புறமதப் பெயர்களை வைத்து தம்மதத்தைப் போதித்து உருக்குலைத்து வந்தபோது, நம்பிக்கையில் பாதுகாவல் கோட்டையாக எழுந்தது சைவாசிரியகலாசாலை.

சாதியிலும் சமயமே பெரிது என்று கருதிய தமிழரின் அபிமானம் மிக்க சைவாசிரிய கலாசாலையை அவசரமாக மூடியமையால் தமிழாசிரிய உலகில் இன்னும் பயிற்சிபெறுமல் தொழில் நடத்தும் 2000 ஆசிரியர்கள் தங்கள் பயிற்சிக்குப் புறமதப் பயிற்சிக் கலாசாலைகளுக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகக் கூடும். இது பழைய கிழவி கதவைத் திறவடி என்றவாறமையவும் கூடும்.

அன்று 1928ஆம் ஆண்டின் மங்கலகரமான விஜயதசமி நாளில் ஆரம்பிக்கப் பெற்று, முப்பத்தைந்து ஆண்டுகள் ஒளிகான்று வந்த கலாசாலையை 1963ஆம் ஆண்டு தைமாதம் பொங்கலையடுத்த நாள்களில் மூடிவிடுமாறு கல்விப் பணிப்பாளர் கட்டளையனுப்பினுர்.

அங்கே பயிற்சி பெற்று வந்த பெண்களைக் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு அனுப்புமாறும், ஆண்களைக் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்புமாறும் கட்டளை அறிவித்தது. அரச கட்டளையை மீற முடியாத அதிபர் அவ்வாறே செய்ததும், சைவாசிரிய கலாசாலைக் கட்டடத்தை சைவவித்தியா விருத்திச் சங்கம் பொறுப்பேற்றுப் பாதுகாத்து வந்தது.

முன்னர் போத்துக்கேயர் இந் நாட்டகத்திற் புகுந்து சைவக் கோவில்களையும் மடங்களையும் இடித்துத் தள்ளிய வழியில்சைவாசிரிய கலாசாலையும் இடிபடாமலே உருக்குலைந்தது. இதனுல் சைவசமயம் ஒளியிழக்கும் சூழ்நிலை உண்டாகலாம் என்று இராசரத்தினம் அவர்கள் கருதினுர்கள். இவ்வாறு அரசாங்கமும்மந்திரியாரும் செய்தமையால் நாட்டில் சமத்துவம் சகோதரத்துவம், நீதி,நேர்மை,என்பன பல்வேறு இனங்களை மதங்களைத்தழுவிய மக்களிடையே நிலவுதல் எங்ஙனம் என்று இராசரத்தினம் அவர்கள் கேட்டார்கள்.

இலங்கையில் சிலமாகாணங்களில் சிங்களவர், தமிழர், முஸ்லிகள் பல்வேறு காரணங்களால் பின்தங்கிய நிலையில் வாழ்கின்றுர்கள் இதனுல் இவர்களின் கல்வித்தரமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுப் பின்தங்கியுள்ளது. இவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டிய மதிப்புக்குரிய கல்வி மந்திரியார், இதைவிட்டுக் கல்வித்தரம் கூடிய யாழ்ப்பாணத்தில் அதுவும் தமிழ் மக்களிடையே, கல்வித் தரத்தைச் சமயச் சால்பை மட்டந்தட்டுவதற்கு எடுத்துக் கொண்ட திட்டம் மனிதப் பண்பாட்டுக் கமையாததாகும் என்றுர்.

இவ்வாறெல்லாம் கூறியும், எழுதியும் வந்த இராசரத்தினம் அவர்கள் அருமையான ஆங்கிலத்தில் எழுதி அச்சிட்டு வெளியிட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றில் கனம் முஸ்லிம் மந்திரியாரவர்கள் மறைமுகமாகச் சைவசமயத்தவர் முகத்தில் கரிபூசிய செயலையும் அம்பலமாக்கிவிட்டார்.

சைவப் பெரியார்கள் அரசாங்கத்திடம் ஒப்படைத்த சில தமிழ்ப் பாடசாலைகளைக் கனம் மந்திரியார் முஸ்லிம் பாடசாலைகளாக்கியிருந்தார். இன்னும் அது காறும் முஸ்லிம் பாடசாலைகளிற் படிப்பித்து வந்த பாண்டித்தியம் குறைந்த ஆசிரியர் பலரைத் தரமுயர்ந்த தமிழ்ப்பாடசாலைகளுக்கு இடமாற்றஞ் செய்தார். இன்னும் பல தமிழ்ப் பாடசாலைகளிற் பயின்றுவந்த கிறிஸ்தவபிள்ளைகளின் தொகைக்கு அப்பாற்பட்ட விதாசாரத்தில் கிறிஸ்தவ ஆசிரியர்கள் படிப்பித்து வந்தும், சைவர்களில் கைபோட்டமை சைவர்கள் எதையும் புறுபுறுக்காமல், முணுமுணுக்காமல் பொறுத்துக் கொள்வார்கள், தாங்கிக் கொள்வார்கள் என்பதை நன்கறிந்து போலும்.

சைவசமயத்தை மட்டந் தட்டுவதற்குத் திட்டமிட்ட இச்செயல் அருவருப்பானது, அழுக்கானது இதனுல் மந்திரியார் தாம் பௌத்த அரசாங்கத்தின் நல்லபிள்ளையாயிருக்கலாம் என்று நினைக்கிறுர் போலும். இன்னும் இவர் வடமாநிலத்தில் பல தமிழ்ப் பாடசாலைகளின் தரத்தைக் குறைப்பதற்கும் சில வழி வகைகளைக் கையாண்டுவருகிறுர். இங்கேயுள்ள கலவன் பாடசாலைகளில் சேவைபுரியும் பெண்ணுசிரியைகளைஇடம்மாற்றியும்,ஐந்தாம் வகுப்புக்கும் அதற்கு மேலும் வகுப்புக்கள் உள்ள ஆங்கில தராதரமுள்ள ஆசிரியரை இடம்மாற்றியும் உள்ளார். இவற்ருல் சைவப்பாடசாலைகளை மூடிவிடலாம் என்றும் இவர் கருதுகிறுர் என்பது புலனுகிறது.

**க.சி.குலரத்தினம்**

இன்னும் இவர் செய்யத் துணியும் பாரதூரமான படுமோசமான பாதகச் செயல்களிலொன்று பலாலியில்உள்ள ஆசிரிய கலாசாலையை முற்ருக முழுதாக முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியாக்குவதற்கு முனைவதாகும். இங்கே பயிற்சி பெறுவதற்கு மேலதிக முஸ்லிம்களை அனுப்புவதோடு, இங்கே பயிற்சி பெறும் சைவாசிரியர்களைக் கிறிஸ்தவ பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்புதலுமாகும்.

இன்னும் மதிப்புக்குரிய முஸ்லிம் மந்திரியார் சைவவித்தியா விருத்திச் சங்கப் பாடசாலைக்குரிய காணியொன்றைச் சங்காலையில் அத்துமீறிப் பராதினப்படுத்திய போது, சங்கம் தொடுத்த வழக்கினுல் காணியின் பெறுமதியைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருந்தது.

மந்திரியார் செய்த மனவருத்தந் தரும் செயல்களுள் சைவாசிரிய பயிற்சி நெறியாளர் முழுப் பேரையும் கொழும்புத்துறையில் சாதகமில்லாத சூழலில் உடனுறையுமாறு தள்ளி விட்டது பாரதூரமானதாகும். இத்தகைய சூழலில் ஒரு நாள் சைவாசிரியர் ஒருவர் அங்கே நாள் காட்டியொன்றைச் சுவரிலே தொங்கவிட்டபோது, அதில் சைவப்படம் இருப்பதாகக் கருதிய சதிக் கூட்டம் உடனடியாக நாட்காட்டியை அகற்றிவிட்டது. இச் செய்தி சைவராய அதிபரிடம் தெரிவிக்கப்பட்டபோது அவரால் எதுவும் செய்ய முடியவில்லை

இன்னும் கொழும்புத்துறைச் சூழலில் நடைபெற்ற பாதகமான செயல்களுள் சகிக்க முடியாததென்று அங்கே சைவாசாரசீலத்தைப் புறக்கணித்து மாட்டிறைச்சிக் கறி வழங்கப்பட்டதாகும். இச் செயலை வன்மையாகக் கண்டித்த இராசரத்தினம் அவர்கள் மந்திரியாரிடம் கேட்டகேள்வி, முஸ்லிம் ஆசிரியர்களைப் பன்றியிறைச்சி படைக்கும் பயிற்சிக் கல்லூரிக்கு மாற்றுவாரோ என்பதாகும்.

அடுத்து மந்திரியாருக்கு எடுத்துக் காட்டிய சாதகமான செயல்திட்டமொன்று என்னவென்றுல், கனம் மந்திரியார் மதச்சார்புள்ள ஆசிரிய கலாசாலைகளை முற்ருக மூடுவதானுல், அவர் நாற்பது ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பு வசதியுள்ள பலாலியில் நல்ல கட்டட வசதியும் நன்னீர் வசதியும் உள்ள இடத்தில் எல்லோரையும் பயிற்சி பெறுவதற்குச் செய்யலாம். இதை விடுத்துக் கட்டட வசதியில்லாததும் உவர்நீர் உள்ளதுமான கொழும்புத்துறையில்மேலதிக செலவுகள் செய்தல் வீண் செயலாகும் என்பதாகும்.

இவ்வாறெல்லாம் நிலைமைக்கு வருந்திய இராசரத்தினம் அவர்கள் ஆளில்லாத்துக்கம் அழுதாலும் தீராது என்ற பிரகாரம் நன்மனம் படைத்த கல்விப்பணிப்பாளர் மக்ளே போன்றவர்கள் இல்லாமற் போனமையையிட்டு வருந்தினர்.

இனிச் செய்யக் கூடியதை சுட்டிக் காட்டிய அவர் இலங்கையில் மதரீதியிலமைந்த பழைய பயிற்சிக் கல்லூரிகள் யாவும் முன்போலியங்கவும், அங்கெல்லாம் பயிற்சிக்குத் தெரியப் பெறுபவர் தொகையைக் காலந்தோறும் வேண்டுமானுற் குறைத்துக் கொள்ளவும் வழி சொன்னர். இது பதில்கல்விப் பணிப்பாளர் அல்விஸ் என்பாரும் தாமும் முன்னர் சுட்டிக்காட்டியதாகவும் அது நடைமுறையில்வரவில்லை என்றும் கூறினர். எல்லாவற்றுக்குங் காரணம் சைவசமயத்தவர் வாய்விடாச் சமூகத்தவர்களாய் வாழ்ந்து பழகியமையேயாகும் என்பர்.

இறுதியாக இராசரத்தினம் அவர்கள் எழுதிய பந்திதாம் பிரதமரைக் காணப்போவதாகவும், அவரிடம் சைவாசிரிய கலாசாலையை மூட வேண்டாம் என வற்புறுத்தப்போவதாகவும், அவர் மூடத்தான் வேண்டும் எனப் பிடிவாதமாயிருந்தால், மூடுவதானுல் ஐந்தாண்டுக்கால முன்னறிவித்தல் கொடுத்தே மூட வேண்டுமெனக் கேட்கப்போவதாயும், அவர் எங்கள் கோரிக்கைக்கு இணங்க மறுத்தால், நாங்கள், எங்கள் நாலரை ஏக்கரும் பெரியகட்டடவசதியும் உள்ள இடத்தில் சைவத்துறையில் உயர் கல்வி பயிற்ற வழிவகுக்கப் போவதாகவும் கூறினர். வேத நெறியில் சைவத்துறையையும் சைவசித்தாந்தம், வேதாந்தம்என்பனவோடு,பண்ணிசை மனையியல் என்பனவோடு வெளிவாரிப்பட்டப் படிப்புக்கானவசதிகளும் செய்யப்போவதாகவும் தமக்குப்பேராசிரியர்கள்விரிவுரையாளர்கள், பண்டிதர்மார் பக்கத்துணையாக இருக்கிருர்கள் என்றும் வெளியிட்டார். அன்று அவருக்கு எண்பதாம் வயது நெருங்கிக் கொண்டிருந்தது.

(தொடரும்)

## பாரதிக்குப் பின் தமிழ்க் கவிதை

பாரதி பெரிய ஆலமரம்; அவன் நிழலில் ஏனைய புல் பூண்டுகள் எதுவும் தழைக்கமுடியாது; எனவேதான் அவனுக்குப் பின் தமிழ்க் கவிதை வளரவில்லை என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனல் உண்மையில், பாரதிக்குப் பின் தமிழ்க் கவிதை வளரவில்லையா?

பாரதி ஓர் ஆலமரந்தான். ஆனல் வளர்ந்தோங்கும் ஆலமரம் தன்னுட் தானே அடங்கி நின்றுவிடாமல், தன்னிலிருந்து விழுதுகளைத் தோற்றுவிக்கின்றது. தரைநோக்கி நீளும் அந்த விழுதுகளிற் சில வளர்ச்சி குன்றிப் போய்த் தரையை எட்டிப் பிடிக்கமாட்டாது, நிராசையோடு அந்தரத்திலேயே ஊசலாடுகின்றன. வேறு சில தரையை எட்டிப் பிடிப்பதோடு மட்டுமல்லாமல் அங்கே காலூன்றி வேர் பரப்புகின்றன; தமக்கெனத் தனித்தன்மையோடு தனி மரங்களாக உருமாறுகின்றன. அதே சமயம் அவை தாய்மரத்துக்கும் பலம் தருகின்றன. தாய் மரம் தன் கடமை தீர்ந்து மறைய நேர்ந்தபோதிலும் அதன் பரம்பரையைத் தொடர்ந்து வளர்க்கும் சந்ததியாகவும் விழுதுகள் மாறுகின்றன. அதே போல் பாரதியின் நிழலில் மட்டுமே அண்டி நின்று தழைக்க முயன்று நசிந்து போன கவிதை முயற்சிகளும் தமிழில் உண்டு. பாரதி என்ற பெருமரத்தில் விழுதாகப் பிறந்தும் வளர்ச்சியில் ஸ்தம்பித்து அந்தரத்திலேயே ஊசலாடி நின்றவர்களும், நிற்பவர்களும் உண்டு. அதே சமயம் தரை தொட்டு வேரோடித் தாமும் தனிமரங்களாகத் தழைத்து பாரதியின் பரம்பரை அறுந்து போகாமல்-அதன் வளர்ச்சி குன்றிப் போகாமல்-பரிணமித்துள்ள கவிஞர்களும் தமிழில் உண்டு. அப்படிப்பட்டோர் விரல்விட்டெண்ணி விடக்கூடிய வெகுசிலரே. ஆனல் இவர்களே பாரதிக்குப்பின் தமிழ்க் கவிதையை வளர்க்கும் பெருமைக்குரியவர்களாவர்.

இன்று தமிழகத்தில் ஒரு கவிஞர் பட்டாளமே இருக்கிறது. இவர்களிற் பலர் ஒளிகாணுது அங்காந்து மாயும் புல் பூண்டுகளாகவும் தரை தொடுவதற்கு வலிமையிழந்து போன பார விழுதுகளாகவும் இருப்பானேன்? இவர்களிடத்தில் நல்ல பல கருத்துக்கள் இல்லையா? உண்மையில் அவர்களிற் பலரும் நல்ல கருத்துக்களும் ஆர்வமும் கொண்டவர்கள் தாம். எனினும் அவர்கள் ஏன் சிறந்த கவிஞர்களாகப் பரிணமிக்கவில்லை?

தொ, மு.
சிதம்பர ரகுநாதன்

# எழுத்துச் சீராக்கம் ஆக்கமன்று; அழிவே!

'மறுமொழிகளைப் போல் முதிர்ச்சியடையாமல் தமிழ் என்றைக்கும் கன்னியாக இருந்து விடுவதா?' என அலுத்துக் கொள்கின்றது இன்றைய தமிழ் இதயமொன்று 'பாலாழி மீனும் பான்மை' போலும். தமிழுக்குள்ளேயே கிடந்தும் தமிழின் ஆந்தரங்கப் பண்பறியாத அப்பாவி இதயம் போலும்; பாவம்!

மற்றை மொழிகளைப்போல தமிழும் எப்படியாவது தன் உருவை மாற்றி, லௌகிக தொழில்நுட்ப வாணிப சம்பந்தமான சொற்களனைத்தையும் மறுமொழிகளிலிருந்து வாரி விழுங்கி வயிறாதிப் புடைத்திருக்க அவாவுறுகிறது இந்த இதயம். ஆனால், தமிழின் பிறப்பு வளர்ப்பு இயல்புகளுக்கும் அதற்கும் வெகு தூரம்

'மராத்திமொழியில்மோடி' எழுத்துத் தேவ நாகரியாயிற்று. ருமேனிய 'சிரிலிக்' எழுத்து 'ரோமன்' எழுத்தாயிற்று. மலேசிய இந்தோனேசிய மொழிகளின் வரிவடிவில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. ஆகவே எழுத்துச் சீராக்கம் என்பது புதியதன்று. அதனால் தமிழிலும் மொழிவளம் பெறும்; சீர்மையும் செப்பமும் பெறும்'— எனப்பரபரக்கும் பிதற்றல் வேறு கேட்கிறது.

இலக்கண வரம்பு மட்டுமல்ல தமக்கெனச் சுயமான வரிவடிவேயில்லாத அப்பாவைகள் போல வந்துவிட வேண்டுமாமே செந்தமிழும்!

என் நினைந்து என் சொல்கின்றார்களோ இவர்கள்.

செய்யுள் வடிவும் அச்செய்யுட் பொருளான அறம் பொருளின்பக் கோட்பாட்டு வாய்மைகளுமே தமிழின் கரு. சுத்தச் செந்தமிழ் இலக்கணலங்கார நடையில் அவற்றை வடித்தெழுத உதவிய வரிவடிவமே அதன் உரு. ஆனால்,

கருவைக் கருவாக இருக்க விட்டோமா? ஆமென்றுதலையசைக்க ஆரும் முன்வரக் கூடாத அளவுக்கு அது விசாநீக்கத்துக்குள்ளாகி வாழ்விடமிழந்தார்போல வழக்கொழிந்து அருகித் தலை மறைவாய்ப் பதுங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

சங்க, சங்கமருவிய, பல்லவ சோழ, பாண்டிய நாயக்க கால இலக்கியங்கள்—தமிழ் சமயம், சாத்திரம், தோத்திரம், தத்துவஞானம் வைத்தியம், சோதிடம்—எல்லாவற்றினுமாகக் குறைந்த பட்சம் ஒரு லட்சம் சுத்தச் செந்தமிழிலக்கணநடைச் செய்யுள்கள் இருக்குமே. அத்தனையும் இச்சந்ததிக்கும் இனி வருஞ் சந்ததிகட்கும் எத்துணையும் பயன்படா தொழியும் நிலையையல்லவா பண்ணி வைத்திருக்கிறோம்.

இனி, உருவழி காண்டத்துக்குவருவோம். மற்றெம்மொழியிற்றனுஞ் சமபதங் காண்டற்கரிய ஒப்புரவான்மையை செய்யுட் பொருளாக மேற்கொண்ட சிறப்புக்குரிய தமிழுக்கு அதன் வரிவடிவில் ஒப்புரவில்லை என்றெழுகின்றது ஒருவகை ஓலம். ஞ,ண, ரு என்பன கா, பா, தா, என்பன போலில்லையாம். லை, ளை, னை, ணை கள் கை, தை, பை, கள் போலில்லையாம். ஞெ, ஞே; ஞெ, ஞே, ஞொ, ஞோ ஆனவை கொ. கோ, டொ டோ, போலில்லையாம். இவை ஒப்புரவுக் குறைவாக எடுத்துக்காட்டப் படுகின்றன. இவற்றைச் சீராக்கி

பண்டிதர்

**மு கந்தையா B. A.**

ஒப்புரவு பண்ணலாம் என்ற கோட்பாட்டை நியாயப்படுத்துவதற்கு வீரமா முனிவர் எகர ஒகரங்களிற் புள்ளி நீக்கஞ் செய்து ஏகார ஓகாரங்களுக்குத் தனிவடிவு கொடுத்தமை முதல் அத்தாட்சியாக முன்வைக்கப்படுகின்றது.

ஒப்புரவு நோக்கில் ஞ, னா? ஆமெனில் ஆ, அா ஆகாதா, தி தீயாதல் போல இ, இயா காதா? இதே பாணியில் ஏ, ஏே ஆகாதா? ஓ, ஓோ ஆகாதா? இவை ஆகாவென்பதற்கு என்ன உத்தரவாதம்?

இதே ஒப்புரவுப் பாணியில் கூ அமைப்பில் ஞூ, சூ, தூ ஆகிய பதினேழு மாற வேண்டுமெனில் அதற்குத் தடை விதிக்க வகையும் உளதாமோ?

மேலும், அப்படி நிகழ்ந்து விட்ட போதுகூரையும் சூரையும் தூரையும் முன்னெழுத்து (சு, கூ; து கூ) ஒரே வடிவில் நேர்ந்து விளைக்குந் தடுமாற்றத்தை விடுவிக்க வழியாதாகுமோ? ஆகவே

வடிவ ஒப்புரவுக்காக எழுத்துச் சீராக்கம் என்பது தமிழுக்குப் பல்லாற்றானும் ஆக்கத்திற்கு பதில் அழிவே தரும் முயற்சியாம்.

எழுத் தொலி வேறுபாடு போல வடிவ வேறுபாடும் இருத்தலே நியதி, இருந்தே யாக வேண்டுவதாம்.

இனி எழுத்து வடிவமாற்றஞ் செய்யும் முயற்சியை நியாயப் படுத்துதற் பொருட்டுக் காட்டப்படுஞ் சிலாசாசன, குகையெழுத்து வேறு பாட்டுதாரணங்கள் சில உதாரணங்களாகா. சிலைபுங்குகையும் அவற்றிற் பிரயோகிக்கப் படும் எழுது கருவிகளும் எழுத்தியல் வடிவங்கள் எல்லாவற்றையும் உரிய அளவுக்கு விளங்கக் காட்டுந்தரத்தனவாதலும் அவற்றை எழுதுவோர் எங்கும் எப்போதும் எழுத்துப் பயிற்சி நன்கனங்கைவந்தோராதலுந்துர்லபம். எழுத்துருவம் முற்ற விளங்காமலும் பிறழ்ந்திருக்கவும் எழுதும் வழக்கம் உத்தம சாதனங்களாகிய காகிதம் பேனவுள்ள இக்காலத்துமே உளதாதல் கண்கூடே.

தமிழகம் இதை நடைமுறைப் படுத்தி விட்டதாதலின் நாமும் நடை முறைப் படுத்தியேயாக வேண்டும் என்பதும் விதியாகாது தமிழை உருவழிக்கத் துணிந்த தமிழிகப்பழி ஈழத்துக்கு எய்திவிடாமற் காப்பதில் நிரந்தர நன்மையேயன்றித் தீமையேதும் விளைதற்கில்லை. (மாற்றம் வேண்டுவோர் தற்காலிக நன்மை நோக்கிலேயே தக்கிருத்தல் பிரசித்தம்) அன்றியும் தாய் சேய் உறவுரிமை அடிப்படையிற் பார்த்தால் ஈழத்தின் இக்கடைப்பிடி தழிழகப் பழிக்குச் சாந்தியாகுமெனில் அதுவுஞ் சிலாக்கியமே.

குறித்த மாற்றங்களைக் கூடத் தமிழகத்து தமிழ் நலமுணருந் தமிழறிஞர்கள் விருப்பாயேற்கவில்லையென்பதும் இனியுமேதும் அப்படி நிகழ்ந்து விடவொட்டாது முன்னெச்சரிக்கை கொடுத்து வைத்திருக்கிறார்களென்பதும் இத்தொடரில் அறியத்தகும். இவ்விஷயத்தில் இங்கு பழைய நிலை நிலவக் கேட்கையில் அவர்கள் அந்தராத்மா குளிர்ந்து வாழ்த்தும் என்பதும் உறுதி. ஆகவே

ஒன்றுக் காகவுந் தயங்க வேண்டுவதில்லை. தமிழ் வரிவடிவின் தனித்துவமாண்பைப் பேணிவைக்கும் பெருமை ஈழத்துக்கிருக்கவைப்போம்.

# வசைக்கவி பாடிய சமகாலப் புலவர்

காளமேகப் புலவரும், இரட்டைப் புலவரும் சமகாலப் புலவர்கள். ஆண்டவன் சந்நிதியானாலும் சரி, அரசவையானாலும் சரி அவர்கள் நினைத்தால் வசைக்கவி பாடித்தான் தீருவார்கள். ஆனால் இரட்டைப் புலவரும், காளமேகப் புலவரும் ஒரே மாதிரியான கருத்துடைய வசைப் பாடல்களைப் பாடியிருப்பதுதான் வியப்புக்குரியது. சம காலப் புலவர்கள் என்றால் அவர்கள் குணங்களும் ஒரே மாதிரி அமைய வேண்டுமா? அவர்கள் பாடல்களும் ஒரே மாதிரி அமைய வேண்டுமா?

திருமலைராயனின் அரண்மனை அவனது ஆஸ்தானப் புலவர் அதிமதுர கவிராயர். அவர் எங்கோ ஒரிடத்திற் காளமேகப் புலவரிடம் அவமானப் பட்டிருக்க வேண்டும். காளமேகப் புலவரைப் பழி வாங்கும் நோக்கத்துடன் திருமலைராயனை அணுகி'' அரசே! காளமேகம் இந்த அரசவையையே அவமதித்துள்ளான். இந்த இழுக்கைத் துடைக்க அவனை இங்கே கொண்டுவர உத்தரவிடுங்கள்'' என்று கொக்கரித்தான் அதிமதுரம். அவைப் புலவர் எல்லோரும் ஆமோதித்தார்கள்.

மன்னனுக்கு மட்டும் மனதுக்குள் போராட்டம்; மறுக்கவும் முடியவில்லை காவலாளியை அழைத்துக் ''கவிகாளமேகத்தை அழைத்து வா'' என்று உத்தரவிடுகிறான்.

சில மணிநேரத்தில் காவலாளியுடன் கவிகாளமேகம் அங்கே வருகிறார். புலவனின் அலட்சியப் பார்வையை அவதானித்த மன்னன், ''நீர் யார்?'' என்றான். ''கவிகாளமேகம்'' என்று பதிலிறுத்த காளமேகம் ''மன்னா! இவர்கள் யார்?'' என்று மன்னனிடம் கேட்டான்.

அதிமதுரம் பேசாமல் இருக்கக்கூடாதா? சட்டென்று எழுந்து'' அனைவரும் கவிராயர்கள்'' என்று கூறிவிட்டுத் தனது ஆசனத்தில் அமர்ந்து விட்டான்.

கவிராயர்களா? ஆச்சரியத்துடன் கேட்டான் காளமேகம்.

அதிமதுரம் விடவில்லை. ''ஆமாம் கவிராயர்கள்'' என்று சொல்லிவிட்டு மீண்டும் தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். காளமேகம் விழுந்து விழுந்து சிரித்து விட்டுப் பாட்டொன்றையும் பாடினான்.

''ஆகா நீங்கள் கவிராயர்களா? கவிராயர் என்றால் குரங்குகளுக்கு அரசன் என்பது பொருள். அப்படியானால் உங்கள் வால்கள் எங்கே? நீண்ட வயிறெங்கே? கால்கள் எங்கே? குழிவிழுந்த கண்கள் எங்கே? எங்கே?'' என்று கேட்கிறான் காளமேகம்.

''வாலெங்கே? நீண்ட வயி
றெங்கே? முன் இரண்டு
காலெங்கே? உட்குழிந்த
கண்களெங்கே?
புவிராயர் போற்றும் புல
வீர்காள் நீவிர்
கவிராயர் என்றிருந்தக்
கால்,''

தன்னைப் பழிவாங்க நினைத்த அதிமதுரத்தின் வாயையே அடைத்துவிட்ட காளமேகம போல இன்னொரு அரசவையிலே இதே போன்ற பாடலொன்றைப் பாடி மந்திரியொருவனை மட்டந்தட்டுகிறார்கள் இரட்டையர்கள்.

இரட்டையர் ஒருமுறை பாண்டிய ராசனுடைய அரசவையை அடைந்தனர். மன்னனைக் கண்டு பரிசில் பெற விழைந்தனர். மன்னனும் பரிசில் கொடுக்க இணங்கித் தன் முத்தாரத்தைக் கழற்றினான்.

பாண்டிய அரசனின் அமைச்சனோ பரிசில் கொடுப்பதைத் தடுத்து நிறுத்தினான். முடவர் பார்த்து விட்டார். கோபத்தின் வேகத்தில் கவிதை பிறக்கிறது.

''புராதன மான தமிழ்ப்
புலவீர் இந்தப் புன்குரங்கு
மராமரம் விட்டிங்கு
வந்த தென்னே''

தொன்மை வாய்ந்த புலவர்களே இந்தக் குரங்கு தனக்குரியதான மராமரங்களை விட்டு விட்டு ஏன் இங்கே வந்திருக்கிறது?'' என்ற பொருளுடைய முன் இரண்டடிப் பாடலை முடவர் பாடி முடித்தபோது தான் குருடருக்கு விஷயம் விளங்கியது.

''வந்தவாறு சொல்வேன்'' என்று ஆரம்பிக்கிறார் அவர்.

''தராதலம் வென்ற
தமிழ்மா றனையும் தன்
தம்பியையும்
இராகவ னென்றும் இலக்
குவ னென்றும் வந்
தெய்தியதே''

என்ன பதில் சொல்லப் போகிறாரோ என்று குருடரின் முகத்தைப் பார்த்தவர்கள் அதிர்ச்சியுறும் வண்ணம் ''பூவுலகத்தில் வெற்றிக் கொடி நாட்டிய தமிழ் மன்னனாகிய பாண்டியனையும் அவனது

திக்கம் சிவயோகமலர்
ஜெயக்குமார்

தம்பியையும் இராம இலக்குமணர் என்று நினைத்துத்தான் அது இந்த அரசவையிலே வந்திருக்கிறது'' என்று முடிக்கிறார்.

திருமலைராயனுடைய அரசவையிலே காளமேகமும், பாண்டியரசனுடைய அரசவையிலே இரட்டையரும் ஒரே மாதிரியான கவிதைகளைப் பாடியிருப்பது அக்காலப் பண்பாடோ அன்றிப் புலவர்களின் குணங்களின் ஒற்றுமையோ யாரறிவார்?

அரண்மனையில் மட்டுமல்ல ஆண்டவன் சந்நிதானத்திலுங் கூட இருவரது பாடல்களும் ஒரே மாதிரியிருக்க வேண்டுமா? ஆண்டவனுக்குக் கூட அவர்கள் பயப்படுவதில்லை.

காளமேகப் புலவர் ஒரு முறை முருகப் பெருமான் கோயிலுக்குப் போகிறார்;

''என்னப்பா ஆறுமுகா! உன்கோலம், உன் முன்னோரின் வரலாற்றைப் படிக்கச் சிரிப்பல்லவா வருகிறது. உன்னைப் பெற்றவன் பிச்சையெடுத்து வயிறு வளர்ப்பவன். உன் தாயோ மலையரசன் மகள், உன் மாமனோ இடையர் வீட்டில் நெய் திருடித்தின்பவன். உன் அண்ணனோ சப்பைக் காலன், இவையெல்லாம் உனக்கென்றமைந்த சொத்துக்களோ! ஐயோ பாவம்! உனக்கு என் அநுதாபம்!'' என்கிறார்.

''அப்ப னிரந்துண்ணி யாத்
தாள் மலைநீலி
ஒப்ப ரிய மாமனுறி திருடி
—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிற னுறு
முகத்தானு
கிங்கெண்ணும் பெருமை
யிவை''

காளமேகம் ஆறுமுகப் பெருமானுக்குப் பாடியது போல இரட்டையர் விநாயகப் பெருமானுக்குப் பாடியுள்ளனர். ஆனாற் பாடல்கள் ஒரே மாதிரியானவை.

விநாயகர் கோயிலொன்றின் கேணியிலே குளிக்கச் சென்ற இரட்டையர் தம் பணமுடிப்பைப் பாதுகாப்பாக விநாயகப் பெருமகன் முன் வைத்து விட்டுச் சென்றனர். திரும்பி வந்து பார்த்தபோது பண

14ஆம் பக்கம் பார்க்க

# தமிழில் எழுத்துச் சீர்திருத்தம்

ஆசிரியர்
''திருப்பாற்கடல்''

ஐயா!

அண்மையில் பேராசிரியர், கலாநிதி வண. நீ ம. சவரிமுத்து அடிகள் தலைமையில் நடைபெற்ற, 'தமிழில் எழுத்து சீர்திருத்தம்' பற்றிய கருத்தரங்கில், திருமதி ராணி சின்னத்தம்பி அவர்கள்.

''ஐயன்னா, ஔவன்னா என்பவற்றை மாற்றக்கூடாது என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை 'ஐ'யை 'அய்' என்றும், 'ஔ'வை 'அவ்' என்றும் ஏற்கனவே பாட நூல்களிலும் இலக்கண நூல்களிலும் பதிப்பித்திருப்பதைக் காணமுடிகிறது'' என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால்,கலாநிதி இ பாலசுந்தரம் அவர்கள், இக்கருத்தை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. இத்தருணத்தில், 1979ஆம் ஆண்டு அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் நடத்திய சேக்கிழார் விழாவை ஆரம்பித்து வைப்பதற்கு யாழ்ப்பாணம் வந்திருந்த பேராசிரியரும், மொழியியல் வல்லுநருமாகிய டாக்டர்சொ. சிங்காரவேலன் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் சிந்தனைக்குரியன. எனவே, அவற்றை ஈண்டுத் தருகின்றேன்:

''அண்மையில் தமிழ் எழுத்துக்கள் தொடர்பாகத் தமிழக அரசு வெளியிட்டுள்ள திருத்தங்கள் முழுமையானவையல்ல... ஐ.ஔ என்ற உயிர் எழுத்துக்களை அய் அவ் என்று மாற்றுதல் வேண்டும் என்பது அவற்றுள் ஒரு திருத்தம். இதனால் குழப்பம் ஏற்படும் என்பது தெளிவு. செய்யுள் யாப்பிலக்கணத்தில் இது பல பிழைகளை உண்டாக்கும். சில தொடர்களை இந்த முறைப்படி பார்த்தால் கேலியாகக்கூடப் படிக்கவேண்டிய நிலை வரும். உதாரணமாக அவ்வைப்பாட்டி என்ற தொடரைப்பாருங்கள்.இந்தத் திருத்தங்கள் இன்னும் சிறிது நிதானமாக ஆராயப்பட்டுத் தெளிவோடு முழுமை பெற்றிருந்தால் எல்லோரது மகிழ்ச்சிக்கும் உட்பட்டிருக்கக் கூடும்......''

(79.06.08, ஈழநாடு)

**க. வைத்தீசுவரக்குருக்கள்,**
**தமிழ் வளர்ச்சிக்கழகம்**
**காரைநகர்**

# பாரம்பரிய மருத்துவத்துக்கு சரபோஜி ஆற்றிய பணி!

தமிழகத்திலே சோழர் ஆட்சிக் காலத்தில் ஆயுர்வேத மருத்துவமுறை ஓரளவு வளர்ச்சி கண்டிருந்தது. கி. பி. 1063 – 1069 ஆண்டுக் காலத்தில் ஆட்சி செய்த வீரசோழன் காலத்திற்குரிய 'திருமுக்கூடற் கோயிற் சாசனம்' மூலம் அக்காலப்பகுதியில் 'வீரசோழன் ஆதுலசாலை' என வழங்கப்பட்ட வைத்திய சாலை பற்றிப் பல விவரங்கள் தெரியவந்துள்ளன.

வீரசோழன் வைத்தியசாலையிற் பல சிகிச்சைப் பிரிவுகளும் மருந்துகளும் இருந்தனவென்றும், வைத்தியர்கள் பலர் கடமையாற்றினர் எனவும், மூலிகைகளை அடிப்படையாகக் கொண்ட மருந்துகளே பெரிதும் பயன்படுத்தப்பட்டனவென்றும் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மருத்துவத்தைப் பாதுகாத்த மன்னர்

பிற்காலத்தில் தமிழக மருத்துவத்துறையிற் பெருந்தொண்டாற்றியவராகத் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னருட் பெரும் புகழ் பெற்ற சரபோஜி விளங்குகிறார். இவர் காலத்திலேயே (கி. பி. 1798–1832) தஞ்சை ஸ்ரீ சரஸ்வதிமகால் நூல்நிலையம் பார்புகழும் கலைக்கோயிலாகியது.

மன்னர் சரபோஜி பல மொழிகளில் அநேக நூல்களை இயற்றியுள்ளார்; தொகுத்துள்ளார். இவர் சிறந்த கவிஞர்; மருத்துவர்; கலைஞர். பல நூல்களை

# சரஸ்வதி மஹால் ஒரு பொக்கிஷம்

மராத்திய மொழியில் மொழிபெயர்த்துள்ளார். இவரது பன்மொழிப் புலமை மொழிபெயர்ப்புக்களுக்கும், நூல் சேகரிப்புக்கும் நன்கு உதவியது. சமஸ்கிருதத்தில் நான்கு நூல்களையும், மராத்திய மொழியிற் பதினைந்து நூல்களையும், வேறு மொழிகளில் சில நூல்களையும் இயற்றியதோடு, பல வித ஆராய்ச்சிகளின் பயனாய்க் கிடைத்த மருத்துவ அநுபவ உண்மைகளைத் தமிழிலும் நூல்களாகத் தொகுத்துள்ளார்.

## தன்வந்திரி மகாலின் சிறப்பு

தஞ்சையில் 'தன்வந்திரி மகால் எனும் ஆராய்ச்சிக் கழகத்தை ஏற்படுத்தி வைத்தியத்துறையில் ஆர்வமுள்ள அநேகருக்கு ஊக்கமளித்தார். இந்த ஆராய்ச்சிக் கழகத்தில் வைத்திய நிபுணர்கள், ஆயுர்வேத, சித்த, யூனானி முறைகளை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்த்து ஆராய்ந்து அநுபவங்களையும், அபிப்பிராயங்களையும் அட்டவணைப்படுத்தினர். அட்டவணைப்படுத்தப்பட்ட ஆராய்ச்சிகள் செய்யுள் வடிவாக்கப்பட்டு ஏடுகளில் எழுதப்பட்டன. தமிழிலே தயாரிக்கப்பட்ட அட்டவணைகள் பல, மராத்திய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டன.

ஏராளமான பொருட் செலவில் மருந்துகள் 'தன்வந்திரி மகாலில்' தயாரிக்கப்பட்டு மக்கள் நலனுக்காகத் தேர்ந்த வைத்தியர்களுக்குஇலவசமாக வழங்கப்பட்டன. அன்று தன்வந்திரி மகாலில்' நீண்ட காலம்வரை உபயோகிக்கக் கூடிய வகையிலே தயாரிக்கப்பட்ட சிலமருந்துகள், தஞ்சையில் இன்றும் சில பழம் பெரும் குடும்பத்தாரிடம் கிடைக்கின்றன.

தன்வந்திரி மகால் உபயோகத்திற்கென்றே அரண்மனைப் பகுதியில் ஒரு மூலிகைத் தோட்டமும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. வைத்தியர்கள்

டாக்டர்

**வி.ரி. இளங்கோவன்**

பச்சிலைகளின் அடையாளங்களைச் சுலபமாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, இயற்கையான வர்ணங்களில் முக்கியமான பல பச்சிலைகளின் சித்திரங்கள் புத்தக ரூபமாக்கப்பட்டுள்ளன. அப்பச்சிலைச் சித்திரங்களைத் தஞ்சை சரஸ்வதிமகால் நூல் நிலையத்திலே இன்றும் காணலாம். அன்றைய ஓவியர்களின் கலைநுட்பம்-கைவண்ணம்தான் எத்தகையது! வர்ணங்கள் இன்றுதான் தீட்டப்பட்டவை போல மிளிர்கின்றன.

பல்வேறு தேச மதத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் அன்று தன்வந்திரி மகாலில் கடமையாற்றினர். தற்போது தஞ்சை சரஸ்வதி மகால் நூல்நிலயத்தார் தமிழிலும் மராத்தியிலும் மற்றும் மொழிகளிலும் வெளியிடும் மருத்துவ நூல்கள், சரபோஜி மன்னரால் தன் வந்திரி மகாலில் தொகுக்கப்பட்ட வைத்திய அட்டவணைகளிலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்டவையாகும்.

## உலகில் சிறந்த ஏட்டுப்பிரதிகள் கொண்ட நூல்நிலயம்

பல இடங்களுக்கும் யாத்திரை மேற்கொண்ட மன்னர் சரபோஜி ஏராளமான பொருட் செலவிற் கணக்கற்ற நூல்களை விலைக்கு வாங்கியும் வாங்க முடியாதவற்றின் பிரதிகளைச் சேகரித்தும் உதவிய தன் பயனாய் இன்று தஞ்சை சரஸ்வதி மகால் நூல்நிலயம் உலகிற் சிறந்த ஏட்டுப்பிரதிகள் கொண்ட நூல் நிலயமாக விளங்குகிறது.

சம்ஸ்கிருதத்தில் எண்ணற்ற நூல்களைச் சேகரித்த மன்னர், அகத்தியர், தேரையர், ப்ரம்ஹமுனி, மச்சமுனி, தன்வந்திரி, சட்டைமுனி, யுகிமுனி திருமூலமுனி, சொங்கணர் போன்ற ரிஷிகளும், மற்றும் பல பெரியார்களும் இயற்றிய தமிழ் மருத்துவ நூல்களையும் சேகரித்து வைத்துள்ளார்.

கௌரி நாடி, தும்மல் சாத்திரம், நாடி சாத்திரம், ஜ்வரசாத்திரம், சர்ப்பாரூடம், வாஜீகரணம் (காயகல்பம்) சஸ்திரவிதி (இரண சிகிச்சை ஆயுதங்கள்) விஷவைத்தியம், மந்திரவைத்திய சாத்திரம், ரசக்குவைப்பு, சரவாதம் சரக்குகத்தி, மிருக வைத்தியம் முதலிய விடயங்களைப் போதிக்கும் நூல்களையும் மன்னர் சேகரித்துள்ளார். ஆனால் இவற்றில் சிலவற்றை இயற்றியவர்களின் பெயர்களை அறிய முடியவில்லை. சம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு மொழிகளில் எழுதப்பட்ட காம சாத்திர நூல்களும் பல உள்ளன. இவை மருத்துவ பாகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும்.

## இந்திய மொழி அச்சகம்

மன்னர் அரண்மனையிலேயே 'நவ வித்தியா கலாநிதி வர்ண யந்திரசாலை' என ஓர் அச்சகத்தை ஏற்படுத்தி அதில் நூல்கள் பலவற்றையும் அச்சேற்றி வந்தார். அக்காலத்தில் இந்திய மொழிகளுக்குரிய வேறு அச்சகங்கள் ஏற்படவில்லையென்று குறிப்பிடப்படுகிறது. மன்னர் தான் சேகரித்து ஆராய்ந்து எழுதிய நூல்கள் யாவும் அச்சேற்றப்படமுன் (1832) காலமாகியமை பாரம்பரிய மருத்துவத் துறைக்குப் பேரிழப்பாகும்.

## இலவச மருத்துவம்

மக்கள் நலனுக்காக பல மருத்துவ நிலையங்களை நிறுவிய மன்னர் அவற்றில் இந்திய டாக்டர்களையும்,ஆங்கில வைத்திய நிபுணர்களையும் நியமித்திருந்தார். நோயாளிகளுக்கு இலவச மருத்துவம் அளிக்கப்பட்டதுடன், நோய் குணப்பட்டு தம் இருப்பிடம் திரும்புவோரின் நிலையறிந்து வெகுமதிகளும் வழங்கப்பட்டனவாம்.

அக்காலத்தில் புகைப்படம் பிடித்தல் அறிமுகப்படுத்தப்படவில்லை. ஆனால் நோயாளிகளின் கண்கள் முதலிய வெளித்தோற்ற அங்கங்கள் சிறந்த ஓவியர்களைக் கொண்டு இயற்கை வர்ணங்களிற் சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. கண்நோய் மருத்துவப் பிரிவில், நோயுற்ற கண்களின் சித்திரங்கள் அழகுற வரையப்பட்டு நோயாளியின் விவரம், நோய்களின் விவரங்கள், சிகிச்சை முறைகள் யாவும் ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புத்தகங்கள் தஞ்சை சரஸ்வதி மகாலில் இன்றும் உள்ளன. 'பார்வை இழந்த ஒருவருடைய கண்ணில் ஊசி குத்தி முறிந்துவிட்டது. கண்ணில் தங்கிய அந்த உடைந்த ஊசியை 'சாமணம்' என்னும் ஆயுதத்தால் எடுக்கப்பட்டதான விவரங்கள்' உட்படப் பல விவரங்கள் அந்தப் புத்தகங்களில் உள்ளன

மேல் நாடுகளிற் பிரசுரமான பல நூல்களைக் கூட மன்னர் சரபோஜி நூல் நிலயத்திற்கெனச் சேகரித்துள்ளார். ரணவைத்திய சாத்திரம், தாவரசாத்திரம், உடற்கூறு சாத்திரம், மிருக வைத்தியம் போன்ற பல சாத்திரங்களைக் கூறும் நூல்களை அவர் சேகரித்துள்ளார். மன்னர் சரபோஜி தயாரித்த உடற்கூறு சாத்திரப் புத்தகங்கள் அழகிய பெரிய படங்கள் அடங்கியவை.

## பல்கலை வேந்தர் சரபோஜி

மன்னர் பல கலைகளிலும் வல்லவர். அவர் சிறந்த மருத்துவர், கலைஞர் மட்டுமல்ல சிறந்த வேட்டைக்காரர். குதிரையேற்றத்திலும், குறி பார்த்துச்சுடுவதிலும் வல்லவர். மிருக வளர்ப்பு பறவைகள், மிருக வைத்தியம் சம்பந்தமான பல ஓவியங்களையும் வரைவித்துள்ளார்.

பல நாட்டு உணவு வகைகளைப் பற்றியும் அவற்றின் நன்மைகள் குறித்தும் ஆராய்ந்து 'பாக சாத்திர நூல்களை'யும் எழுதுவித்துள்ளார். 'சரபேந்திர பாக சாத்திரம்' என்னும் நூல் அவரால் தொகுக்கப்பட்டதாகும் ஆனால் இதன் முழுப் பிரதி தற்போது கிடைக்கவில்லை.

## மைந்தர் சிவாஜி பணி

முப்பத்திநான்கு ஆண்டுகால ஆட்சியின்பின் 1832–ல் மன்னர் சரபோஜி காலமானார். அவருக்குப் பின் அவரது மைந்தர் சிவாஜி தந்தையாரின் பணிகளைத் தொடர்ந்தார். பலர்இயற்றிய உடற்கூறு சாத்திரப் படப்புத்தகங்கள், சிவாஜியால் சேகரித்துத் தொகுக்கப்பட்டன.பல வெளிநாட்டினர் இக்காலத்தில் தஞ்சைக்கு விஜயம் செய்து சரஸ்வதி மகாலைப் பார்வையிட்டுப் பாராட்டிச் சென்றுள்ளனர்.

கி.பி. 1855–ல் மன்னர் சிவாஜி காலமான பின்னர் அவருக்கு ஆண் சந்ததி இல்லையென்ற காரணத்தைச் சொல்லி ஆங்கில ஆட்சியினர் தஞ்சை சமஸ்தானத்தையே கபளீகரம் செய்து விட்டனர்.

பிற்காலத்தில் மன்னர் குடும்பத்தினரதும், பொதுமக்களினதும் இடையறாத முயற்சியினாலும், நடவடிக்கைகளாலும் 'சரஸ்வதி மகால் சொத்துக்கள் அழிவுறாமலும், சேதப்படுத்தப்படாமலும் காப்பாற்றப்பட்டன.

மன்னர் குடும்பத்தின் வாரிசான சத்ரபதி பிரதாபசிம்ஹராஜ சாஹேப் 1927–ம் ஆண்டுமுதல் சரஸ்வதி மகால்

15ஆம் பக்கம் பார்க்க


# ஆங்கிலம் பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நாமும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால்மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப்பயிற்சி. தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

**Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து**

★ I thank you very much for your nice training. I can speak and write english now. I never forget your training centre and I like to introduce your training centre to my friends and relations.

MISS. RADSANIYANAYAKI KRISHNAPILLAI
NARANTHANAI CENTRAL, KAYTS.

★ I can speak and write english very well now. I feel I am very happy when I talk with my friends because of your spoken english is enough for me.

MISS SOZAMATAEVY KRISHNARAJAH
KINGS AVENUE, URUMPARAI EAST,
URUMPARAI.

★ I am very glad to write my thoughts in this letter. I am proud of you and your centre BTC has cultivated my english knowledge withen three months It is yours success, NO DOUBT. I have already told about your centre to my friends. I can help to your centre whenever I can.

MASTER THAVANAYAGAM GNANAVINTHAN
''SHUKTHANTHAM'' KARAITIVU-1.

★ I would like to inform you that after I got BTC english training I have learn a lot of vocabulary and improved my english knowledge.

Miss S. FOWZIYA ANAS,
No. 14, N. H. MAWATHA,
CHINA FORT, BERUWELA.

★ Before I join to your BTC as a student I had very hesitation and fear to speak english, no by the helpof your BTC I have fair knowledge to read, write and speak in english.

MR K. GNANALINGAM, MAIN STREET,
THAMBILUVIL – 2. (E. P.)

★ வெளிநாடுகளில் உள்ள மாணவர்க்கு விசேட ஊக்குவிப்பு திட்டங்களுடன் தபால்மூலம் ஆங்கிலம் நடைபெறுகிறது.

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்புகொள்க.

**BRIGHT TRAINING CENTRE**

P. O. Box 162 Colombo

07183

# கம்பியூட்டர் உடலுழைப்புக்கே உலை வைத்துவிடுமா?

''கம்பியூட்டருக்கு பகுத்தறிவூட்ட விஞ்ஞானிகள் தீவிர முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள். இது மனித குலத்திற்கே ஆபத்தாக முடிந்துவிடும் என சிலர் அஞ்சுகிறார்கள். இதற்கு எல்லா விசயங்களையும் கற்றுக் கொடுக்காமல் சில விசயங்களை மட்டுமே கற்றுக் கொடுக்க வேண்டுமென்பதே இவர்களது வாதம். விஞ்ஞானிகளே இவர்கள் பயப்படும் அளவுக்கு பகுத்தறிவுள்ள கம்பியூட்டர்கள் உருவாக மாட்டா என்கிறார்கள்.''

**வி.என்.எஸ்.உதயசந்திரன்**

மனிதன் சிந்தித்துச் செயலாற்றும் திறனை இழந்து விடுவானோ என்று அஞ்சுமளவுக்கு உலகு கம்பியூட்டர்களின் மயமாகி வருகிறது. கம்பியூட்டரின் உற்பத்திச் செலவு பெருமளவு குறைந்தமையும் கம்பியூட்டர்களின் பயன்பாடு விரிவடைந்தமைக்குப் பெரிதும் காரணமாகும்.

## சிந்திக்கும் ஆற்றல்

அமெரிக்காவிலுள்ள ஆஸ்டின் நகரில் கம்பியூட்டர் நிபுணர்களும் மொழியியல் வல்லுநர்களும், உளவியல் வல்லுநர்களும் கூடி ஒரு இயந்திரத்துக்குச் சுயமாகச் சிந்தித்துச் செயற்படும் திறனை உண்டாக்க முயல்கிறார்கள்.

கம்பியூட்டருக்கு சிறு குழந்தைகளுக்குப் புரிகின்ற விஷயங்கள் கூடப்புரியாது. மனித மொழியையும் பகுத்தறிவுத் திறனையும் கற்று கொடுக்க முடியாதிருப்பதாலேயே சுய சிந்தனையுள்ள கம்பியூட்டரை உருவாக்க முடியவில்லை. இந்நிலையிலும் விஞ்ஞானிகள் மனந்தளராமல் ஆயிரக்கணக்கான தகவல்களையும் இலக்கண விதிகளையும் பேச்சு முறைகளையும் ஒரு கம்பியூட்டருக்குள் திணித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதற்காக அமெரிக்காவில் இருபத்தொரு மிகப்பெரிய வர்த்தக நிறுவனங்கள் கூட்டணி அமைத்து மைக்ரோ எலக்ட்ரானிக்ஸ் தொழில் நுட்பவியல் கார்ப்பரேஷன் (MCC) என்றஅமைப்புக்களை தோற்றுவித்து தமது தொழில் வல்லுநர்களையும் பணவசதிகளையும் அம்முயற்சியில் ஈடுபடுத்தியிருக்கின்றன.

அங்கே எதிர்காலம் உருவாக்கப்பட்டு வருகிறது. அறிவியல் எல்லைகள் விரிவாக்கப்பட்டு வருகின்றன.

## செயற்கை அறிவூட்டல்

செயற்கை அறிவூட்டல் (Artificial Inteligence) உற்பத்திகள் மூலம் கம்பியூட்டர்களுக்குச் சதுரங்கம் விளையாடவும் மருத்துவநோய்க் குறியறியவும், வேறுபல காரியங்களைச் செய்யவும் திறமைகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன.

போர்க்களத்திலும் தொழிற்சாலைகளிலும் வீடுகளிலும் தேவைக்கேற்றபடி சிந்தித்துச் செயலாற்றக் கூடிய ஐந்தாவது தலைமுறைக் கம்பியூட்டர்களை உருவாக்க 'எம்சிசி'யின் வேறு பல ஆய்வகங்களும் முயன்று வருகின்றன.

இருபது ஆண்டுகளுக்கு முன் ஒரு கம்பியூட்டர் சதுரங்கம் விளையாடுமா? ஒரு படத்தை அடையாளம் காணுமா? வாய் மூலம் எளிய ஆணைகளைப் புரிந்து கொள்ளுமா? என்ற வினுக்களை எழுப்பி சந்தேகத்தைத் தெரிவித்தார்கள்.

ஆனால் இன்று கோடிக்கணக்கான தகவல்களைப் பகுப்பாய்வு செய்கின்ற பிரமிக்க வைக்கும் கணித பிரசச்னைகளுக்கு இமைப்பொழுதில் தீர்வு காண்கின்ற, ஆளற்ற துணைக்கோள்களைச் சூரிய மண்டலத்தின் வெளி விளிம்புகளுக்கு இட்டுச் செல்கின்ற அதிசயக் கம்பியூட்டர்கள் வந்து விட்டன.

மனித மன இலக்குக்கள் ஆசைகள், நம்பிக்கைகள் ஆகியவை கம்பியூட்டருக்குப் புரியாது. எதற்காக செய்கின்றோம் என்பது கூட அவற்றுக்குத் தெரியாது. சுருங்கக்கூறின் சுவையறியாக் கரண்டிகள் இவை.

## கருவிகளுக்கு அறிவு

'எம்சிசி'யின் இயக்குநரான ஜோனதன் ஸ்லோகம் (Jonathan Slocum) சொற்களில் இருந்து கருவிகளுக்குப் பகுத்தறிவூட்டும் வழிமுறைகளை அறியலாம் என்று கூறுகின்றார்.

ஒரு குழந்தைக்கு ஒருபொருளைக்காட்டி இது பந்து இது பொம்மை என்று சொன்னால் பந்து,பொம்மை என்ற சொற்களை வைத்தே அந்தப்பொருள்களை அடையாளம் காணுகின்றது.

அந்தச் சொற்களுக்கு அர்த்தமென்ன என்பதை குழந்தை தெரிந்து கொள்வதில்லை. அதே போல எண்ணியல் கம்பியூட்டர்களும் அவற்றுக்கு ஊட்டப்படும் சொற்களின் அர்த்தம் என்ன, அவற்றுக்கு அப்பால் என்ன இருக்கிறது என்பதையெல்லாம் புரிந்து கொள்ளா.

அவை மனிதனிடம் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவும் அவனிடமிருந்து கற்றுக்கொள்ளவும் திறமை பெறுதவரை அவற்றுக்குப் பகுத்தறிவு ஏற்படாது.

ஒரு நாலு வயதுக் குழந்தைக்கு இலக்கணம் கற்றுக் கொள்ள இருக்கின்ற திறமையை ஒரு கம்பியூட்டருக்கு உண்டாக்க முடிந்தால்கூட நிபுணர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். ஆனுல் அது தான் இன்றுவரை முடியவில்லை.

ஒரு வார்த்தைக்கு அர்த்தமென்ன என்பதை மாபெரும் கம்பியூட்டர்களாற் கூடக் கண்டு பிடிக்க முடியாது. ஒவ்வொரு சொல்லுக்கும் வெவ்வேறு அர்த்தங்கள் இருப்பது பெரிய இடைஞ்சல்களைத் தருகின்றது மனிதர்கள் தமக்குட் பேசிக்கொள்ளும்போது இடம் பொருள், ஏவல் பார்த்துப் சொற்களின் பொருளைச் புரிந்து கொள்வார்கள். சொன்னது புரியாவிட்டால் மறுபடியும் சொல்லிக்கேட்டுப் புரிந்து கொள்வார்கள்.ஆனுல் கம்பியூட்டர்களால் அப்படிச் செய்யமுடியாது.

## நம்பிக்கைகள்

எதிர்காலத்தில் வரப்போகும் கம்பியூட்டர்கள், ஒரு வார்த்தையின் வெளிப்படையான அர்த்தத்தை எப்போது ஏற்றுக்கொள்வது; எப்போது விளக்கம் கேட்பது எப்போது புரியவில்லை என்று ஒப்புக் கொள்வது; என்பதையெல்லாம் தெரிந்து வைத்திருக்கும் என விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள்.

கம்பியூட்டருக்கு உருவங்கள், உவமைகள், மரபுக்கூற்றுகள் போன்றவற்றைப்புரிந்து கொள்ளும் திறமையை உண்டாக்க ஒரு விஞ்ஞானப்புரட்சி தேவையாகும்.

கம்பியூட்டர் ஆணைத்தொடரில் நிறைய விஷயங்களைத் திணிக்க வேண்டும். நிறைய விடயங்களைத் தெரிந்தால் மேலும் அதிகமாகக் கற்றுக் கொள்ள முடியும் என அமெரிக்க விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றார்கள்.

டக்ளஸ் லெனட் (Douglas Lenat) என்ற நிபுணர் எதிர் காலத்துக் கம்பியூட்டர்கள் ஒரு பிரச்சனையைப் பரிசீலித்து அதைத் தீர்க்கும் உத்தியைக் கண்டுபிடித்து அந்த உத்தியால் பிரச்சனை தீர்க்கப்படுகின்றதா என்பதைக் கண்காணித்து தேவைப்பட்டால் வேறு ஒரு உத்தியைக் கையாளக்கூடிய திறமையையும் பெற்றிருக்கும் என்று கூறுகின்றார்.

'விழிப்புணர்வு' என்பது நாம் செய்வதைத்தொடர்ந்து பரிசீலித்துக் கொண்டேயிருப்பதாகும்.கம்பியூட்டர் ஆணைத் தொடர்களுக்கும் ஒருவகை விழிப்புணர்வு உண்டு. அவை செய்கின்ற காரியத்தைப் பற்றி அவை தெரிந்து கொண்டிருக்கவேண்டும். கம்பியூட்டரைப் பாதியில் நிறுத்தி ஏன் இப்படிச் செய்தாய் என்ற வினவை எழுப்பினால் அதற்கான காரணத்தை நமக்குத் தெரியப்படுத்தவே செய்யும் என்கிறார் கம்பியூட்டர் நிபுணர் ஜோனதன்.

ஒரு கம்பியூட்டரை உரையாடச் செய்ய வேண்டுமானால் பிரமாண்டமான நினைவு வங்கி அவசியமாகும்' அமெரிக்க, ஜப்பானிய விஞ்ஞானிகள் தற்போது இணை செயல் முறைப் படுத்திகள் (PARALLEL PROCESSORS) என்ல அமைப்புக்களை வடிவமைத்து வருகின்றார்கள்.

அவற்றுக்குத் தனித்தனியான பல நினைவு வங்கிகள் உண்டு. அவை கூடிச் செயற்பட்டு ஒரு பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுபிடிக்கும் மற்றைய விஞ்ஞானிகள் இத்தகைய இணைக் கம்பியூட்டர்களுக்கான புதிய மொழிகளை உருவாக்கி வருகின்றார்கள். அவை ஒரு பிரச்சினையைச் சரியான முறையில் துணைப் பிரச்சினைக் கூறுகளாகப் பகுத்துத்தரும்.

## கம்பியூட்டர் வசம்

விஞ்ஞானத்துறை மிக வேகமாக வளர்ச்சிஅடைந்து வருவதனுல் அடுத்த நூற்றாண்டுகளில் மனிதனை விடவும் அதிகத் திறமையுடன் அற்புதமான செயல்களைச் செய்யக் கூடிய கம்பியூட்டர்கள் உருவாகிவிடும்.

கடலடியிற் காணப்படும் தாதுக் கட்டிகளைத் தேடி எடுத்தல், கதிரியக்கக் கழிவுகளை நீக்குதல், அபாயகரமான சுரங்கங்களிற் பணியாற்றுதல் முதலிய மனிதன் செய்ய விரும்பாத அல்லது செய்ய முடியாத காரியங்களை அவை செய்யும்.

கம்பியூட்டர்கள் இந்த வேலைகளை எப்படிச் செய்யும் என்ற வினு எழலாம். கம்பியூட்டர் மூலம் இயங்கும் இயந்திர மனிதர்களே இவ்வேலைகளைச் செய்வார்கள்.

இப்போது சுமார் 500 வகையான நிபுண அமைப்புக்கள் அணு உலைகளைக் கண்காணிப்பது முதல் கனிமப் படிவுகளைக் கண்டுபிடிப்பது வரையான பணிகளில் ஈடுபட்டிருக்கின்றன.

ஒரு மனிதனுக்கு தனது திறமையின் எல்லை என்ன என்பது தெரியும். ஆனுல் ஒரு இயந்திரத்துக்கு அது தெரியாது. கம்பியூட்டருக்கு உலகத்தைப் பற்றிய பொது அறிவையும், தன்னைப்பற்றிய அறிவையும் ஊட்டித் தனது நிறைகுறைகளைப் புரிந்து கொள்ள வைக்கின்ற ஆணைத் தொடர்களை உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

அறிமுகமில்லாத பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்யவும், பட்டறிவின் அடிப்படையில் விதிகளைப் பயன்படுத்தி

[14-ம் பக்கம் பார்க்க]

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர் ச. அரியநாயகம்

## 23-07-1989 — 29-07-1989

**மேடம்:** பெரியோரால் பகை, இடமாற்றம், இனப்பகை வெளியூர் போனவர்கள் வருகை, இளைய சகோதர வழியுதவி.மாமன் வழிநன்மை வணிகர்கள் கடல் தொழில் இயந்திர தொழில் செய்வோர் இலாபம். உயர்பதவி மூலம் இடமாற்றம், தேடியவர் வருகை.

**இடபம்:** களஸ்திர சுகம், காதலர் வாழ்வில் மகிழ்ச்சி பணப்புழக்கம், வாகனசுகம் வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம். வெளிநாட்டு பிரயாண நிச்சயம், இளைய சகோதரவழி யுதவி' மாமன் வழியில் மனைச் சேர்க்கை, புதிய வாகன சேர்க்கை.

**மிதுனம்:** புகழ்தேடிவரும், சத்துரு வெற்றி, விருந்துபசாரம், உயர்பதவி மூலம் இடமாற்றம், வாகன சுகம், இளைய சகோதரவழி நன்மை, மாமன் வழியில் மகிழ்ச்சி, புதுத்தொழில், வணிகர்கள் வைத்தியர்கள் சோதிடம் பார்ப்போர் இலாபம்

**கடகம்:** பிதாவழி யோகம், வாகன இலாபம், வணிகர்கள் இலாபம், கல்வியால் புகழ், காதலர் மகிழ்ச்சி, புதுத் தொழில், தெய்வ ஆசி, வெளிநாடு போனவர்கள் வருகை, மனை பூமியால் இலாபம்,வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம்.

**சிங்கம்:** இராஜபயம், இடமாற்றம், வாகன சுகம், பெரியோராசி, பிரிந்தவர்கள் ஒன்றுசேருதல், எண்ணியதுகள் கடல்தொழில்செய்வோர் இலாபம், கல்வியால்தொழில், உயர்பதவி, உத்தமர்கள் உறவு, இராஜமரியாதை, வாக்கு வசீகரம், பெண்களாலுதவி பிரிந்த காதலர் ஒன்று சேருதல்,

**கன்னி:** புதுத் தொழில், புண்ணிய வழிபாடு, சகோதர வழியுதவி, மங்கள காரியம், வாகன சுகம், வணிகர்கள் கடல்தொழில்செய்வோர் இலாபம்,கல்வியால்தொழில், உயர் பதவி, உத்தமர்கள் உறவு.இராஜமரியாதை வாக்கு வசீகரம், பெண்களாலுதவி,பிரிந்த காதலர் ஒன்று சேருதல்.

**துலாம்:** பெரியோராசி, புகழ் தேடிவரும், எண்ணியது நடக்கும், புதுத்தொழில், விவாக நிச்சயம், வெளியூர் செய்தியால் நன்மை, இளைய சகோதர வழியில் கவலை,வணிகர்கள் கடல்தொழில் செய்வோர் நன்மை

**விருச்சிகம்:** வாகன நஷ்டம், பிதாவழியுதவி, வணிகர்கள் இலாபம், வெளியூர் செய்தியால் நன்மை, திடீர் பிரயாணம், மாமன்வழியுதவி, நாற்கால் ஜீவனநஷ்டம், புத்திரர் மூலம் கவலை, கல்வியால் தொழில், பிரிந்த காதலர் ஒன்று சேருவார்கள்

**தனுசு:** உயர்பதவி, உத்தமர்கள் உறவு, உல்லாச பிரயாணம், ஊருக்குள் கௌரவம், உழுர் உறவினர்களால் நன்மை, ராஜயோகம், விவாக நிச்சயம், விருந்துபசாரம், சினேகிதரால் நன்மை. வணிகர்கள் கடல் தொழில் செய்வேசர் இலாபம்.

**மகரம்:** வாக்கு வசீகரம் இராஜ மரியாதை, வாகன லாபம், வணிகர்கள் கடல் தொழில்செய்வோர் இயந்திர தொழில் செய்வோர் இலாபம் சோதிடர் வைத்தியர்கள் கௌரவிக்கப்படல், மாமன் வழியால் விவாக மகிழ்ச்சி, வெளியூர்போனவர்கள் வருகை

**கும்பம்:** வாக்கு வசீகரம். பணநிறைவு, பெரியோராசி, புகழ் தேடிவரும், உயர்பதவி, இடமாற்றம், இனசன மகிழ்ச்சி, இல்லறச் சிறப்பு, இருதொழில் வருமானம், இடம் விட்டுப்போனவர்கள் வருகை, இசைத் துறையில் புகழ்.

**மீனம்:** வித்தையால் புகழ். வணிகர்கள், கடல தொழில் செய்வோர் இலாபம், வாக்கு வசீகரம், பணப்புழக்கம், சகோதரவழியுதவி, தெய்வ வழிபாடு, தேடியவர்வருகை, வாகன மாற்றம், மங்கள காரிய நிறைவு, புதுத் தொழில்.

## காலங்கள் . . .

[7-ம் பக்கத் தொடர்]

அருளால் உன்னை ஒருகுறையும் இல்லாமல் காப்பாற்றுவான்'' என்று கூறியபோது எல்லோருமே சிரித்தனர்.

அன்றைய பொழுது இனிமையாகவும் கலகலப்பாகவும் இருந்தது. பகல் உணவை முடித்துக்கொண்டதும் சிந்து ரகுவுடன் சேர்ந்து கொண்டாள்

சந்திரஞானம் சமரசிங்காவும் சிறியுடன் அவனுடைய வீட்டிற்கு சென்று வந்தனர்.

நல்லதோர் நாள் பார்த்து திருமணப் பதிவை நடத்துவதாக தீர்மானம் செய்து கொண்டபின் அன்று மாலை ஐந்து மணியளவில் அவர்கள் விடைபெற்றுத் திரும்பிச் சென்றனர்.

'சிந்து நான் மாப்பிளைக்கு மூலதனம் அவன் பதவியும் குணமும் தான் என்று நினைத்தேன். என்னையே அந்த ஆள் தூக்கி யடிச்சுட்டாரே'' என்றார் பாலசிங்கம்.

சிந்துவின் உறவினர் சிலர் அன்று அங்குவந்து நின்றனர். அவளுக்கு கிடைத்தவாழ்க்கை பற்றி அவர்களும் மகிழ்ந்தனராயினும் ஓர் சிங்கள வளர்ப்புத்தாய் இவ்வளவு லட்சம் பெறுமதியான நகை கொடுக்க முன்வந்திருக்கிறாளே என எண்ணி வியப்படைந்தான்.

'என்னங்க அவர்கள் லட்சக் கணக்கில் சிந்துவுக்கு நகைபோட வைத்திருப்பதாய் சொன்னாங்களே. நான் மருமகப்பிள்ளைக்கு கொடுக்க என்ன வைச்சிருக்கிங்க?' என்றான் பரமேஸ்.

''சரியான கேள்வி கேட்டீங்க அத்தை' என்றான் பாலசிங்கத்தின் சகோதரியின் மகனான சிறு பையன் ரவி.

''ஏண்டா ரவி எனக்கும் அத்தைக்கும் முடிச்சுப் போடுறியா? உதைச்சிடுவேன் ஆமா. அது சரிடா ரவி அத்தை தன் சீதனத்திலல்லவா அப்படியென்றால் ஏதும் செய்யணும்'' என்று பாலசிங்கமும் கிண்டலாகவே கூறினார்.

'பாருங்க நான் ஒன்றும் வெறும் கழுத்தோட வரவில்லை. உங்கப்பா கேட்ட சீதனம் எல்லாம் கொடுத்துத்தான் என்னை விட்டாங்க' என்றாள், பரமேஸ்வரி.

'அம்மா, அப்பா பகிடிக்குச் சொன்ன நீங்கள் இப்படி எல்லாம்'' என்று சிந்து இடையில் புகுந்தாள்.

'சிந்து உங்கம்மா ரோசக்காரி சொன்னால் செய்து விடுவாள். ஆனால் சொல்லமாட்டாள்' என்றார் பாலசிங்கம்.

'செய்கிறேனா இல்லையா என்று பாருங்கள். எழுத்திலன்றைக்கு நீங்களே உங்கள் வாயாலே என் மனைவி மருமகனுக்கு இன்னது வாங்கி வைத்திருக்கிறாள் என்று சொல்ல வைக்கலை நான் வேலுப்பிள்ளையின் மகள் இல்லை'

'ஏன் இப்படிச் சொல்லேன் பாலசிங்கம் பெண்டாட்டியில்லை என்று எனக்கும் உன் பெருமை சேரட்டுமே' என்று சிரித்தார்.

பெற்றோரின் வேடிக்கைப் பேச்சுக்களை ரசித்தாலும் வீணாக மனக்கசப்பு ஏற்பட்டு விடுமோ என்று பயந்த சிந்து வேறு விடயங்களில் கதையை திசை திருப்பினாள்.

அன்றிரவு சிந்துவுக்கு தூக்கமே வரவில்லை. இனியகனவு. அலைகளில் அடிக்கடி விழிப்புற்றாள். அருகே ரகு வந்து கதைத்த போது ஏற்பட்ட இன்ப உணர்வுகளால் அவள் ஓர் புதிய உலகில் பிரவேசித்தாள். அவளை அவன் கேட்ட முதல் கேள்வி அவளை திக்குமுக்காட வைத்திருந்தது.

'சிந்து இவ்வளவு நாளும் என்னோடு பழகியபோது உன் மனதில் உள்ளதை மறைத்து வைத்திருந்ததேன்?' என்றான்.

'ம்' என்றாளே தவிர எதனையும் கூறவில்லை.

'அங்கிள் எனக்குப் பெண் பார்க்கப் போகிறேன். என்றதும் தான் பயம் வந்ததாக்கும்'

'அப்படி, ஒன்றும் நான் பயந்துவிடவில்லை. உங்கள் மனநிலை புரியாது எப்படி என் நிலையை கூறுவது. என்றுதான் தயங்கினேன்.

அன்று உங்களாடு இரவில் தனிமையில் வந்தேனே அப்போதாவது நீங்கள் உணர்ந்திருப்பீர்களென நினைத்தேன்.

'ம் அப்புறம்?'

'சிறி எதுவும் சொல்லவில்லை'

'என்னிடம் கேட்டான் நான் அதனை மறுத்து விட்டேன். முன் அறிமுகமில்லாத ஒருத்தி என்னுடன் பழக விரும்பியிருந்தால் அதுபற்றி யோசித்திருப்பேன். என்னை முன்னமே தெரிந்து கொண்டு பழகும் உம்மை எப்படி.........?'

'முதல் நாள் ஸ்கூலிலே நீங்கள் என்னோடு கதைத்து கொண்டு வந்த போதே எங்கள் ஸ்கூல் ரீச்சர் சிலர் என்னைக் கிண்டல் செய்தனர் ஆனால்......?'

'இப்படி வரும் என்று நினைக்கவில்லை'

'ம்'

என்ன எதற்கும் 'ம்' 'ம்' என்று நகங்களைப்பற்றி கிள்ளினான்.

'அருண்மொழியின் அம்மா தன் மகளைவிட உம்முடைய திருமணவிடயத்தில் மிகவும் ஆர்வமுள்ளவராயிருக்கின்றாவே?'

தாயில்லையே என்ற உங்கள் மனக்குறையை போக்க வந்திருக்கலாம் தானே?'

உமக்காக இல்லாமல் எனக்காகத்தான் வந்தாங்களா?'

'ஷ்சுயர் நீங்கள் அன்று அம்மா' 'அம்மா' ஓயாமல், அழைத்து தன் மனதையே கலக்கி விட்டீர்களாமே' என்று மேலும் பல கூறினாள் சிந்து.

'உண்மைதான் சிந்து' இதுவரை யாரையும் நான் அப்படி அழைத்ததில்லை என்னையறியாமலே அன்று அழைத்துவிட்டேன்' என்று கூறிவரும் போது கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சியையும் கூறினான் ரகுவரன்.

'அவர்கள் யாரோடும் அதிகம் பழகவிருப்புவதில்லை. அருண்மொழி மாதிரியே தான். நான் அந்த வீட்டிற்கு வந்து இவ்வளவு நாளாகியும் என்னுடன் கூட அதிகம் கதைப்பதில்லை. என்று அங்கிள் வந்து நம்ம கல்யாண விடயம்பற்றி அவர்களோடு கதைத்ததிலிருந்து அவர்கள் என்னை மிக மிக அன்பும் ஆதரவுடனும் கவனித்தார்கள். அதற்கு காரணம்.........பின்பு தான் தெரியவந்தது' என்று அவள் கூறி முடிக்க சிறி வீட்டுக்குச் சென்றவர்கள் திரும்பி வரவே அத்துடன் அவர்கள் உரையாடலும் தடைப்பட்டது.

(வளரும்)

## வழிகாட்டும்...

[6-ம் பக்கத் தொடர்]

வாக்க வேண்டுமானால் முதலில் ஆளைச் சரியாக்கி விட்டால் போதும் ஆள் சரியாகி விட்டால் நாடு தானே சரியாகிவிடும்.

ஆள் சரியாவதற்கு ஆன்றோர்களின் வழிகாட்டல் இன்றியமையாதது அரசர்கள் கூட அவைக்களத்தில் ஆன்றோர்களுக்குச் சரியாசனம் கொடுத்து அவர்கள் அறிவுரையைக் கேட்டு அரசு நடாத்தினர் என்பது தமிழர் வரலாறு ஆகும்.

## கம்பியூட்டர்...

[13-ம் பக்கத்தொடர்]

ஊகிக்கவும், சோதனை மூலம் தமது ஊகங்களைச் சரிபார்க்கவும் கூடிய ஆணைத் தொடர்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

பகுத்தறிவும், கற்கும் திறனும் கொண்ட ஒரு கம்பியூட்டர் இத்தகைய ஆணைத் தொடர்களை மனித உதவியின்றித் தாமே தயாரித்துக் கொள்ளும். ஆனால் அதற்குப் பகுத்தறிவையும், சுயசிந்தனையையும் கற்றுக் கொடுப்பதே இன்று விஞ்ஞானிகள் எதிர் நோக்கும் சிக்கலாகும். இது தொடர்பான ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடக்கின்றன.

## மிகைப்படுத்தல்

அறிவியல் படங்கள் கதைகளிற் சித்திரிக்கப் படுவது போன்று கம்பியூட்டர் மனிதர்கள் உருவாகிவிட்டால் அது மனித குலத்துக்கே ஆபத்தாக முடிந்துவிடும். மிக முக்கியத் திறமைகளை இவற்றுக்குக் கற்றுக் கொடுத்து விடக் கூடாது என ஒரு சாரார் வாதாடுகின்றனர். இப்போது அமெரிக்க, ஜப்பானிய தொழிற்சாலைகளில் இயந்திர மனிதர்கள் பணியாற்றி வருகின்றார்கள். எதிர்காலத்திலும் பணியாற்றத்தான் போகின்றார்கள். ஆனால் கற்பனைப் படங்கள், கதைகளில் கூறப்படுவது போன்று இயந்திர மனிதர்கள் இருப்பார்கள் என்பது மிகைப்படுத்தப்பட்ட கற்பனையே என அமெரிக்க நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

வளர்முக நாடுகளில் கம்பியூட்டர்களைப் பயன்படுத்துவதால் மனித உழைப்புக்கு இடமில்லாமல் போகும் அபாயம் உண்டு என அஞ்சப்படுகின்றது. வளர்முக நாடுகளில் மனித வளம் அதிகம். இதனாற் பலர் வேலைவாய்ப்பை இழக்க வேண்டிய அபாயம் ஏற்படலாம். இதனாற் சமூகத்துக்கும் பாரிய தாக்கம் ஏற்படும் என்று சமூகவியலாளர்கள் எச்சரிக்கின்றனர்.

## தெய்வம் . . .

[8-ம் பக்கத் தொடர்]

லின்றி அவனைத் தடுத்தலும் குழந்தையானது கொடிய நோயின் வாயில் அகப்பட்டால் அஞ்சுதலின்றி நல்ல வைத்தியம் செய்தலும், அது இறந்து போனால் பிறந்தவர் இறக்கை திண்ணம் என்பதைக் கண்டு மனங்கலங்காதிருந்தலும் சைவர்களல்லாதாரும் செய்யத் தக்கவைளாம்.

## வசைக்கவி...

[11-ம் பக்கத் தொடர்]

முடிப்பைக் காணவில்லை. விநாயகப் பெருமான் முன்வைத்த பணத்தை வேறுயார் திருடியிருப்பார்கள்? முடவர் பாடினார்.

''தம்பியோ பெண் திருடி
தாயா ருடன் பிறந்த
வம்பனோ நெய்திருடும்
மாமாயன்''

'தம்பியென்றால் பெண் திருடுபவன் குறவள்ளியைச் சூழ்ச்சிசெய்தே மணந்தவன். தாய்மாமன் கிருஷ்ணனோ நெய் திருடி உண்பவன்.''

குருடர் விடுவாரா? மிகுதி இரண்டடியையும் பாடுகிறார்.

''மூத்தவனே நம்மால் முடிச்
சவிழ்த்தான் என்செயலாம்
கோத்திரத்துக் குள்ள
குணம்''

''மூத்தவனான பிள்ளையார் தான் எங்கள் முடிச்சைத் திருடியிருக்க வேண்டும். அவர்கள் பரம்பரைக்குள்ள குணம். என்ன செய்வது?'' என்று மனதைத் தேற்றிக் கொள்கிறார்.

காளமேகப் புலவரதும் இரட்டைப் புலவரதும் வசைப் பாடல்களில் இத்தகைய ஒற்றுமைகளைக் காணமுடிகிறது.

## தெரிந்து கொள்ளுங்கள்

உலகத்தில் உள்ள மற்ற எந்த மிருகங்களையும் விட அதிக வேகமாக ஓடக்கூடியது பூனை வர்க்கத்தைச் சேர்ந்த சிறுத்தைதான். அதன் உடல் நீளமாகவும், கால்கள் மெல்லியவையாகவும், ஆனால் மிகுந்த வலிமை பொருந்தியவையாகவும் இருப்பதால் அது நிமிடத்திற்கு ஒருமைலுக்கு மேல் அதாவது ஒரு மணிக்கு எழுபது மைல்கள் ஓடக்கூடிய சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. அதிக வேகமாக ஓடக் கூடிய ஒரு வகை மான்கூட மணிக்கு அறுபது மைல்களுக்கு மேல் ஓடமுடிவதில்லை. குதிரையின் அதிகபட்ச வேகம் நாற்பத்து மூன்று மைல்களாகும். ஆபிரிக்காவிலுள்ள சில ஜாதியினர் சிறுத்தையின் தோலை உடையாக உடுத்திக் கொள்கின்றார்கள்.

●

உலக நாடுகளில் உள்ள எல்லா நதிகளையும் விடப் பெரியது அமெரிக்காவிலுள்ள மிஸிஸிப்பி என்ற அதிசய ஆறுதான் .4300 மைல் நீளமுள்ள மிஸிஸிபியில் நூற்றுக்கணக்கான உப நதிகள் வந்து சேருகின்றன. இது திடீர் திடீரெனத் திசை மாறுவதால் அமெரிக்காவிலுள்ள பல மாகாணங்களின் எல்லைகளே மாறிவிட்டன. மிஸிஸிபி சென்ற 1300மைல் தூரம் இன்று சாதாரண பூமியாகக் காட்சி அளிக்கிறது.

தொகுத்தவர் :
சுதுமலையூர் V.S. ஸ்ரீராம்


குழாய் கிணறுகள்
TUBE WELLS

பாரிய நவீன இயந்திரங்களின் மூலம் குழாய் கிணறுகள், ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து கொடுக்கப்படும். விவசாயிகள், குடிநீர் தேவையாளர்கள் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ரியூப் வெல் என்ஜினியேர்ஸ்
648 1/2, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

ரியூப் வெல் என்ஜினியேர்ஸ்
208, ஸ்ரேசன் வீதி
வவுனியா

07152



உடனடி வேலைவாய்ப்பு
T. V. TRAVELS

★ கனடா ★ அமெரிக்கா
★ அவுஸ்திரேலியா

நாட்டிற்கு செல்வோருக்கு
விஸா, ரிக்கற் செய்து தரப்படும்
குறுகிய நேரத்தில் செய்து தரப்படும்

மற்றும்

★ ஜேர்மன் செல்வோருக்கு
உடன் ஒழுங்கு செய்து தரப்படும்

★ சவூதி அரேபியா
Cleaners 450 S R
ஒரு மாதத்தில் பயணம் செய்யலாம்

★ KUWAIT நாட்டிற்கு
House Maid பெண்கள் (கிளீனர்) 30 KD

மற்றும்

சவூதி, குவைத், சிங்கப்பூர் ஆகிய
நாடுகளுக்கும் பிரயாணம் செய்யலாம்

T. V. TRAVELS
Brown Road
KOKUVIL

07168

## பெனஸிர் பூட்டோ அறையில் ஒட்டுக் கேட்கும் கருவி?

பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனஸிர் பூட்டோ தங்கியிருந்த ஹோட்டல் அறையில் ஒரு அலுமாரிக்குப் பின் ஒளித்து வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த ஒட்டுக் கேட்கும் கருவி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என 'நியூஸ் ஒஃப் த வேர்ல்ட்' என்னும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சமீபத்தில் பெனஸிர் பிரிட்டன் சென்ற போது 'ரிட்ஸ்' ஹோட்டலில் தங்கியிருந்து பிரிட்டனின் வெளிநாட்டுச் செயலாளர் உட்பட பல முக்கிய பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்.

இந்தக் கருவி பல வருடங்களாகப் பொருத்தப்பட்டிருப்பின் இவ்வறையில் தங்கியிருந்த பல முக்கியஸ்தர்களின் உள் அந்தரங்கங்கள் பதியப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இவ்வறிக்கை பற்றி பெனஸிரின் கருத்து வினவப்பட்டபோது 'நியூஸ் ஒஃப் த வேர்ல்ட்' பத்திரிகையை அநேகமானோர் வாசித்தாலும் அதை யாரும் நம்புவதில்லை. என்னறையிலிருந்து எந்த விதமான கருவியும் கண்டு பிடிக்கப்படவில்லை. அப்படி ஒன்று இரண்டு கண்டு பிடிக்கப்பட்டிருந்தால் மிகவும் பரபரப்பாய் இருந்திருக்கும் என்று கூறினார்.

## கவனிப்பாரற்ற நிலையில் குளங்கள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 40 சிறிய பெரிய குளங்கள் இருப்பதாகப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. இவற்றில் ஆறு பெரிய குளங்கள் பட்டினசபை எல்லைக்குள் அமைந்துள்ளன.

கோடை காலங்களில் குடிநீருக்கு மட்டுமின்றி குளிப்பதற்கு முதலாய் இப்பகுதி மக்கள் தூர இடங்கட்குச் செல்ல வேண்டியநிலை ஏற்படுகின்றது. பட்டின சபைக்குள் அமைந்திருக்கும் ஓரிரு குளங்களையாவது புனர் நிர்மாணம் செய்து கடலுக்குள் வழிந்தோடும் நீரைத் தேக்கி வைத்தால் இது பொது மக்களின் குறையை ஓரளவு நீக்கும். மக்களின் நலன் கருதி உரிய அதிகாரிகள் புனர்நிர்மாணப் பணியைச் செய்ய ஆவன செய்வார்களா என பொது மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

## அஞ்சலிக் கூட்டம்

நடிகமணி வி. வி. வைரமுத்துவின் அஞ்சலிக் கூட்டம் திரு. வீ. கே. சண்முகராசா தலைமையில் இன்று காலை 9 30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

## எரிபொருள் நிலையம் மறுசீரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள் விற்பனை நிலையம் மறுசீரமைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர்சபை மேற்கொண்டுள்ளது.

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள் விற்பனை நிலையம் இயங்காததால் தற்போது இப்பகுதி பாவனையாளர்கள் பலத்த கஷ்டங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## பூமியை நெருங்கிய குறுங்கோள்

(எஸ். பி. ஜே)

கடந்த மார்ச் மாதத்தில் குறுங்கோள் (Asteroid) ஒன்று பூமிக்கு மிகச் சமீபமாக வந்து சென்றது. வடிவத்தில் சிறியதான இக்குறுங்கோளின் குறுக்களவு அரை மைலாகும். பிரமாண்டமான பாறை என வர்ணிக்கப்படும் இக்குறுங்கோள் பூமிமேல் மோதியிருந்தால் மிகவும் பயங்கரமான அழிவுகள் ஏற்பட்டிருக்கலாம்.

கலிபோர்ணியாவில் உள்ள "மவுணட் பலோயார் வான்" ஆராய்ச்சிக்கூட தொலைநோக்கியினால் எடுக்கப்பட்ட புகைப்படத்தின்மூலம் வட அரிசோனு பல்கலைக்கழக வானவியல் நிபுணர் டாக்டர் ஹென்றி ஹோல்ட் இக்குறுங்கோளைக் கண்டுபிடித்தார். இதற்கு 'FC 1989' எனப் பெயரிடப்பட்டுள்ளது பூமிக்கு மிக அருகாமையில் (5லட்சம் மைல் இடைவெளி) வந்து சென்ற FC 1989, இதற்கு முன் ஒரு போதும் அறியப்படாததாகும்.

இக்குறுங்கோள் மார்ச் 23-ம் திகதியே பூமியின் சுற்றுப் பாதைக்குக் குறுக்காகக் கடந்து சென்றது. FC 1989 பூமியைக் கடந்து சென்ற பின்னர்தான் அதாவது, மார்ச் 31-ம் திகதி தான் இது கண்டுபிடிக்கப்பட்டது.

சமீப காலத்தில் பூமிக்கு மிக அருகாமையில் ஒரு குறுங்கோள் வருவது இதுவே முதல் தடவையாகும். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் "ஹெர் பேமிஸ்" (Her Pames) எனும் குறுங்கோள் பூமியை 4 லட்சம் மைல் தூரத்தில் கடந்து சென்றுள்ளது.

மணிக்கு சுமார் 46,000 மைல் வேகத்தில் செல்லும் FC 1989, சூரியனை நீள்வட்டப்பாதையில் ஆண்டுக்கு ஒரு முறை சுற்றி வருவதாயும், இது அவ்வப்போது பூமிக்கு சமீபமாக வந்து சென்றுகொண்டிருக்குமென்றும், இதன் சுற்றுப்பாதையை ஆராய்ந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

## மத்திய மாகாணப் போட்டியில் ஆண்கள் அணி வெற்றிபெற்றது

(விளையாட்டுத்துறை நிருபர்)

மத்தியமாகாண பாடசாலைகள் பூப்பந்தாட்ட வீரர்களுக்கும் நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு, சுற்றுலா செய்துவரும், இங்கிலாந்து 'ஈஸ்ற் அன்ஜிலியர்' மாணவ அணிகளுக்கும் இடையில், அண்மையில் கட்டுகஸ்தோட்ட சென். அந்தனீஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற சினேகபூர்வமான பூப்பந்து ஆட்டங்களில் இடம்பெற்ற 13 போட்டிகளிலும் மத்திய மாகாண பாடசாலை ஆண் வீரர்களே வெற்றிபெற்றனர்.

இப்போட்டியில் வீரன் கீர்த்தி வியனகேட்டிர வெகு சிறப்பாக ஆடி தன்னை எதிர்த்து ஆடிய ரெஸ் என்ற வீரனை 15:2—15:1 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் தோற்கடித்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார்.

பெண்கள் ஆட்டத்தில் நடைபெற்ற 3 போட்டிகளில் இரு போட்டிகளில் விருந்தினர்களும் ஒரு போட்டியில் மாத்திரம் மத்திய மாகாண கல்லூரி அணி வீராங்கனை நீலிகா கின்கென்ட, வீராங்கனை அன்ற்ருரெஸ்லை 11:1-11:0 என்ற புள்ளிகள் கணக்கில் இரு நேர் செற்றுகளில் வெற்றிபெற்றார்

### பாரம்பரிய ...

[12 ம் பக்கத் தொடர்]

நிர்வாகக்குழுவில் ஆயுள் அங்கத்தவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

#### சரபேந்திர வைத்திய வெளியீடுகள்

தற்போது மத்திய அரசின் உதவியுடன் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நிர்வாகக் குழுவொன்று சரஸ்வதி மகாலை நிர்வகித்து வருகின்றது. பல்துறை நிபுணர்கள் வைத்திய நிபுணர்கள். ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டு நூல்கள் ஏடுகள் யாவும் ஆய்வு செய்யப்பட்டு நூல்கள் வெளியிடப்படுகின்றன.

மன்னர் சரபோஜியின் தன்வந்திரி மகால் ஆராய்ச்சிக் கழகத்தில் ஆராயப்பட்டு அட்டவணைப் படுத்தப்பட்ட நூல்கள் 'சரபேந்திர வைத்தியம்' என்ற பெயரில் தொடர்ந்து நூல்களாக வெளியிடப்படுகின்றன. 'சரபேந்திரர்' என்பது மன்னர் சரபோஜியின் சிறப்புப் பெயராகும். தமிழில் மாத்திரமன்றி மராத்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளிலும் நூல்கள் வெளியிடப்படுகின்றன.

இன்று தஞ்சைப் பெருங் கோயிலையும், மன்னர் அரண்மனையையும், தமிழ்ப்பல்கலைக் கழகப் பணிகளையும் அறிந்து கொள்ளும் ஆர்வமுள்ளவர்கள் நிச்சயமாக சரஸ்வதி மகாலை அலட்சியப் படுத்தி விடமுடியாது. கலை இலக்கிய மருத்துவ ஆய்வாளர்களுக்கு அது ஒரு பொக்கிஷம்.

### கல்முனையில்...

பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரியவருகிறது.

இதனையடுத்து அப்பகுதி முஸ்லிம் பிரமுகர்கள் எடுத்த சமாதான முயற்சிகளினால் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜிகாத் என்னும் தீவிரவாத இயக்கம் அரசாங்க சார்புடைய முஸ்லிம் இயக்கமாகும். இந்த ஜிகாத் இயக்கத்தின் பின்னணியில் ஊர்காவல் படையில் பயிற்சி பெற்ற முஸ்லிம் இளைஞர்கள் செயற்படுவதாகக் கூறப்படுகிறது.

இக்பால் என்ற முஸ்லிம் தீவிரவாத இயக்கம் அரசாங்கத்திற்கு எதிராக செயற்படும் தீவிரவாத இயக்கமாகும்.

### 1983 ஜூலை...

முன்னணி விடுத்த அறிக்கையில்; படு துரோகத்தனமான வெலிக்கடை கொலைகளை நினைவு கூருவோம். சிறைப் பாதுகாவலரை விட மேலதிக விசேட ராணுவ பாதுகாவல் போடப்பட்ட வெலிக்கடை சிறையினுள் சிங்களக் காடையர்களும் சிறையிலிருந்த சிங்கள கைதிகளும் இராணுவத்தோடு சேர்ந்து எமது மக்களின் சுதந்திரத்திற்காகவும் உரிமைகளுக்காகவும் போராடி சிறையில் அடைக்கப்பட்டிருந்த எதிகனையோ தலைவர்களை சில மணி நேரங்களில் கத்திகள் இரும்புகள், வாள்கள் கொண்டு கொடூரமாக அடித்தே கொன்றனர். இதில் கொலையுண்டவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொ. கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கிராமசேவையாளரை...

இவரது அலுவலகத்திற்கு வரும் மக்கள் பல மணிநேரம் காத்திருந்து ஏமாற்றத்துடன் செல்கின்றனர். நண்பகலளவில் இவர் மதுபோதையுடன் அலுவலகத்துக்கு வராமல் வீதிகளில் நடமாடுவதாகவும் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

### மட்டக்களப்பு..

துடன் முப்பதிற்கு மேற்பட்ட வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பாலையடி வெட்டை என்னுமிடத்தில் மூன்று இளைஞர்கள் இராணுவத்தினரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மரணமாகினர்.

ஆரையம்பதி என்ற இடத்தில "குரு" என்று அழைக்கப்படும் இளைஞர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தும்பங்கேணியிலும், பழுகாமத்திலும், அம்பிலாந்துறையிலும் இடம்பெற்ற இயக்க மோதல்களில் பன்னிரண்டு இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

இதேவேளை கடந்தவியாழக்கிழமை இ. போ. ச. பஸ் ஒன்று கடுக்காமுனை என்ற இடத்தில் தீக்கிரையாக்கப் பட்டது.

### பிரேமா...

டும் என ஜனாதிபதி மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்த போதிலும் இக்கடிதத்தில் அந்த திகதி குறிப்பிடப்படாதது ஒரு திருப்பு முனையாக அமையும் எனவும் அரசியல் அவதானிகள் கருதுவதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன,

ஜனாதிபதி 19-ம் திகதி பிரதமர் காந்திக்கு எழுதிய கடிதத்தில் படைவிலகலுக்குரிய சமாதான அறிகுறிகள் தென்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் இக்கடிதம் இருநாடுகளுக்கும் இடையில் படைவிலகலால் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை தணித்துள்ளதாகவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## இந்தியா கனடாவிடம் தோல்வி

(விளையாட்டுத்துறை நிருபர்)

இன்ரகொண்டினென்ரல்' கிண்ணத்திற்காக நடைபெற்று வரும் கொக்கிப் போட்டியில் கடந்த 14ம் திகதி நடைபெற்ற அரை இறுதிப்போட்டியில், கனடா இந்தியாவை 3:2 கோல்கள் கணக்கில் தோற்கடித்து இறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதி பெற்றுள்ளது கொக்கி வரலாற்றில் முன்னைநாள் உலக கொக்கி சாம்பியன்களான இந்தியாவை கனடா தோற்கடித்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

வருகிற 22 ஆம் திகதி நடைபெற உள்ள இறுதி ஆட்டத்தில், நெதர்லாந்தை எதிர்த்து கனடா மோதும். இப்போட்டித் தொடரில் 'ஏ' பிரிவு ஆட்டத்தில் மோதிய பொழுது இரு அணிகளும் தலா ஒரு கோலைப் போட்டதினால் ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி 'டிரோவில, முடிவடைந்தமை இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

## விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை

(வண்ணார்பண்ணை)

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு அத்தியாவசியம் தேவைப்படும் விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்கு யாழ் கல்வித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பான விபரங்களை கல்வியதிகாரி (உடற்கல்வி) திரு. த. அருணகிரிராசா கோட்டக்கல்வி அதிகாரிகளிடமிருந்து கோரியுள்ளார்.

கோட்டக் கல்வியதிகாரிகள் கொத்தணி அதிபர்கள் மூலம் பாடசாலைகளுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் தொடர்பான விபரங்களைச் சேகரித்து வருகின்றனர்.

## நேற்றுமுன்தினம் பரந்தனில் சாரதி மீது துப்பாக்கிச் சூடு யாழ்தேவி ரயில் சேவை ரத்து

நேற்றுமுன்தினம் யாழ்தேவி ரயில்மீது பரந்தனில் வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அதன் உதவி சாரதி படுகாயமடைந்ததைத் தொடர்ந்து வடபகுதிக்கான ரயில் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என புகையிரதப்பகுதி அறிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் இருந்து வந்த யாழ்தேவி அநுராதபுரம் வரையும் சேவையிலீடுபட்டது. அநுராதபுரத்திற்கு அப்பால் செல்ல ரயில் சாரதிகள் மறுத்து விட்டனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் நடந்த சம்பவத்தில் படுகாயமடைந்த ரயில் சாரதி நேற்றுக்காலை கொழும்பு சென்ற ரயில் மூலம் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை தமிழ் ரயில் சாரதிகளும் யாழ்தேவி ரயில் சேவையை யாழ்ப்பாணம் வரை மேற்கொள்ள விருப்பம் தெரிவிக்கவில்லையெனவும் புகையிரத வட்டாரங்கள் தெரிவித்தன.

### அமைதிப்படை ..

அண்மையில் பாகிஸ்தானில் நடைபெற்ற 'சார்க்' வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் இலங்கை கலந்துகொள்ளாதது கண்டிக்கப்பட வேண்டியது என்றார்.

### இலங்கையுடன்...

இந்தியா எதிர்பார்த்து இருப்பதாகவும் அவர் எப்போது வந்தாலும் நாம் பேசத்தயார் எனவும் அவர் மேலும் சொன்னார்.

### நேற்றுமுன்தினம்...

கள் இடம்பெற்றன.

கன்பொல்லை, இராஜகிராமம், மஹாத்மாவீதி போன்ற பகுதிகளில் சில வீடுகள் சேதமடைந்தன உயிர்ச்சேதம் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவங்களால் இப்பகுதிகளிலிருந்து மக்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

### யாழ்ப்பாணம்...

சேவையும், பஸ் சேவையும் நண்பகலுடன் நடைபெறவில்லை

இதேவேளை கடந்த வியாழக்கிழமை கல்முனை, களுவாஞ்சிக்குடி பகுதியிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாக எமது மட்டக்களப்பு நிருபர் அறிவித்துள்ளார்.

★ இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து

# ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களை திருப்பித்தருமாறு கேட்டுள்ளோம்

## "ஈரோஸ்" பாலகுமார் பேட்டி

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களை திருப்பித்தருமாறு ஈரோஸ் இயக்கம் இந்திய அமைதிப்படையிடம் கேட்டுள்ளது. ஒப்பந்தத்தின் பின்னர் ஈரோஸ் இயக்க உறுப்பினர் பலர் கொலை செய்யப்பட்டுள்ளதனாலேயே இக் கோரிக்கையை தான் விடுத்ததாக ஈரோஸ் இயக்க நிறைவேற்றுச் செயலாளர் திரு. வே. பாலகுமார் நேற்று நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

இலங்கை அரசிடமிருந்து பாரபட்சமான ஆயுத உதவிகளையோ, சட்ட ரீதியற்ற உதவிகளையோ, தாம் பெறவில்லை எனத் தெரிவித்த அவர் இவ்வாறான உதவிகளை தாம் எதிர்பார்க்கவில்லையெனவும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்துடன் இரகசிய பேச்சுக்களையோ, உடன்படிக்கைகளையோ செய்யவில்லையெனவும் வெளிப்படையாகவே பேச்சுக்கள் நடந்ததெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

'ஒப்பந்தத்தின் பின்னர் அறுபத்திநான்கு ஈரோஸ் இயக்க உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஸ்ரீலங்கா, இந்தியப்படைகளாலும் மற்றும் இயக்கங்களினாலும் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். கடந்த ஒருமாத காலத்தில் மட்டும் இருபத்திரண்டுபேர் இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் முக்கியமான உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றில் ஒருகொலையாவது உரிமைகோரப்படவோ காரணம் காட்டப்படவோ இல்லை. எல்லாம் மர்மக் கொலைகளாகவே இருந்தன. இதைதடுக்க வேறு வழியில்லாததினாலேயே தற்காப்புக்காக ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை ஏற்பட்டது, இந்நிலையில்தான் பாராளுமன்றம் செல்ல முடிவெடுக்கப்பட்டது.

எமது பாதுகாப்பு தொடர்பாக சமாந்தரமான முறையில் இலங்கை, இந்திய தரப்புக்களுடன் நாம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டோம் இதில் முதலாவதாக, ஒப்பந்தத்திற்கு பிறகு நாம் ஒப்படைத்த ஆயுதங்களை தற்பாதுகாப்பு கருதி திருப்பி ஒப்படைக்குமாறு இந்திய அரசிடம் கேட்டுக் கொண்டோம். அதே போன்று சட்ட ரீதியாக பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி நிருவாகிகளுக்கு பாதுகாப்புக்காக ஆயுதம் தருமாறும் ஜனாதிபதி பிரேமதாஸவிடம் கேட்டோம்.

இதனடிப்படையிலேயே 'ரி-81' தானியங்கி ஆயுதம் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் அவர்களது பாதுகாப்பாளர்களினதும் பெயர்களில் சட்டரீதியாக வழங்கப்பட்டது.

எமக்கு விடுதலைப் புலிகளுடன் நெருக்கமான உறவு இருந்ததால்தான் இவை வழங்கப்பட்டதென்பதை நாம் மறுக்கின்றோம். பாரபட்சம் காட்டப்பட்டிருந்தால் அதனையும் நாம் எதிர்க்கின்றோம். இந்த ஆயுதங்கள் எமக்கு வழங்கப்பட்டுள்ளமை பற்றி இந்திய படைக்கும் தகவல் கொடுத்துள்ளோம்' எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றம் சென்றது பற்றி அவர் குறிப்பிடுகையில் 'தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை சொல்வதற்கு மட்டுமே இதைப் பயன்படுத்துவோம், தேவை இருந்தால் மட்டுமே விவாதங்களில் கலந்துகொண்டு பேசுவோம். பாராளுமன்றத்தில் அரசுடனோ எதிர்க்கட்சிகளுடனோ இணையாமல் தனிக்குழுவாக இயங்குவோம்' எனவும் திரு. பாலகுமார் இந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

## உமாவின் மேய்க்காவலரை போலிஸார் தேடி வருகின்றனர்

புளொட் தலைவர் திரு. உமா மகேஸ்வரன் கொலை தொடர்பாக அவரது முன்னாள் மெய்ப் பாதுகாப்பாளர் ஒருவரை பொலிஸார் தேடுகிறார்கள்.

இந்த நபர் பற்றிய விபரங்களை வெளியிட மறுத்த பொலிஸார் இதுபற்றி அநாமதேய தகவல் கிடைத்துள்ளதாகவும் விரைவில் கொலையாளியை கண்டுபிடிக்கலாம் எனவும் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தற்போது பம்பலப்பிட்டியில் உள்ள பெண் ஒருவரும் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பாக். வெளியுறவு அமைச்சர் நேற்று இங்குவந்து பேசினார்

நேற்று இங்குவந்த பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் யாஹூப்கான் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ, வெளிவிவகார, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண ஆகியோரைச் சந்தித்து பேசினார்.

எதிர்வரும் நவம்பரில் 'சார்க்' மாநாடு கொழும்பில் நடைபெறுவது. இலங்கையின் சார்க் பகிஷ்கரிப்புக்கு உரிய காரணம் என்பன இப்பேச்சுவார்த்தையில் இடம்பெற்றன.

## இவ்வாண்டு மகாபொல 34 ஆயிரம் புலமைப்பரிசில்கள்

இந்த ஆண்டு தெரிவு செய்யப்பட்ட பட்டதாரி மாணவர்களுக்காக முப்பத்தி நாலாயிரம் மகாபொல புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இதுவரை புலமைப்பரிசில் பெற்றுக்கொள்ள சம்மதக் கடிதம் அனுப்பாத மாணவர்கள், உடனடியாக அவற்றை அனுப்பிவைக்க வேண்டும் என புலமைப்பரிசில் நிதிய செயலாளர் அறிவித்துள்ளார்.

பண்டாரவளையில் நடைபெறவுள்ள ஒன்பதாவது மகாபொல கொண்டாட்டத்தில் இப்புலமைப்பரிசில் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## டென்மார்க்கில் தமிழர் உண்ணாவிரதம்

இலங்கையில் இருந்து இந்திய அமைதிப்படை வெளியேற வேண்டும் என்று கோரி டென்மார்க் பாராளுமன்றத்தின் முன்னால் பதினைந்து தமிழர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை விதித்துள்ள அமைதிப்படை வெளியேற்றம் தொடர்பான 'காலக்கெடு'வான ஜூலை 29-ம் திகதிவரை தமது உண்ணாவிரதப்போராட்டம் நடைபெறுமென அவர்கள் அறிவித்துள்ளனர்.

## உதவி ஆசிரிய வெற்றிடவிபரம் இதுவரை வெளியிடப்பட வில்லை

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் உதவி ஆசிரியர் தெரிவுக்கான ஆசிரிய வெற்றிடங்கள் பற்றிய விபரம் இதுவரை வெளியிடப்படவில்லை. இவ் வெற்றிட விபரங்கள் கொழும்பில் இருந்தே வெளியிடப்படவுள்ளது.

எதிர்வரும் 25-ம்,26-ம்திகதிகளில் இது வெளிவரும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

விண்ணப்பதாரர்கள் ஆசிரிய வெற்றிட விபரங்களை அவ்வப்பகுதி உதவி அரசாங்க அலுவலகங்களிலும் பிரதேசக் கல்வி அலுவலகங்களிலும் பெறுமாறு ஏற்கனவே அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

## [illegible]ச் செய்திகள்

### வைத்திய நிபுணர் தாக்கப்பட்டார்

வைத்திய நிபுணர் ஒருவர் தாக்கப்பட்டதை தொடர்ந்து கம்பஹா பொது வைத்திய சாலையின் வைத்தியர்களும் தாதிமார்களும் வெளிநடப்புச் செய்துள்ளனர்.

இதுபற்றி நடவடிக்கை எடுப்பதாக சுகாதார அமைச்சர் ரேணுகா ஹேரத் உறுதி அளித்துள்ளார்.

### மிதிவெடியில் அகப்பட்ட சிறுவன்

கிளிநொச்சியின் திருநகர்ப் பகுதியில் விளையாடிக்கொண்டிருந்த ச. யசோதரன் (5) என்ற சிறுவன் அவ்விடத்தில் புதையுண்டு கிடந்த மிதிவெடி வெடித்ததால் காயமடைந்துள்ளார்.

ஒரு கால் பலத்த சேதத்திற்குள்ளாகிய நிலையில் தற்போது யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### அவசரகால சட்டம் நிறைவேறியது

அவசரகால சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிப்பதற்கான தீர்மானம் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

இச் சட்ட மூலத்திற்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 65 வாக்குகளும் கிடைத்தன.

### குமரிஅனந்தன் பாதயாத்திரை

தமிழ்நாடு சட்டப்பேரவை இந்திரா காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் தலைமையில் மௌன யாத்திரை ஒன்று கூட்டணித் தலைவர்களான திரு. அமிர்தலிங்கம், திரு. யோகேஸ்வரன் புளொட் தலைவர் திரு. உமாமகேஸ்வரன் ஆகியோரது கொலைகளை கண்டித்து நடைபெற்றது.

### வழக்கு தள்ளுபடி

(பாரிஸ்)

சல்மான் ருஷ்டியின் சாத்தானின் வசனங்கள் என்ற நூல் பிரான்சில் வெளியிடப்பட்டு பரபரப்பாக விற்பனையாகி வருகின்றது. இப்புத்தகத்தை தடை செய்வதோடு, விற்பனையான பிரதிகளை பறிமுதல் செய்ய வேண்டும் என முஸ்லிம் குழுக்கள் தாக்கல் செய்த வழக்கை பாரிஸ் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

### முகாம்கள் மூடப்பட்டன

வல்லிபுரம்,நவிண்டில் ஆகிய இடங்களில் இருந்த அமைதிப்படை முகாம்கள் மூடப்பட்டுள்ளன. பாரிய செயின் புளக்குகளும் ஏனைய ராணுவ வாகனங்களும் தொடராக அவ்விடத்தை விட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

★ ஜனாதிபதியின் உத்தரவில் அம்பாறை அரச அதிபர் இடமாற்றம்

# கிங்குரான பகுதியில் சிங்களவர் குடியேற்றம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பகுதிகளில் அண்மையில் அத்துமீறி குடியேறிய சிங்களவருக்கு காணி உத்தரவு பத்திரம் (பெமிற்) வழங்க மறுத்து வரும் அரசாங்க அதிபர் சி. எம். நந்தசேன இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் நடமாடும் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவுக்கு சிங்கள மக்கள் இது பற்றிபுகார் செய்ததையடுத்து உடனடியாக திரு. நந்தசேனவை இடமாற்றம் செய்ய ஜனாதிபதி உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டத்தில் சிங்கள குடியேற்றத்துக்கு தடையாக இருந்தமைக்காகவே இந்த இடமாற்றம் செய்யப்பட்டதாக தெரிய வருகிறது. இவரின் இடத்திற்கு அம்பாறை மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத் திட்டத்தின் சூத்திரதாரிகளில் ஒருவராக திகழும் காணிஉதவிஆணையாளர் திரு. தகநாயக்கா அம்பாறை அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்திடீர் இடமாற்றமும் புதிய அரசாங்க அதிபர் நியமனமும் அம்பாறை மாவட்ட தமிழர், முஸ்லிம்மக்கள் இடையே சந்தேகத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. இங்குரான சீனித் தொழிற்சாலை விஸ்தரிப்புக்கென தமிழ், முஸ்லிம் மக்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு அவர்களுக்கு பேமிற் வழங்கப்படுவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 23-07-89 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.